# இலங்கையில் தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், தன்பாலீர்ப்புள்ள பெண்கள், இருபாலீர்ப்புடையோர், திருநர், பால்புதுமையர் மற்றும் இடைஇலிங்கத்தவர் சமூகம் குறித்த ஆய்வு மற்றும் தற்காலத்துக்கான துணைவலிமை சேர்த்தல்

Women and Media Collective
Established 1984

Norwegian Embassy
*Colombo*

**இலங்கையில் தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், தன்பாலீர்ப்புள்ள பெண்கள், இருபாலீர்ப்புடையோர், திருநர், பால்புதுமையர் மற்றும் இடைஇலிங்கத்தவர் சமூகம் குறித்த ஆய்வு மற்றும் தற்காலத்துக்கான துணைவலிமை சேர்த்தல்.**


மே மாதம் 2021

எழுதியவர்: பசன் ஜயசிங்க
மீளாய்வு: துஷார மனோஜ் மற்றும் ராதிகா குணரத்ன
மொழிபெயர்ப்பு: பிரிஸ்கிலா அருள்பிரகாசம்
வடிவமைப்பு: பிரியதர்ஷினி இராசையா
உதவி வழங்கிய நிறுவனம்: ரோயல் நோர்வீஜியன் தூதரகம்

Norwegian Embassy
*Colombo*

வெளியீடு:

Women and Media Collective
Established 1984

**பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு**
56/1, சரசவி ஒழுங்கை, காசல் வீதி,
கொழும்பு 08, இலங்கை

மின்னஞ்சல்: wmcsrilanka@womenandmedia.org
இணையதளம்: womenandmedia.org
முகநூல்: https://www.facebook.com/womenandmediacollective

## சுருக்க குறியீடுகளுக்கான விளக்கம்

| | |
|---|---|
| CEDAW | பெண்களுக்கெதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான குழு |
| CESCR | பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான குழு |
| CRC | சிறுவர் உரிமைகளுக்கான குழு |
| CSO | சிவில் சமூக அமைப்புக்கள் |
| GRC | பால்நிலை அங்கீகாரச் சான்றிதழ் |
| HIV/AIDS | மனித நோயெதிர்ப்பு குறைப்பாட்டு வைரஸ்/ பெற்றுக்கொண்ட நோயெதிர்ப்பு குறைப்பாட்டு நோய்நிலை |
| HRComm | ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு |
| HRCSL | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| ICCPR | சர்வ்தேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சாசனம் |
| ICESR | சர்வதேச கலாச்சார, பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் சாசனம் |
| LGBTQI+ | தன்பாலீர்ப்புடைய பெண்கள், தன்பாலீர்ப்புடைய ஆண்கள், இருபாலீர்ப்புடையோர், திருநர், பால்ப்புதுமையினர், இடைஇலிங்கத்தவர் மற்றும் வேறு |
| MSM | ஆண்களுடன் பாலியல் உறவு கொள்ளும் ஆண்கள் |
| NGO | அரச சார்பற்ற நிறுவனம் |
| NHRAP | மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான மற்றும் மேம்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு திட்டம் |
| NSACP | தேசிய பாலியல் தொற்றுக்கள் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம் |
| PLHIV | எச்.ஐ.வியுடன் வாழும் நபர்கள் |
| SOGI | பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் |
| UN | ஐக்கிய நாடுகளின் நிறுவனம் |
| UNHRC | ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை |
| UPR | சர்வதேச தவணை வாரியான மீளாய்வு |

குறிப்பு: ஏதேனும் ஒரு குறிப்பிட்ட குழுவை குறிப்பிடும் போதும் LGBTQI+ அடையாளங்களின் ஒரு அடையாளத்தை குறிப்பிடும் சந்தர்ப்பங்களை தவிர்ந்த மற்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்த ஆய்வுத்தால் LGBTQI+ எனும் சுருக்கத்தை பயன்படுத்தும்.

# இலங்கையில் தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், தன்பாலீர்ப்புள்ள பெண்கள், இருபாலீர்ப்புடையோர், திருநர், பால்புதுமையர் மற்றும் இடைஇலிங்கத்தவர் சமூகம் குறித்த ஆய்வு மற்றும் தற்காலத்துக்கான துணைவலிமை சேர்த்தல்.

இந்த ஆய்வறிக்கை, இலங்கையில் தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், தன்பாலீர்ப்புள்ள பெண்கள், இருபாலீர்ப்புடையோர், திருநர், பால்புதுமையர், இடைஇலிங்கத்தவர் மற்றும் பிற (LGBTIQ) சமூகத்தின் சமகால துணைவலிமை சேர்த்தல் மற்றும் ஆய்வினது கண்ணோட்டத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆய்வறிக்கையின் முதல் பகுதி உள்நாட்டு மற்றும் சர்வதேச (பன்னாட்டு) மட்டங்களில் நோக்கப்பட்ட பாலின சிறுபான்மையினர் தொடர்பான துணைவலிமை சேர்த்தல் மற்றும் அது குறித்து எழுப்பப்பட்ட சிக்கல்களினை அடையாளம் கண்டு இவற்றின் விளைவாக நிறுவனங்களில் ஏற்படும் விளைவுகள் யாவை? மற்றும் இவற்றிற்கான அரசாங்கத்தின் எதிர்வனைகள் யாவை என்பவற்றை மையப்படுத்தியுள்ளது. இந்த ஆய்வறிக்கையின் இரண்டாம் பகுதி இலங்கையில் உள்ள LGBTIQ சமூகத்தின் சிக்கல்கள் பற்றிய ஆய்வு, கல்வி மற்றும் கல்விசாரா விசாரணை, அத்துடன் உள்ளூர் மற்றும் பன்னாட்டு வெளியீடுகளை ஆய்வு செய்வது மற்றும் ஆய்வினது பரந்த கருப்பொருள்கொண்ட பகுதிகளை அடையாளம் காண்பது ஆகியவற்றை அலசுகிறது.

2005-2020 வரையிலான கடந்த 15 ஆண்டுகளில் இருந்து துணைவலிமை சேர்த்தல் மற்றும் ஆய்வுகளை இந்த ஆய்வறிக்கை கருத்தில் கொள்கிறது, மேலும் இலங்கையில் LGBTIQ துணைவலிமை சேர்த்தல் மற்றும் ஆராய்ச்சியின் நிகழ்கால சித்தரிப்பு என்பவற்றை வெளிப்படுத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த காலகட்டம் 2009 ஆம் ஆண்டில் ஆயுதமேந்திய இனமோதலின் முடிவு, அத்துடன் 2005-2015 மஹிந்த ராஜபகச் சுதந்திர முன்னணி மற்றும் 2015-2019 மைத்திரிபால சிறிசேன/நல்லாட்சி அரசாங்கங்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதான காலப்பகுதியின் விளைவுசார் நிகழ்வுகளாக உள்ளன. இந்த உருவாக்கங்கள், குறிப்பாக அரசியல் நிர்வாகத்தில் மாற்றம், LGBTIQ துணைவலிமை சேர்த்தல் மற்றும் ஆராய்ச்சியில் குறிப்பிடத்தக்க விளைவை ஏற்படுத்தியதை நோக்கக்கூடியதாக உள்ளது.

இந்த ஆய்வுப்பத்திரிக்கை ஆங்கில மொழியில் வெளியிடப்பட்ட ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளை மட்டுமே கருத்தில் கொண்டுள்ளது, தமிழ் மற்றும் சிங்கள மொழியில் வெளியிடப்பட்டவை இதில் உள்வாங்கப்படவில்லை, இது இந்த ஆய்வில் காணப்படும் ஒரு குறைபாடாகும். இலங்கையில் டுபுடீவுஞஐ சமூகத்தினர் ஆய்வுகள் மூலம் துணைவலிமை சேர்த்தல் செயற்பாடுகள் கணிசமான அளவு இந்த ஆய்வில் சேர்க்கப்பட்டுள்ளன ஏனெனில் அதிகமான இவ்வாறான செயற்பாடுகள் ஆங்கிலத்தில் காணப்படுகின்றன. எனினும் இது முழுமையானதல்ல.

# துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகள்

## உள்நாட்டு துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகள்

உள்நாட்டு மட்டத்தில் LGBTQI+ சமூகத்துக்கான துணைவலிமை சேர்த்தல் ஒரு வழக்கமான முறையான செயல்முறை மூலமும் - மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான தேசிய செயல் திட்டங்களை வரைதல் (NHRAPs)- இரண்டு ஒழுங்கற்ற முறையான செயல்முறைகள் மூலமும் - 2015-2019 அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறை மற்றும் 2015 இல் சமரச வழிமுறைகள் பற்றிய ஆலோசனை பணிக்குழு (CTF) காணலாம். இந்த முறையான செயல்முறைகளுக்கு வெளியே, பல முறைசாரா வாதிடும் முயற்சிகளும் உள்ளன. அவற்றின் முறைசாரா இயல்பு மற்றும் அதன் விளைவாக ஒப்பீட்டளவில் ஆவணங்கள் இல்லாததால் அவர்கள் அனைவரையும் இங்கே எடுத்துக்காட்ட முடியாது என்றாலும், மிகவும் குறிப்பிடத்தக்க முயற்சிகளை விவரிக்க ஒரு முயற்சி செய்யப்படுகிறது.

## மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான தேசிய செயல் திட்டங்கள் (NHRAP)

2011-2016 ஆம் ஆண்டுக்கான தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் 2010 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதில் பங்களிக்க சிவில் சமூக அமைப்புகள் அழைக்கப்பட்டிருப்பினும், LGBTQI+ அமைப்புக்கள் எதுவும் பங்கேற்க அழைக்கப்படவில்லை.[1] தேசிய மனித உரிமைகள் நடவடிக்கையின் முன்மொழியப்பட்ட முதல் மற்றும் இரண்டாவது வரைவுகளில் சிவில் சமூகத்தில் பங்கேற்றவர்கள் எடுத்துவைத்த கருத்துகளின்படி ஓரினச்சேர்க்கையை குற்றவியல் குற்றமற்றதாக்குவதற்கான ஒரு விதியும் அடங்கும், இருப்பினும், அது ஜனாதிபதி ராஜபக்சவினால் இறுதி வரைவில் இருந்து நீக்கப்பட்டது.[2] 2011-2016 ஆம் ஆண்டுக்கான தேசிய மனித உரிமை ஆணையத்தின் இறுதிவரைவில் LGBTQI+ குறிப்பிட்ட விதிகள் எதுவும் இல்லை.

2017-2021 ஆம் ஆண்டுக்கான தேசிய மனித உரிமைகள் செயற்திட்ட பணிவரைவை உருவாக்குவதற்கு 2016 ஆம் ஆண்டில் அடுத்தடுத்து வந்த அரசு ஒரு விரிவான செயல்முறையைத் தொடங்கியது. மனித உரிமைகள் தொடர்பான அமைச்சுகளுக்கிடையிலான குழு நியமிக்கப்பட்டது, இது சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் முன்நிலை அதிகாரிகளைக் கொண்ட ஒரு வழிநடத்தல் குழுவை நிறுவியது, பின்னர் தொடர்புடைய அரசாங்க முகவர் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் கல்விநிறுவனங்களின் நிபுணர்களைக் கொண்ட பல்வேறு கருப்பொருள் பகுதிகளுக்கு வரைவுக் குழுக்களை நியமித்தது.[3] புதிய தேசிய மனித உரிமைகள் செயற்றிட்ட மேம்பாட்டுப் பணிகள் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களுக்கு இந்தக் குழுக்கள் அழைப்பு விடுத்தன. முந்தைய செயல்முறைக்கு மாறாக, பல LGBTQI+ நிறுவனங்கள் சமர்ப்பிப்புகளை செய்ய முடிந்தது. தேசிய மனித உரிமைகள் செயல் திட்ட ஆரம்ப வரைவில், தண்டனைச் சட்டத்தின் 365 மற்றும் 365ஏ பிரிவுகளை நீக்குவதற்கான உறுதிப்பாடு மற்றும் பாலியல் ஈர்ப்பு அல்லது பாலின அடையாளத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதை வெளிப்படையாகத் தடை செய்ய அரசியலமைப்பின் 12வது பிரிவை விரிவுபடுத்துதல் ஆகியவை அடங்கும்.[4]

இருப்பினும், NHRAP செயல்முறை வெகுவாக அரசியலாக்கப்பட்டது. அமைச்சரவைக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் சில ஏற்பாடுகள் நீக்கப்பட்டு வெளியுறவு அமைச்சரால் NHRAP வரைவு திருத்தப்பட்டது. அமைச்சரவையில் சில அமைச்சர்களின் கடுமையான எதிர்ப்பு, தண்டனைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான பரிந்துரைகளை முற்றிலுமாக கைவிடச் செய்தது.[5] அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட NHRAP பொது சிவில் சமூகத்திடமிருந்து மேலும் எந்த ஆலோசனையையும் பெறவில்லை.[6]

---

1 Equal Ground, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் தவணை வாரியான இலங்கைக்கான மீளாய்வில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், மார்ச் 2012, https://lib.ohchr.org/HRBodies/UPR/Documents/Session14/LK/JS2_UPR_LKA_S14_2012_JointSubmission2_E.pdf, பக்கம் 3.

2 Sunday Times, "கபே ஸ்பெக்டேடர் உரை", செப்டெம்பர் 11, 2011, http://www.sundaytimes.lk/110911/Columns/cafe.html

3 வெளிவிவகார அமைச்சு, "மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்துவதற்கான தேசிய செயற்திட்டம் (2017-2021)', https://www.mfa.gov.lk/ta/6587-the-national-action-plan-for-the-protection-and-promotion-of-human-rights-2017-2021/

4 தவணை வாரியான மீளாய்விற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு - இலங்கை (பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம்), இலங்கையின் 3வது தவணை வாரியான மீளாய்விற்கான இணைந்து சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், 2017, https://ilga.org/downloads/stakeholders_report_SriLanka_UPR28.pdf, பந்தி 32.

5 இலங்கை குறித்த சுருக்கம், "இலங்கை - தேசிய மனித உரிமை செயற்திட்டம் 2016-2021: பின்பற்றப்பட்ட முறைமை மற்றும் நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்தல்", பெப்ரவரி 04, 2017, https://srilankabrief.org/2017/02/sri-lanka-national-hr-action-plan-2016-2021-inclusive-nature-and-integrity-of-the-process-questioned

6 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

2017-2021 ஆம் ஆண்டுக்கான இறுதி NHRAP செயல் திட்டம் பாலின அடையாளத்தை (ஆனால் பாலீர்ப்பு அல்ல) அரசியலமைப்பில் பாகுபாடற்ற நிலையை விரிவுபடுத்துவதற்கான பரிந்துரையைச் சேர்க்கவும்: அரசியலமைப்பில் தனியுரிமைக்கான உரிமையை மீளாய்வு செய்து திருத்துதல் மற்றும் ஒருவரின் உணரப்பட்ட அல்லது உண்மையான பாலீர்ப்பு[7] அடிப்படையில் சுகாதார அமைப்பில் பாகுபாட்டு நடைமுறைகளை அகற்றுவதையும் உள்ளடக்கியது. குறிப்பாக 365 மற்றும் 365அ பிரிவுகளை நீக்குவதற்கான பரிந்துரைக்கு பதிலாக, 'தண்டனைச் சட்டம் சர்வதேச(பன்னாட்டு) மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கும், தேவையான இடங்களில் சட்டங்களை இயற்றுவதற்கும்'[8] என ஒரு தெளிவற்ற பரிந்துரை உள்ளது. தேசிய மனித உரிமைகள் செயல் திட்ட இறுதி வரைவு ஆலோசனை செயல்முறை மற்றும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் என்பவற்றின் அடிப்படையில் ஒரு பெரிய ஏமாற்றாக இருந்தது.

## *அரசியலமைப்பு சீர்திருத்தம்*

2015 ஆம் ஆண்டில், இலங்கைக்கான புதிய அரசியலமைப்பை வரைவதற்கான ஒரு செயல்முறையை அரசாங்கம் தொடங்கியது. அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான பொதுமக்கள் பிரதிநிதி சபையை (PRC) ஸ்தாபித்ததன் மூலம் இந்த செயல்முறை ஆரம்பிக்கப்பட்டது. அடிப்படை உரிமைகள் மீதான பாராளுமன்ற உப குழு, பொதுமக்கள் பிரதிநிதி சபையின் (PRC) அறிக்கையை மதிப்பாய்வு செய்து, புதிய அரசியலமைப்பு குறித்த தனது சொந்த முன்மொழிவுகளை அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்ற இயக்கக் குழுவிற்கு அளிக்கும். பின்னர் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்ற இயக்கக் குழு இறுதி அரசியலமைப்பு வரைவை அரசியலமைப்பு பேரவைக்கு (பாராளுமன்றம் தன்னை மீள பிரஸ்தாபித்து/ஏற்படுத்திக் கொண்டுள்ளது) அதன் ஒப்புதலுக்காக வழங்கும்.[9]

PRC செயற்பாட்டின் போது, பல LGBTQI+ அமைப்புகளும் தனிநபர்களும், புதிய அரசியலமைப்பின் சமத்துவம் மற்றும் பாகுபாடுக்கு எதிரான ஏற்பாடுகளில் பாலியல் ஈர்புநி மற்றும் பால்நிலை அடையாளத்தை வெளிப்படையாக சேர்க்குமாறு வலியுறுத்தி தங்களுடைய சமர்ப்பிப்புகளை வழங்கி இருந்தனர்.[10] 2015 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 19ம் திருத்தச் சட்டம் மூலம் ஒரு சுயாதீன ஆணைக்குழுவாக புதிதாக புனரமைக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் (HRCSL), உத்தேச அரசியலமைப்பில் பாலியல் அடையாளத்தினை பரந்தளவில் வெளிப்படுத்தவும், பாகுபாடுக்கு எதிரான வலுவான ஒரு பிரிவை/ஏற்பாட்டை உள்ளடக்கியதாக அதன் முன்மொழிவுகளை முன்வைத்தது.[11]

இந்த சமர்ப்பிப்புகள் மே 2016 இல் வெளியிடப்பட்ட பொதுமக்கள் பிரதிநிதி சபையின் அறிக்கையில் கணிசமாக பிரதிபலித்திருந்தன. குறித்த அறிக்கை பாலியல் ஈர்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாட்டுக்கு உட்படுத்துவது வெளிப்படையாக தடைசெய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.[12] அந்தரங்கத்திற்கான உரிமை, சுதந்திரமான வெளிப்பாடு மற்றும் இணைந்து செயற்படல், குடும்ப வாழ்க்கை, நியாயமான வழக்கு விசாரணை, வேலை, சமூக பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றுக்கு LGBTIQI+ தனிநபர்களுக்கு சம உரிமைகளை உத்தரவாதம் செய்வதன் முக்கியத்துவத்தையும் இது குறிப்பிட்டுள்ளது.[13] அத்துடன் வயது வந்தவர்களுக்கு இடையிலான சம்மதத்துடன் கூடிய தன்பாலீர்ப்புள்ள பாலியல் நடத்தையை குற்றமற்றதாக ஆக்குதல் மற்றும் அலைந்து திரிவோர் கட்டளை சட்டத்தில் திருத்தம் என்பவற்றையும் பொதுமக்கள் பிரதிநிதி சபை அறிக்கை கோரியது.[14]

மிகவும் பரந்த அளவில், பொதுமக்கள் பிரதிநிதி சபை இவ்வாறு வாதிட்டது:

> *இந்த வாதம் சிறப்புப் பாதுகாப்பை வேண்டி அல்ல, மாறாக சட்டத்தின் கீழ் பாதுகாப்பிற்கான சம உரிமைகள் மற்றும் பாகுபாடு இல்லாமைக்கான உரிமைகானது ஆகும்..*[15]

7 இலங்கை அரசின், "மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்துவதற்கான தேசிய செயற்திட்டம 2017-2021, rptpy; kw;Wk; அரசியல் உரிமைகள், பந்திகள் 3.1.1, 3.1.2 & 6.1.1. பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள், பந்திகள் 6.6.4.

8 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., பந்தி 6.1.8.

9 இலங்கையின் அரசியலமைப்புச் சபை, "முறைமை", http://english.constitutionalassembly.lk/index.php?option=com_sppagebuilder&view=page&id=13

10 Groundviews. சமத்துவத்திற்கான மற்றும் பாரபட்சமின்மைக்கான அர்த்தமுள்ள உரிமை: பாலியல் மற்றும் பால்நிலை அடையாளங்களை அங்கீகரித்தல், Groundviews, மார்ச் 28, 2016, http://groundviews.org/2016/03/28/a-meaningful-right-to-equality-and-non-discrimination-recognising-sexual-and-gender-identities

11 இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான பரிந்துரைகள், 2017, pp. II-III, http://www.hrcsl.lk/wp-content/uploads/2020/01/Report_to_ESCR_Committee-2017-by-HRCSL.pdf

12 அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான பொதுமக்கள் பிரதிநிதித்துவ குழு, அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான பொதுமக்கள் பிரதிநிதித்துவ குழு அறிக்கை, மே 10, 2016, பக்கம். 95.

13 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 113-4.

14 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 114.

15 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 112.

ஜூன் 2016 இல், பல LGBTQI+ அமைப்புகள் பொதுமக்கள் பிரதிநிதி சபையின் அறிக்கை தொடர்பில் அடிப்படை உரிமைகள் மீதான பாராளுமன்ற உப குழு முன்பாகப் பேசின. இது போன்ற அமைப்புகள் பாராளுமன்றத்தில் பேச அழைக்கப்படுவது இதுவே முதல் முறை.[16]

பாலியல் ஈர்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாட்டுக்கு உட்படுத்துவதை அரசியலமைப்பு தடைசெய்கிறது என்ற பரிந்துரையைத் தவிர்த்து அதனை சிறுவர்களுக்கான உரிமையாக விரிவுபடுத்தியத்துடன்[17] அனைத்து சட்டங்களுக்கும் சட்ட அமுலாக்கத்தின் பின்னரான நீதித்துறை மீளாய்வை செயல்படுத்துவதன் மூலம் பாராளுமன்ற இயக்கக் குழுவிற்கு அடிப்படை உரிமைகள் மீதான உப குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நவம்பர் 2016க்கான அறிக்கை, பொதுமக்கள் பிரதிநிதி சபையின் அறிக்கையில் கூறப்பட்ட கிட்டத்தட்ட அனைத்து விரிவான பரிந்துரைகளையும் தவிர்த்துவிட்டது. அதன் பின்னர் அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறை நீடித்தது, பாராளுமன்ற இயக்கக்குழு அதன் இடைக்கால அறிக்கையை தயாரிக்க ஒரு வருடத்திற்கும் மேலாக எடுத்தது. அரசியலமைப்பின் வரைவு ஒன்று 2019 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பகிரங்கப்படுத்தப்பட்டது. மேலும் இது உப குழுவின் பாலியல் ஈர்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றின் அடிப்படையில் இடம்பெறும் பாகுபாட்டுக்கு எதிரான சரத்தையும்/பிரிவையும் உள்ளடக்கியிருந்தது.[18] இருப்பினும், இந்த கட்டத்தில் அரசியாமைப்பு சீர்திருத்த செயல்முறை அனைத்தும் நிறுத்தப்பட்டது. தற்போதைய அரசாங்கம் இச் செயல்முறையை முன்னெடுத்து செல்லும் என்பதற்கு பெரும்பாலும் சாத்தியமில்லை.

## *நல்லிணக்க பொறிமுறைகள் மீதான ஆலோசனை பணிக்குழு*

ஆயுத இன மோதலைத் தொடர்ந்து நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கென முன்மொழியப்பட்ட பொறிமுறைகள் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை சேகரிப்பதற்காக, ஜனவரி 2016 இல், நல்லிணக்க பொறிமுறைகள் மீதான ஆலோசனை பணிக்குழுவை (CTF) அரசாங்கம் நிறுவியது. இதற்கு LGBTIQI+ தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் கூட்டமைப்பு ஒரு விரிவான சமர்ப்பிப்பைச் செய்தது.[19]

2016 ஆம் ஆண்டின் இறுதியில் வெளியிடப்பட்ட ஊவுகு இன் இறுதி அறிக்கை, எந்தவொரு நிலைமாறுகால நீதி பொறிமுறைகளையும் வடிவமைத்து செயல்படுத்துவதில் LGBTIQI+ சமூகத்தை சேர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு குறிப்பாக LGBTIQI+ தனிநபர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் பாதித்த விடயங்களை சுட்டிக்காட்டியது:[20]

> *அலுவலகங்கள், செயல்முறைகளின் வடிவமைப்பு மற்றும் செயலாக்கம் ஆகிய இரண்டிலும், நியமனங்களை ஆய்வு செய்யும் போது பால்நிலை அடிப்படையிலான வன்முறையில் ஈடுபடுவோர் சேர்க்கப்படவில்லை என்பதை உறுதி செய்வதோடு 'பாரம்பரிய குடும்பம்' எனும் கருத்துக்களின் அடிப்படையில் விலக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல் உள்ளடங்கலாக, LGBTIQ நபர்களது அக்கறைகளும் உள்வாங்கப்பட வேண்டும் . … இத்தகைய பொறிமுறைகளுக்குள் பணிபுரியும் அதிகாரிகள் மாறுபட்ட பால்நிலை வெளிப்பாடுகள் மற்றும் பாலியல் ஈர்புநிகளைக் கொண்ட நபர்களிடம் பாகுபாடற்ற அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.*[21]

> *'உறவினர்' என்ற வார்த்தையின் வரைவிலக்கணம் திருமணமான வாழ்க்கைத் துணையை அல்லது இரத்த உறவினர்களை மட்டுமே குறிப்பதனால், LGBTIQ வாழ்க்கை துணைகள் நிவாரணம் பெறுவதை கட்டுப்படுத்துகிறது. எனவே, இழப்பீடு வழங்கும் போது குடும்பத்துக்கான பாரம்பரிய வரையறைகளின் கீழ் வருபவர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் பாரம்பரிய குடும்ப கட்டமைப்பு அற்றவர்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.*[22]

---

16 சர்வதேச தவணை வாரியான மீளாய்விற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு - இலங்கை (பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம்), இலங்கையின் 3வது தவணை வாரியான மீளாய்வின் போது இணைந்து சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், 2017, https://ilga.org/downloads/stakeholders_report_SriLanka_UPR28.pdf, பந்தி 39.

17 இலங்கையின் அரசியலமைப்பு சபை, அடிப்படை உரிமைகள் உபகுழுவின் அறிக்கை, நவம்பர் 2016, pp. 4, 13 & 16-7.

18 இலங்கையின் அரசியலமைப்பு சபை, "ஜனவரி 11 2019ல் அரசியலமைப்பு சபையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள்", https://english.constitutionalassembly.lk/media-centre/press-releases/152-documents-tabled-at-the-constitutional-assembly-on-11-january-2019

19 Groundviews. தன்பாலீர்ப்புடையோர், இருபாலீர்ப்புடையோர், திருநர், இடைஇலிங்கத்தவர் மற்றும் பால்புதுமையர் மற்றும் நிலைமாற்றத்திற்கான நீதிப் பொறிமுறைகள் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், Groundviews, ஆகஸ்ட் 25, 2016, http://groundviews.org/2016/08/25/submission-on-lgbtiq-persons-and-transitional-justice-mechanisms

20 நல்லிணக்க பொறிமுறைகள் குறித்த ஆலோசனை பணிக்குழு, நல்லிணக்க பொறிமுறைகள் குறித்த ஆலோசனை பணிக்குழுவின் இறுதி அறிக்கை, முதலாம் தொகுப்பு, 17 நவம்பர் 2016, available at http://war-victims-map.org/wp-content/uploads/2017/02/CTF-Final-Report-Volume-I-Nov-16.pdf, pp. 55 & 89, and 354-55.

21 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., para 207, p. 355.

22 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., para 88, p. 55.

> *LGBTIQ என அடையாளம் காணும் நபர்களின் தேவைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்புகள், அவர்கள் பாகுபாடு மற்றும் ஏளனத்துக்கு உட்படாமல் இழப்பீட்டுக்காக விண்ணப்பம் செய்ய அனுமதிக்கும் ஒரு செயல்முறைக்கு அழைப்பு விடுத்துள்ளன.*[23]

நல்லிணக்க பொறிமுறைகள் மீதான ஆலோசனை பணிக்குழு செயல்முறை இறுதியில் அரசாங்கத்தால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது அதன் அறிக்கையை வெளியிடுவதில் ஜனாதிபதியும் பிரதமரும் கலந்து கொள்ளவில்லை, பின்னர் மூத்த அமைச்சர்கள் அதைத் தாக்கிப் பேசினர்.[24] வாக்குறுதியளிக்கப்பட்ட நான்கு பொறிமுறைகளில் ஒன்று (காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம்) மட்டும் தாபிக்கப்பட்ட நிலையில், நிலைமாறுகால நீதித் திட்டம் கிட்டத்தட்ட கிடப்பில் போடப்பட்டு எவ்விதத்திலும் முன் நோக்கி நகராத ஒரு நிலைக்கு வந்தது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் (மூஆீ) இன முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட LGBTIQI+ நபர்கள் தொடர்பில் இன்றுவரை குறிப்பிடத்தக்க வகையில் எந்தவொரு அறிக்கைகளையோ அல்லது விதிகளையோ வெளியிடவில்லை. புதிய அரசாங்கத்தின் கீழ், மீதமுள்ள பொறிமுறைகளோ அல்லது பொதுவாக எந்தவொரு நிலைமாறுகால நீதிக்கான செயல்திட்டமும் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு பெரும்பாலும் சாத்தியமில்லை.

## எச்.ஐ.வி/எய்ட்ஸ் என்பவற்றிற்கான துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகள்

எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பு, சிகிச்சை மற்றும் கல்வி பற்றிய துணைவலிமை சேர்த்தல் என்பது இலங்கை LGBTQI+ அமைப்புகளின் நீண்டகால நாட்டம் ஆகும், மேலும் இது ஆய்வு செய்யப்பட்ட 15 ஆண்டுகளில் விரைந்து தொடர்வதுமாக இருக்கிறது. இந்த வாதிடுதல் ஏனைய வாதிடும் முயற்சிகளினை விட சற்றே தனித்துவமானது, அது ஒப்பீட்டளவில் அரசியலாக்கப்படாமல், ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரச அதிகாரிகளால் பெரிதும் வரவேற்கப்படுவதுமாக உள்ளது. குறிப்பாக, தேசிய பாலியல் நோய் / எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம் (NSACP) தடுப்பு மற்றும் சிகிச்சை உத்திகள் குறித்த எல்.ஜி.பி.டி.சி.ஐ. அமைப்புகளுடன் தொடர்ந்து ஒத்துழைக்கிறது, இதில் கம்பானியன் ஆன் ஜர்னி மற்றும் ஈகுவல் கிரவுண்ட் போன்ற பழைமையான LGBTQI அமைப்புகளுடனான தலையீடுகள், அத்துடன் வரைபடமாக்கல் பயிற்சிகள் மற்றும் கண்காணிப்பு ஆய்வுகள் போன்ற பரந்த ஆய்வு முயற்சிகள் அடங்கும்.இவற்றில் பல இந்த ஆய்வறிக்கையின் ஆய்வுக்கூறு "எச்.ஐ.வி தொடர்பான தலையீடுகள்" பிரிவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த உறவுகள் எல்.ஜி.பி.டி.சி.ஐ. அமைப்புகளான பாசிடிவ் ஹோப்ஸ் அலையன்ஸ் மற்றும் யங் அவுட் ஹியர் ஆகியன 2018-2022 க்கான NSACP யின் தேசிய மூலோபாய திட்டத்தை உருவாக்குவதற்கான வழிநடத்தல் குழுவில் பிரதிநிதித்துவம் பெற உதவின.[25] இறுதி செய்யப்பட்ட திட்டம், அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டம் மற்றும் 365 மற்றும் 365A ஆகிய தண்டனைச் சட்ட பிரிவுகளை "கடுமையான" சட்டங்களாக வெளிப்படையாக அடையாளம் காண்கிறது,[26] இதனால் கவனத்துக்குரிய மக்கள் குழுக்கள் எச்.ஐ.வி/ எஸ்.டி.ஐ சேவைகளை அணுகுவது கடினமாக உள்ளது. தேசிய எய்ட்ஸ் கவுன்சில் மற்றும் அதன் சட்ட மற்றும் நெறிமுறை துணைக்குழுவை மீண்டும் செயல்படுத்துவதன் மூலம், மேற்கூறிய சட்டங்களை "மறுபரிசீலனை செய்வதற்கான துணைவலிமை சேர்க்கும் நடவடிக்கை" எனும் NSACP இனுடைய தீர்மானத்தை இலக்கு வைப்பதற்கான குறிகாட்டியாக இத்திட்டம் அமைகிறது.[27] NSACP மட்டுமே ஓரின சேர்க்கையை அங்கீகரித்ததும் அதனை குற்றவியல் குற்றமற்றதாக்க கோரிக்கையெழுப்பியதுமான ஒரே ஒரு அரச அதிகாரம் கொண்ட அமைப்பாகும்.

## பால்நிலை அங்கீகார சான்றிதழ் செயல்முறை

2015 ஆம் ஆண்டில் மூன்று திருநங்கைகள் அவர்களின் சட்டரீதியான பால்நிலையை மாற்றுவதற்கு பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்ட பின்னர் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து, மனித உரிமைகள் ஆணைக்குழு, LGBTQI+ துணைவலிமை சேர்ப்போர் மற்றும் சுகாதார அமைச்சு மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம்

---

23 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., para 242, p. 89.

24 சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு, எங்கும் செல்லாத இலங்கையின் நிலைமாற்றம், ஆசியாவின் அறிக்கை N°28, Brussels: ICG, 2017, https://d2071andvip0wj.cloudfront.net/286-sri-lanka-s-transition-to-nowhere.pdf, pp. 16-7.

25 தேசிய பாலியல் தொற்றுக்கள் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம், தேசிய எச்.ஐ.வி மற்றும் பாலியல் தொற்றுக்களுக்கான செயல் திட்டம் இலங்கை 2018-2022, கொழும்பு: NSACP, 2017, p. 47.

26 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 22-23.

27 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 40.

உள்ளடங்கிய அரசாங்க பங்குதாரர்களுடன் சட்டரீதியான பால்நிலை அங்கீகாரம் பற்றிய ஒரு உரையாடலிற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது.[28] இதன் விளைவாக, 2016ம் ஆம் ஆண்டில் மாற்றுப்பாலின பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின ஆண்கள் ஆகியோருக்கு பாலின அங்கீகார சான்றிதழ் (ஜி.ஆர்.சி) வழங்குவது குறித்து சுகாதார சேவை பயிற்சியாளர்களுக்கு சுகாதார அமைச்சகம் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது. பதிவாளர் நாயகம் திணைக்களம் ஒரு நபரின் பாலின அங்கீகாரசான்றிதழ் இன் அடிப்படையில் பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்களின் மீதான பால்நிலை் மற்றும் பெயர் விபரங்களை மாற்றுவதற்கு பதிவாளர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய திணைக்களங்களுக்கு இணையான சுற்றறிக்கை ஒன்றை வழங்கியது.[29]

ஜி.ஆர்.சி செயல்முறை மாற்றுப் பாலின ஆண்கள் மற்றும் பெண்கள் "ஹார்மோன் சிகிச்சை" மற்றும் "தேவையான அறுவை சிகிச்சை" என்பவற்றையும் "அவர்கள் பாலின மாற்ற செயல்முறைக்கு உட்பட்டார்" என்பதையும் ஒரு மனநல மருத்துவ நிபுணர் சான்றளிப்பதை உள்ளடக்கியுள்ளது.[30] தேவைக்கேற்ப மனநல மருத்துவர் பாலின மாற்றம் காணும் அந்நபர் பண்பாட்டின் அடிப்படையிலான பாலின பாத்திரத்திற்குரிய மாற்றத்தை" முடித்துவிட்டார் என்றும் சான்றளிக்க வேண்டும்.[31]

ஜி.ஆர்.சி இல் செயல்முறை பல குறைபாடுகள் உள்ளன. மனநல நோயறிதலை கட்டாயமாகியதன் மூலம் இது மருத்துவ, அறுவை சிகிச்சை அல்லது மனநல சிகிச்சை அல்லது நோயறிதல் என்பன சட்டரீதியிலான பால்நிலை மாற்றத்திற்கு தேவையில்லை என்று பரிந்துரைக்கும் சிறந்த சர்வதேச நடைமுறைக்கு முரண்படுகிறது.[32] அதேபோல், பிறப்புச் சான்றிதழ்களில் மாற்றங்கள் தற்போதுள்ள சான்றிதழ்களைத் திருத்துவதன் மூலம் செய்யப்படுகின்றன, புதிய சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் அல்ல, அதாவது இலங்கையில் பிறப்புச் சான்றிதழ்கள் தேவைப்படும் எண்ணற்ற சூழ்நிலைகளில் திருநர்கள் தமது பால்நிலை மாற்றத்தினை பிறப்புச்சான்றிதழ் மூலம் அடையாளம் காணப்படும் சூழ்நிலையில் உள்ளார்கள். (தேசிய அடையாள அட்டைகள் மற்றும் கடவுச்சீட்டுகள் போன்ற பிற உத்தியோகபூர்வ ஆவணங்கள் பால்நிலை மாற்றம் அடையாளம் காணப்படாத வகையில் புதிய அடையாளத்துடன் மட்டும் வழங்கப்படலாம்).

திருநர்கள் தற்போது பெற்றோரின் ஒப்புதலின் எழுத்துப்பூர்வ ஆதாரங்களையோ அல்லது ஒரு மருத்துவ நோயறிதல் மற்றும் ஒரு அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணரின் பிறப்புறுப்பு மறுசீரமைப்பு அறுவை சிகிச்சையினை செய்ததற்கான எழுத்துப்பூர்வ சான்றிதழ் ஆகியவற்றையோ சமர்ப்பிக்க வேண்டியதில்லை என்பதால் ஜி.ஆர்.சி செயல்முறை முந்தைய நிலைமையை விட இன்னும் ஒரு படி முன்னேற்றம் கண்டுள்ளது உள்ளது. சட்டரீதியான பால்நிலை மாற்றம் இனியும் பலவேறு பொது மற்றும் சுகாதார அதிகாரிகளின் விருப்பத்தை சார்ந்திருப்பதாக இல்லை.

## *மக்கள் விடுதலை முன்னணி கட்சியின் உட்கட்சி துணை வலிமை சேர் செயற்பாடுகள்*

2018 ஒக்டோபர் மாதம் 26ம் திகதி, அப்பொழுதிருந்த ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன திடீரென பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை பதவி விளக்கி, முன்னாள் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்சவை அந்த இடத்தில் நியமித்து, நாட்டை ஒரு அரசியலமைப்பு நெருக்கடிக்குள்ளாக்கினார். தனது இந்த நடவடிக்கைக்கு அவர் பல நியாயங்களை கூறினாலும், ஒரு அரசியல் கூட்டத்தில் அவர் தான் பிரதமரை மாற்றியதன் காரணம் அவரால் பிரதமரின் "வண்ணத்துப்பூச்சி" வாழ்க்கை முறையை அங்கீகரிக்க முடியாததனாலேயே எனக்கூறி, அத்துடன் "அரசாங்கத்தின் முக்கிய தீர்மானங்களை எடுத்தது சிரேட்ட அமைச்சர்கள் இல்லை, அவரது வண்ணத்துப்பூச்சி கூட்டணியே" என்றும் கூறினார். வண்ணத்துப்பூச்சி என்பது சிங்கள மொழியில் பால்ப்புதுமையர் வெறுப்புக்கு பயன்படுத்தும் ஓர் இகழ்ச்சொல்லாகும். இலங்கையின் டுபுடீவுஜஞூ நபர்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த அறிவிப்பை விரைந்து கண்டனம் செய்தனர். இதற்காக போராட்டங்களை ஒழுங்கு படுத்தி, பொது முறையீட்டு மனுக்களை வெளியிட்டு மற்றும் ஊடக கலந்துரையாடல்களை கூட்டியும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.[33]

---

[28] ஆசிய பசுபிக் வளைய தேசிய மனித உரிமை நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் மற்றும் பால் பண்புகள் தொடர்பான மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல்: தேசிய அளவிலான மனித உரிமை நிறுவனங்களுக்கான கையேடு, 2016, p. 59.

[29] பதிவாளர் நாயகத்தின் திணைக்களம், சுற்றுநிருபம் இலக்கம் 06.∴2016, 28 ஜுன் 2016.

[30] சுகாதார அமைச்சு, பொதுவான சுற்றுநிருபம் இலக்கம்: 01-34.∴2016 திருநர் சமூகத்திற்கு பால்நிலை அடையாள சான்றிதழ் வழங்குதல் தொடர்பான சுற்று நிருபம், 16 ஜுன் 2016.

[31] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்

[32] Human Rights Watch. ‘‘விரல்கள் ஐந்தும் ஒரே மாதிரியானவை அல்ல’’ பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல் ஈர்ப்பு காரணமாக இலங்கையில் காணப்படும் பாரபட்சம், 2016.

[33] *Daily Mirror*, ‘‘LGBTQI+ சமூகம் "வண்ணத்துப்பூச்சி வாழ்க்கை" குறித்த ஜனாதிபதியின் கருத்துக்களை கண்டனம் செய்கின்றது", நவம்பர் 6, 2018, http://www.dailymirror.lk/article/LGBTQI-community-condemns-Presz-s-remarks-on-butterfly-life--157968.html

இந்த பின்புலத்தில், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இலங்கையில் உள்ள LGBTQI+ சமூகத்திற்கான சம உரிமைகளுக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தியது.[34] LGBTQI+ சமூகத்தின் உறுப்பினர்கள் ஒரு பரந்த முற்போக்கான கூட்டணியின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்றும் அது அழைப்பு விடுத்தது.[35] மக்கள் விடுதலை முன்னணி 2019 ஆம் ஆண்டு வரை LGBTQI+ துணைவலிமை சேர் தரப்பினருடன் தனது ஈடுபாட்டைத் தொடர்ந்ததோடு அதற்கு ஆதரவாக பல பகிரங்க கருத்துக்களை வெளியிட்டது.[36]

இது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட ஜே.வி.பி தலைமையிலான கூட்டணியான தேசிய மக்கள் சக்தி (NPP)யின் வேட்பாளரான அனுர குமார திசாநாயக்க, ஜனாதிபதி வேட்பாளராக தனது முதல் பொதுக் கூட்டத்தில் LGBTQI+ சமூகத்திற்கு ஆதரவை மீண்டும் வலியுறுத்தியதில் உச்சக்கட்டத்தை அடைந்தது[37]. மேலும்,அவரது தேர்தல் அறிக்கையில் எல்ஜிபிடி சமூகம் பற்றிய தனிப் பிரிவு,தண்டனைச் சட்டம் பிரிவுகள் 365 மற்றும்365A ஆகியவற்றைத் திருத்துவதற்கான உறுதிமொழியும் அடங்கும் எல்.ஜி.பி.டி.சி.ஜூ சமூகத்திற்கு எதிரான வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறையை எதிர்கொள்ள சட்டம் இயற்றுதல் பாகுபாட்டிற்க்கு எதிரான நடவடிக்கைகளை இயற்றுதல் மற்றும் " LGBT சமூகத்தின் பாதுகாப்பிற்காகவும் அவர்களின் குறைகளை தீர்க்கவும் ஒரு தனிச் செயலகத்தை நிறுவுதல[38]. NPP யின் 18 குழுக்களில் ஒன்றாக LGBTQI+ துணை வலிமை சேர் அமைப்பு சமாபிமானி கலெக்டிவ், என பெயரிடப்பட்டது. அதன் அங்கத்தினர்கள் பல கட்சிப் பொதுக் கூட்டங்கள், சந்திப்புக்கள் மற்றும் விவாதங்களில் கலந்துகொண்டார்கள்.[39]

LGBTQI+ சமூகத்திற்கு ஆதரவாக ஜே.வி.பி, திசாநாயக்க மற்றும் என்.பி.பி. தேர்தல் அறிக்கை தெரிவித்த கருத்துக்கள் மற்றும் உறுதிமொழிகள் இலங்கையில் ஒரு பிரதான அரசியல் கட்சியால் முதன்முதலில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் உறுதிப்பாடுகள் ஆக காணப்படுகிறது.[40] ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ 2015 இல் வெளியிட்ட ஓர்பாலீர்ப்பு வெறுப்புணர்வுக் கருத்துக்களிற்கு நேரெதிர் சமிக்ஞைகள் கொண்டதான இந்த ஜே.வி.பி.யின் நிலைப்பாடு சிறப்பாக குறிப்பிடத்தக்கது.[41] எவ்வாறாயினும், திசாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் 3.16 சதவீத வாக்குகளைப் பெற்று மிகுந்த இடைவெளியில் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

என்.பி.பி.யின் LGBTQI க்கு ஆதரவான நிலைப்பாட்டினதான அரசியல் தாக்கம், வாக்காளர்களை ஈர்த்ததா அல்லது அகற்றியதா என்பதில் தெளிவு இல்லை. தவிர மற்ற வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளினது கருத்துக்கள் அல்லது தேர்தல் அறிக்கைகளில் இதே போன்ற நிலைப்பாட்டை எடுப்பதற்கும் அது செல்வாக்கு செலுத்தவில்லை.

ஜனாதிபதி தேர்தலின் இறுதி வெற்றியாளரான, இலங்கை பொது ஜன பெரமுனவின் வேற்பாளர் கோட்டாபய ராஜபக்ச அவர்களோ, இரண்டாம் நிலையை பெற்ற ஐக்கிய மக்கள் சக்த்தியின் வேற்பாளர் சஜித் பிரேமதாசவோ, LGBTQI+ சமூகத்தினருக்கு தம் தேர்தல் வாக்குறுதிகளில் அல்லது பிரச்சாரங்களில் எந்த ஆதரவையும் வழங்கவில்லை. அதே நேரத்தில், பிரச்சாரத்தின் போது LGBTQI+க்கு எதிரான உணர்வுகள் வெளிப்படுத்தப்படவில்லை.

## சர்வதேச ரீதியான துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகள்

கடந்த 15 ஆண்டுகளில் சர்வதேச அளவிலான LGBTQI+ துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகள், பிரதானமான மனித உரிமை மீளாய்வுச் செயற்பாடான சர்வதேச தவணை வாரியான மீளாய்விலும்

---

34 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

35 வரதாஸ் தியாகராஜ, "மக்கள் விடுதலை முன்னணி (JVP) தன்பாலீர்ப்புடையோர், இருபாலீர்ப்புடையோர், திருநர், இடைஇலிங்கத்தவர் மற்றும் பால்ப்புதுமையோரின் பாரபட்சக்கமின்மைக்கு ஆதரவு வழங்குகிறது", Daily Mirror, நவம்பர் 16, 2018, http://www.dailymirror.lk/158438/JVP-stands-for-non-discrimination-of-LGBTIQ-persons

36 Colombo Telegraph, "மக்கள் விடுதலை முன்னணி (துஶ) ஒதுக்கப்பட்ட சமூகமான தன்பாலீர்ப்புடையோர், இருபாலீர்ப்புடையோர், திருநர், இடைஇலிங்கத்தவர் மற்றும் பால்ப்புதுமையோரின் உரிமைகளுக்கு போராடுவதாக உறுதிபூணுகிறது", ஜுலை 9, 2019, https://www.colombotelegraph.com/index.php/jvp-vows-to-fight-for-the-rights-of-oppressed-lgbtiq-community/

37 இலங்கை குறித்த சுருக்கம், "இலங்கை: தன்பாலீர்ப்புடையோர், இருபாலீர்ப்புடையோர், திருநர், இடைஇலிங்கத்தவர் மற்றும் பால்ப்புதுமையோரின் உரிமைகளுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளிக்கும் ஒரு ஜனாதிபதி வேற்பாளர்'', செப்டெம்பர் 21, 2019, https://srilankabrief.org/2019/09/sri-lanka-a-presidential-candidates-pledge-to-support-lgbtq-rights/

38 தேசிய மக்கள் சக்தி, நாட்டுக்கான எதிர்பார்ப்பு: கொள்கை பிரகடனம், 2019, p. 50.

39 சுமுது சாமர, "தன்பாலீர்ப்புடையோர், இருபாலீர்ப்புடையோர் மற்றும் திருநர்கள் பாரபட்சத்தை முடிவுக்கு கொண்டு வர தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டும் - வரதாஸ்', Ceylon Today, நவம்பர் 12, 2019, https://ceylontoday.lk/news-more/8997; தேசிய மக்கள் சக்தி, வரலாற்றில், தன்பாலீர்ப்புடையோர், இருபாலீர்ப்புடையோர், திருநர், இடைஇலிங்கத்தவர் மற்றும் பால்புதுமையரின் உரிமைகளை ஆதரிக்கும் ஒரே தலைவர் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் - தேனு ரங்கத், சமாபிமானி கூட்டமைப்பு, நவம்பர் 12, 2019, https://www.facebook.com/nppsrilanka/posts/526635057917023

40 தியாகராஜா, "மக்கள் விடுதலை முன்னணி , தன்பாலீர்ப்புடையோர், இருபாலீர்ப்புடையோர், திருநர், இடைஇலிங்கத்தவர் மற்றும் பால்புதுமையரின் பாரபட்சமின்மையை ஆதரிக்கிறது".

41 அதுல விதானகே, "இலங்கையின் மக்கள் விடுதலை முன்னணி "முழுமையாக" தன்பாலீர்ப்புடையோர், இருபாலீர்ப்புடையோர் மற்றும் திருநரின் உரிமைகளை எதிர்க்கிறது", ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் இலங்கை, டிசம்பர் 21, 2015, www.jdslanka.org/index.php/news-features/politics-a-current-affairs/578-jvp-in-sri-lanka-totally-opposed-to-lgbt-rights

(UPR), மனித உரிமைகள் சபை (HRComm), பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான குழு (CESCR), பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான குழு (CEDAW) மற்றும் சிறுவர் உரிமைகளுக்கான குழு (CRC) ஆகிய நான்கு சர்வதேச உடன்படிக்கை அமைப்புகளிலும் இலங்கையின் மதிப்பீட்டை மையபடுத்தியே அமைந்துள்ளது. மீளாய்வு செய்யும் அமைப்புகளில் மற்றும் அரசாங்கத்தின் பதில் நடவடிக்கைகளில், இந்த துணைவலிமை சேர்க்கும் செயற்பாட்டு முயற்சிகளும் அவற்றின் விளைவுகளும் பற்றி கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

## சர்வதேச தவணை வாரியான மீளாய்வு (UPR)

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட காலகட்டத்தில், சர்வதேச தவணை வாரியான மீளாய்வினை (UPR) ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் ((UNHRC) ஆரம்பித்து மூன்று முறை நடத்தியது. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளின் மனித உரிமை நிலைமையை ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறையும் மதிப்பாய்வு செய்யப்படும் உறுப்பு நாடுகளின் அரச தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள், உறுப்பு நாடுகளில் உள்ள பங்குதாரர்களினால் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பிப்புகள் மற்றும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் மதிப்பீடுகள் என்பவற்றின் அடிப்படையில் UPR செயல்முறை மதிப்பாய்வு செய்கிறது. இந்த செயல்முறையானது, பரிந்துரைகள் வழங்குதல், அவற்றுக்கு உறுப்பு நாடுகளின் அரச தரப்பு பதிலளித்தல் மற்றும் அப்பரிந்துரைக்கள் தொடர்பில் அவ் அரச தரப்புகள் வழங்கிய உறுதிமொழிகளை அடுத்த சர்வதேச தவணை வாரியான மீளாய்வில் மதிப்பீடு செய்தல் என முடியும். இலங்கை 2008, 2013 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் சர்வதேச தவணை வாரியான மீளாய்வு செயல்முறைக்கு உட்படுத்தப்பட்டது.

*முதலாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்வு*

2008ம் ஆண்டு இடம்பெற்ற முதலாவது மீளாய்வில், இலங்கையின் LGBTQI+ சமூகம் தொடர்பான பிரச்சினைகள் நான்கு சிவில் சமூக சமர்ப்பிப்புகளின் மூலம் நேரடியாக குறிப்பிடப்பட்டன: பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பின் சமர்ப்பிப்பு[42] ஈக்குவல் கிரௌண்டின்[43] சமர்ப்பிப்பு இல்கா-யூரோப் மற்றும் ஈக்குவல் கிரௌண்ட் என்பவற்றின் இணைந்த சமர்ப்பிப்பு, இன்டெர்னசனல் கே அன்ட் லெஸ்பியன் ஹியூமன் ரைட்ஸ் கமிசன் மற்றும் ஏ.ஆர்.சி இன்டர்நேசனல[44] என்பவற்றின் இணைந்த சமர்ப்பிப்பு மற்றும் இலங்கையின் 29 சிவில் சமூக அமைப்புகளின் கூட்டு சமர்ப்பிப்பு என்பவை ஆகும்.[45]

இந்த சமர்ப்பிப்புகள், பாலியல் ஈர்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அரசினால் அனுமதிக்கப்பட்ட வெறுப்புப் பேச்சுகள், LGBTQI+ உரிமைகளுக்காக பணிபுரியும் மனித உரிமை பாதுகாவலர்களை/செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதற்கு சட்ட முறைமையைப் பயன்படுத்துதல் LGBTQI+ நபர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனையிலிருந்து விலக்கு வன்முறை, மரண அச்சுறுத்தல்கள் மற்றும் பாலியல் சார்புநிலையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நீதிக்கு புறம்பான கொலைகள் மற்றும் LGBTQI+ தனிநபர்களை ஒதுக்குதல் மற்றும் LGBTQI+ தனிநபர்கள் மீது பரவலாக இடம்பெறும் அடக்குமுறை போன்ற பிரச்சனைகளை சுட்டிக்காட்டின.[46] சிவில் யுத்தம் தீவிரமடைந்த கால கட்டத்தின் பின்னணியிலேயே இந்த சிக்கல்கள் பற்றி குறிப்பிடப்பட்டன் சிவில் யுத்தத்தின் விளைவாக பொதுப் பாதுகாப்பு மோசமடைந்த நிலையில் உள்ளூர் சமூகங்களினால் ஓரங்கட்டப்படுதலால் LGBTQI+ நபர்களை இன்னும் அதிக ஆபத்தில் ஆழ்த்துவதாக வலியுறுத்தப்பட்டது.[47] சமூக பொருளாதார துறையில், LGBTQI+ நபர்களுக்கு சுகாதார சேவைகள், கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றோடு சமூக மற்றும் பொது வாழ்க்கையில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்கும் இயலுமை என்பன மறுக்கப்படுவதாக இச்சமர்ப்பிப்புகள் சுட்டிக்காட்டின.[48]

இந்த சமர்ப்பிப்புகள் அனைத்தும் தன் பாலீர்ப்புள்ள பாலியலுறவை குற்றவியல் குற்றமற்றதாக்கவும், பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பாகுபாட்டுக்கு எதிரான மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் சட்டங்களை இயற்றவும், அந்தரங்கத்துக்கான அரசியலமைப்பு உரிமையை அறிமுகப்படுத்தவும் இலங்கை அரசுக்கு ஒரே மாதிரியாகப் பரிந்துரைத்தன. முதல் சர்வதேச தவணை வாரியான மீளாய்வு UNHRCஇன் செயற்குழுவிடமிருந்தோ அல்லது மீளாய்வு செய்யும் அரசுகளிடமிருந்தோ LGBTQI குறித்த எந்தவொரு பரிந்துரைகளையும்

---

42 பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு, இலங்கையின் சர்வதேச தவணை வாரியான மீளாய்வு அறிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், கொழும்பு, 2008.

43 Equal Ground, முதலாவது தவணை வாரியான மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் (இலங்கை), கொழும்பு, 2012.

44 ILGA- ஐரோப்பா, Equal Ground, சர்வதேச தன்பாலீர்ப்புடனு ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உரிமை ஆணையகம் மற்றும் ஆர்க் சர்வதேச நிறுவனம், முதலாவது ஐக்கிய நாடுகளின் சர்வதேச தவணை வாரியான மீளாய்வு (இலங்கை), பிரசல்ஸ், 2008.

45 முதலாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்விற்கு இணைந்த சிவில் சமூக அமைப்புகளினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் - இலங்கை, கொழும்பு, 2008.

46 Equal Ground, முதலாவது தவணை வாரியான மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் (இலங்கை), p. 1; இதையும் பார்க்கவும், ILGA- ஐரோப்பா மற்றும் அனைவரும், இணைந்து சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், p.1.

47 இதையும் பார்க்கவும்,ILGA, இணைந்து சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், pp. 2-3

48 முதலாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்விற்கு சிவில் சமூக அமைப்புகளால் இணைந்து சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் - இலங்கை, கொழும்பு, 2008, p.6.

பெற்றுத்தரவில்லை. இதனால் இலங்கை ஒரு அரச தரப்பாக LGBTQI+ பிரச்சினைகளுக்கு பதிலளிக்க வேண்டியதில்லை.

### *இரண்டாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்வு*

2012 ஆம் ஆண்டில் இலங்கையின் இரண்டாவது UPRரில், இலங்கையின் LGBTQI+ சமூகம் தொடர்பான பிரச்சினைகள் மூன்று சிவில் சமூக சமர்ப்பிப்புகளின் மூலம் நேரடியாக குறிப்பிடப்பட்டன: ஈக்குவல் கிரௌண்டின் சமர்ப்பிப்பு[49] பாலியல் உரிமைகளுக்கான கூட்டணியின் சமர்ப்பிப்பு[50] மற்றும் இலங்கையின் 29 தேசிய ரீதியான சிவில் சமூக அமைப்புகள் இணைந்து செய்த சமர்ப்பிப்பு[51] என்பவை ஆகும். இந்த சமர்ப்பிப்புகள் LGBTQI+ சமூகம் மற்றும் அதன் உறுப்பினர்கள் மீதான ஊடகத் தாக்குதல்கள் அதிகரித்திருக்கும் சூழ்நிலையில்,[52] முதல் UPRக்குப் பின்னர் LGBTQI+ பிரச்சனைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை எனக் குறிப்பிட்டன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) மற்றும் மனித உரிமைகளுக்கான தேசிய செயல் திட்டம் (NHRAP) போன்ற தேசிய மனித உரிமை பொறிமுறைகள் LGBTQI+ பிரச்சனைகளை செயல்திறனுடன் கையாளவில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.[53] இந்த சமர்ப்பிப்புகள் முதல் அனைத்துலக காலாந்தர மீளாய்வில் (ரீசு) இடம்பெற்றிருந்த பல பரிந்துரைகளை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி இருந்தன.

இரண்டாவது UPR இரண்டு LGBTQI சார் பரிந்துரைகளை வழங்கியது, இரண்டு பரிந்துரைகளையும் அரசாங்கம் நிராகரித்தது.:

1. தண்டனைச் சட்டக்கோவையின் 365அ பிரிவை ரத்து செய்வதன் மூலம் சம்மதம் தெரிவிப்பதற்கான் வயதுக்கு மேற்பட்ட நபர்களிடையேயான தன்பாலீர்ப்புள்ள பாலியல் உறவுகளை குற்றவியல் குற்றமற்றதாக்கவும் (கனடா).
2. பாலியல் ஈர்ப்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான பாரபட்சமான நடத்துதலையும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் (ஆர்ஜென்டினா).

### *மூன்றாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்வு*

2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கையின் மூன்றாவது UPRரில, இலங்கையின் LGBTQI+ சமூகம் தொடர்பான பிரச்சினைகள் தனிநபர் சமர்ப்பிப்புகள் மற்றும் கூட்டாக இணைந்து செய்யப்பட்ட சமர்ப்பிப்புகள் என ஒரு பரவலான சிவில் சமூக சமர்ப்பிப்புகளின்[54] மூலம் நேரடியாக குறிப்பிடப்பட்டன. ஈக்குவல் கிரௌண்ட், யங் அவுட் ஹியர், க்ராஸ்ரூடெட் ட்ரஸ்ட், பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு உள்ளடங்கலாக LGBTQI+ மற்றும் LGBTQI+ஐ மையப்படுத்திய நிறுவனங்கள் இந்த சமர்ப்பிப்புகளை செய்திருந்தன. இவற்றுக்கு மேலதிகமாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஒரு சமர்ப்பிப்பை செய்தது.[55]

இந்த சமர்ப்பிப்புகள் முந்தைய UPRக்குப் பின்னரான முன்னேற்றமின்மை குறித்து மீண்டும் கவனம் செலுத்தியதோடு, சிவில் சமூக செயல்பாட்டிற்கான தளம் விரிவுபடுத்தப்பட்டாலும் LGBTQI+ பிரச்சினைகள் தொடர்பான செயலின்மை மற்றும் அந்த சமூகத்திற்கு எதிரான எதிர்மறை அரசியல் நகர்வுகள் என்பனவும் இடம்பெற்றன, 2015 ஆம் ஆண்டின் அரசாங்க மாற்றத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட புதிய சமூக அரசியல் இயங்குநிலை தொடர்பிலும் அக்கறை காட்டியது.[56] பொருள் இழப்புக்கு வழிவகுக்கும் காரணிகள் செயற்பாட்டாளர் நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதில் அதிகாரத்துவ தாமதங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பால்நிலை அங்கீகார சான்றிதழ் (GRC) செயல்முறையின் குறைபாடுகள், நடந்து கொண்டிருக்கும் அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறை, உட்பட பரந்த அளவிலான சமூக-அரசியல் பிரச்சினைகளை சமர்ப்பிப்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.[57] தன் பாலீர்ப்புள்ள

---

49 Equal Ground, இரண்டாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் (இலங்கை), கொழும்பு, 2012.

50 பாலியல் உரிமைகளுக்கான கூட்டமைப்பு, ஐக்கிய நாடுகளின் இரண்டாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் (இலங்கை), கொழும்பு, 2012.

51 இணைந்த சிவில் சமூக அமைப்புகளினால் நாடுகளின் இரண்டாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் (இலங்கை), கொழும்பு, 2012.

52 மேற்க்கூறிய அதே ஆவணத்தில், பந்திகள் 13(1) and (2).

53 Equal Ground, ஐக்கிய நாடுகளின் இரண்டாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் (இலங்கை), கொழும்பு, 2012.

54 பார்க்கவும்: ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்தவர்களுக்கான உயர்ஸ்தானிகர், பங்குதாரர்களினால் இலங்கை குறித்து சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தின் சுருக்கம், A/HRC/WG.6/28/LKA/3, August 8, 2017.

55 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மூன்றாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், கொழும்பு, 2017.

56 ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்தோருக்கான உயர்ஸ்தானிகர், பங்குதாரர்களினால் இலங்கை குறித்து சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தின் சுருக்கம், பந்திகள் 6, 7 ரூ 45.

57 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

பாலியல் நடத்தைகளை சட்டரீதியாக குற்றம் அற்றதாக்க வேண்டும் மற்றும் பாகுபாட்டுக்கு எதிரான சட்ட ஏற்படுகளை விரிவுபடுத்த வேண்டும் என்பவற்றோடு மனித உரிமைகள் ஆணைக்குழுவும் உடன்பட்டது.[58]

மூன்றாவது UPR, ஒன்பது LGBTQI சார் பரிந்துரைகளை பெற்றுத் தந்தது. அதில் மூன்று பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது:[59]

1. குறிப்பாக இனம் மற்றும் பாலியல் ஈர்ப்பு அடிப்படையில் இடம்பெறும் பாகுபாடுகள் உட்பட அனைத்து விதமான பாகுபாடுகளையும் தடுத்து எதிர்த்துப் போராடவும் (இத்தாலி)

2. தன் பாலீர்ப்புப் பெண் (லெஸ்பியன்), ஓர் பாலீர்ப்பு ஆண் (கே), இருபாலீர்ப்பை கொண்டோர், திருநர்கள் மற்றும் இடைஇலிங்கத்தவர்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறைச் செயல்கள் தொடர்பில் விசாரணை செய்து தண்டனை வழங்குவதன் மூலம் அத்தகைய நபர்களின் உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களுக்கு மரியாதை அளிப்பதை உறுதி செய்யவும் (அர்ஜென்டினா)

3. எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான விடயங்கள் உட்பட, சுகாதார பராமரிப்பு அமைப்புகளில் இடம்பெறும் அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை பின்பற்றும், அதே நேரத்தில் தன்பாலீர்ப்புப் பெண், தன்பாலீர்ப்பு ஆண், இருபாலீர்ப்புளவர்கள், திருநர்கள் மற்றும் இடைஇலிங்கத்தவர்கள் உள்ளிட்ட பிரதான இலக்குக் குழு மக்களது குறிப்பிட்ட தேவைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவும் (போர்த்துக்கல்).

ஆறு பரிந்துரைகளை அரசாங்கம் 'குறித்துக்' கொண்டது[60]

1. தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் நடத்தை மற்றும் அன்பின் வெளிப்பாடுகள் ஆகியவற்றை குற்றவியல் குற்றமற்றதாக்க தண்டனைச் சட்டக்கோவையை, குறிப்பாக 365 மற்றும் 365ஏ பிரிவுகளைத் திருத்தவும் (நெதர்லாந்து)

2. தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் உறவுகளை குற்றவியல் குற்றமற்றதாக்கி, தன்பாலீர்ப்புள்ள் பெண், தன்பாலீர்ப்புள்ள ஆண், இருபாலீர்ப்புள்ளவர்கள், திருநர்கள் மற்றும் இடைஇலிங்கத்தவர்களது சமூகத்திற்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறையை எதிர்த்துப் போராடுவதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவும் (பிரேசில்).

3. தண்டனைச் சட்டக் கோவையின் 365 மற்றும் 365 ஏ பிரிவுகளை ரத்து செய்வதன் மூலம் தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் நடத்தைகளை குற்றவியல் குற்றமற்றதாகவும் (கனடா)

4. தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான சம்மதத்துடனான பாலியல் நடத்தை மற்றும் அன்பின் வெளிப்பாடுகளை குற்றவியல் குற்றமற்றதாக்க தண்டனைச் சட்டக்கோவையை, குறிப்பாக 365 மற்றும் 365 ஏ பிரிவுகளைத் திருத்தவும் (சுவீடன்)

5. தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான சம்மதத்துடன் கூடிய பாலியல் நடத்தைகளை குற்றவியல் குற்றமற்றதாக்கும் வகையில் குற்றவியல் கோவையை மாற்றியமைக்கவும், தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் உறவுகளை குற்றவியல் குற்றமற்றதாக்கி, தன்பாலீர்ப்புள்ள பெண், தன்பாலீர்ப்புள்ள ஆண், இருபாலீர்ப்புள்ளவர்கள், திருநர்கள் மற்றும் இடைஇலிங்கத்தவர்களது சமூகத்திற்கு எதிராக பயன்படுத்தப்படும் இழி சொற்களைக் கட்டுப்படுத்தவும் அத்தோடு பொலிஸ் அதிகாரிகளால் இந்த நபர்கள் மீது மேற்கொள்ளப்படும் துஸ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்களைத் தவிர்க்கவும் (உருகுவே)

6. தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் நடத்தைகளை குற்றவியல் குற்றமற்றதாக்குவதோடு, பாலியல் ஈர்ப்பு அல்லது பால்நிலை அடையாளத்தின் அடிப்படையில்

---

[58] இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, , இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மூன்றாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், கொழும்பு, 2017, பந்திகள் 35 ரூ 36.

[59] ஐக்கிய நாடுகளின் மனித உரிமை குழு, சர்வதேச தவணை வாரியான மீளாய்வு பணிக்குழுவின் அறிக்கை - இலங்கை,A/HRC/37/17, டிசம்பர் 29, 2017, பரிந்துரைகள்116.37-39.

[60] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., பரிந்துரைகள் 117.20-25.

மேற்கொள்ளப்படும் பாகுபாடு மற்றும் வன்முறையை எதிர்த்துப் போராடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பின்பற்றவும், மற்றும் தன்பாலீர்ப்புள்ள் பெண், தன்பாலீர்ப்புள்ள ஆண், இருபாலீர்ப்புள்ளவர்கள், திருநர்கள் மற்றும் இடைஇலிங்கத்தவர்களுக்கு சுகாதார சேவைகளுக்கான அணுகுதலை உறுதி செய்யவும் (ஹோண்டுரஸ்).

பரஸ்பர உரையாடலின் போது "தண்டனைச் சட்டக் கோவையில் இடம்பெறும் அனைத்து குற்றங்களும் சர்வதேச மனித உரிமைகளின் தரத்திற்கு அமைவாக இருக்கும் வகையில் தண்டனைச் சட்டக் கோவையை சீர்திருத்துவதற்கு அரசாங்கம் தன்னை அர்ப்பணித்துள்ளதாகவும், அதன் எந்தவொரு சட்ட ஏற்பாடுகளும் LGBTIQ சமூகத்தைச் சேர்ந்தவர்களை பாகுபாட்டுக்கு உட்படுத்தும் முறையில் பிரயோகிக்கப்படாது'' என்பதை உறுதிப்படுத்துவதில் தீர்மானமாக இருப்பதாகவும் கூறி, தண்டனைச் சட்டக் கோவையை மாற்றுவதில் அரசாங்கம் ஒரு உறுதிப்பாட்டைக் காட்டியமை குறிப்பிடத்தக்கதாகும்.[61]

### *மனித உரிமைகள் சபை*

ஐ.நா மனித உரிமைகள் சபை (HRComm), சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைக்கு (ICCPR) அமைய உறுப்பு நாடுகள் தொடர்பில் சர்வதேச தவணை வாரியான மீளாய்வுகளை செய்கிறது. மனித உரிமைகள் குழு அதன் மீளாய்வு செற்பாட்டின் போது சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து சமர்ப்பிப்புகளை ஏற்றுக்கொள்கிறது.

2014 ஆம் ஆண்டின் இறுதியில் மனித உரிமைகள் குழுவிற்கான இலங்கையின் ஐந்தாவது தவணை வாரியான அறிக்கை இடம்பெறவிருந்தது. அதற்கு பதிலளிக்கும் விதமாக, இதில் ஈக்குவல் கிரௌண்ட் தலைமையிலான கூட்டு அறிக்கை[62] உள்ளடங்கலாக் சர்வதேச கே மற்றும் லெஸ்பியன் மனித உரிமைகள் ஆணையம் (IGLHRC)[63] மற்றும் கெலடேய்ஸ்கோப் மனித உரிமைகள் அறக்கட்டளை[64] என பல சிவில் சமூக அமைப்புகளின் நிழல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த சமர்ப்பிப்புகள் தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் நடத்தையை குற்றவியல் குற்றமாக்குதல் தன்னிச்சையான கைதுகள், தடுப்புக்காவல்கள் என்பவற்றோடு தவறான மற்றும் வன்முறையான பொலிஸ் நடத்தை வெளிப்பாட்டை அடக்குதல் மற்றும் பாகுபாடு, வெறுப்பு குற்றங்கள் மற்றும் தனி நபர்களினால் செய்யப்படும் கட்டாய திருமணங்கள் என்பவற்றிலிருந்து பாதுகாப்பதில் அரசின் தோல்வி ஆகிய பிரச்சினைகளைக் குறிப்பிட்டன. இந்தப் பிரச்சனைகள், LGBTQI+ நபர்களின் ICCPR உரிமைகளான சமத்துவம் மற்றும் பாகுபாட்டுக்குட்படாமைக்கான உரிமை, அந்தரங்கத்திற்கான உரிமை, இழப்பீட்டுக்கான/தீர்வுக்கான உரிமை, தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவலில் இருந்து விடுபடுவதற்கான உரிமை, கருத்து சுதந்திரம், கூட்டங் கூடவும் இணைந்து செயற்படுவதற்குமான உரிமை என்பவற்றின் மீறல்கள் என வாதிடப்பட்டன.

அதன் பிரச்சனைப் பட்டியலில், மனித உரிமைகள் குழுவானது இலங்கையிடம் 'பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் களங்கம் மற்றும் பாகுபாட்டிலிருந்து அந்நபர்களை பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் குறிப்பிடவும், அவர்கள் பாகுபாட்டுக் எதிரான அரசியலமைப்பு விதிகளினால் பாதுகாக்கப்படுகிறார்களா என்பதைப் பற்றிக் குறிப்பிடுமாறும் கேட்டுக் கொண்டது.[65] மேலும், மீளாய்வைத் தொடர்ந்த அதன் அவதானிப்புகளின் முடிவில், பாகுபாட்டுக்குட்படுவதிலிருந்து விடுபடுவதற்கான உரிமைகளை உறுதிப்படுத்த தண்டனைச் சட்டக் கோவையில் திருத்தம் செய்யவும் பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பன பாகுபாட்டுக்கான அடிப்படைகளாக இருப்பதை வெளிப்படையாக தடை செய்ய அரசியலமைப்பை திருத்தவும் LBGTI உரிமைகள் மீறப்படுவதிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை

61 Sunday Observer, "இலங்கையில் தன்பாலீப்புடையோரை வெறுத்தலுக்கு எதிரான போராட்டம்", செப்டெம்பர் 22, 2018.

62 Equal Ground, வடமேல் பல்கலைக்கழகத்தின் சட்டக்கல்லூரியின் சர்வதேச மனித உரிமைகளுக்கான நிலையம், மற்றும் பாலியல்பு மற்றும் ஹார்ட்லண்ட் மனித தேவைகள் மற்றும் மனித உரிமைகளுக்கான கூட்டமைப்பின் மனித உரிமைகளுக்கான சர்வதேச முயற்ச்சி (GISHR) இலங்கையில் வாழும் தன்பாலீர்ப்புள்ள பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபாலீர்ப்புடையோர் மற்றும் திருநர்களுக்கெதிரான மனித உரிமை மீறல்கள்: ஒரு நிழல் அறிக்கை, டிசம்பர் 2013, https://tbinternet.ohchr.org/Treaties/CCPR/Shared Documents/LKA/INT_CCPR_ICO_LKA_15986_E.pdf,

63 தன்பாலீர்ப்புள்ள ஆண்கள் மற்றும் தன்பாலீர்ப்புள்ள பெண்களுக்கான சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு, இலங்கையில் தன்பாலீர்ப்புள்ள பெண்களுக்கு, இருபாலிப்புள்ள பெண்களுக்கு மற்றும் திருநர்களுக்கெதிரான வன்முறை, ஒக்டோபர் 2014, https://outrightinternational.org/sites/default/files/SriLanka1014WCover.pdf

64 கலைடர்ஸ்கோப் மனித உரிமைகள் நிறுவனம், மனித உரிமைகள் சபைக்கு இலங்கையில் டுபுடீவுஜ நபர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் குறித்த நிழல் அறிக்கை (இனம்காணப்பட்ட பிரச்சனைகளுக்கான பதில், செப்டெம்பர் 2014, http://www.kaleidoscopeaustralia.com/wp-content/uploads/2014/09/Sri-Lanka-Report-Final.pdf

65 ஐ. நா மனித உரிமைகள் சபை, இலங்கையின் ஐந்தாவது தவணை வாரியான மீளாய்வில் காணப்படும் பிரச்சனைகளின் பட்டியல், CCPR/C/LKA/Q/5, 23 ஏப்ரல் 2014 பந்தி 5

வலுப்படுத்தவும், அத்தகைய உரிமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் பயிற்சி வழங்கல் நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் பரிந்துரைத்தது.[66]

அதற்கு பதிலாளிக்கும் வகையில், 2019ல் இலங்கை தனது அடுத்த தவணை வாரியான அறிக்கையில் "அரசியலமைப்பின் உறுப்புரை 12 (2) இன் கீழ் பாகுபாடுக்கு உட்படுத்துவதற்கு தடை செய்யப்பட்ட காரணங்கள் முழுமையானவை அல்ல எனவும், பாலியல் ஈரப்பு அடிப்படையிலான பாகுபாடு மறைமுகமாக/உட்கிடக்கையாக தடைசெய்யப்பட்டுள்ளது எனவும[67]", 'சட்டத்தின் சமமான பாதுகாப்பை மறுக்கும் அல்லது பாலியல் ஈரப்பு அடிப்படையில் பாகுபாடு காட்டும் செயல்கள் இலங்கை அரசியலமைப்பின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளன' எனவும் வாதிட்டது. மேலும், அது அரசியலமைப்பு சீர்திருத்தத்தையும் தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் நடத்தையை குற்றவியல் குற்றமாக்குவதற்கு எதிரான ஒரு சாதகமான நடவடிக்கையாக 2016ஆம் ஆண்டின் விமலசிரி எதிர் மரதான ஓ.ஐ.சி மற்றும் சட்டமா அதிபர் (உயர் நீதிமன்ற மேன்முறையீடு 32/11) என்னும் வழக்கின் உயர் நீதிமன்ற தீர்ப்பையும் சுட்டிக்காட்டியது.[68]

## பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான குழு (CESCR)

பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான குழு (CESCR), பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் தொடர்பான உடன்பாட்டு ஒப்பந்ததிற்கு (ICESCR) அமைய உறுப்பு நாடுகள் தொடர்பில் தவணை வாரியான மீளாய்வுகளை செய்கிறது. LGBTQI+ சமூகத்தினரைப் பாதிக்கும் பிரச்சனைகள் தொடர்பில் 2017ஆம் ஆண்டில் இலங்கையின் ஐந்தாவது தவணை வாரியான மீளாய்வில் ஆராயப்பட்டன.

CESCR அதன் பிரச்சனைப் பட்டியலில், 'தன்பாலீர்ப்புள்ள பெண், தன்பாலீர்ப்புள்ள ஆண், இருபாலீர்ப்பு உறவாளர்கள், திருநர்கள் மற்றும் இடைஇலிங்கத்தவர்கள் மீது பாகுபாடு காண்பிக்கும் அல்லது பாரபட்சமான விளைவுகளை ஏற்படுத்தும் அனைத்து சட்ட மற்றும் ஒழுங்குமுறை விதிகளையும் ரத்து செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த தகவல்களை வழங்குமாறும், அத்தோடு பாகுபாடுகளுக்கு எதிராக அவர்களைப் பாதுகாக்க ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகள் குறித்த தகவல்களை வழங்குமாறும் இலங்கையிடம் கோரியது.[69]

CESCR க்கு ஒரு கூட்டு சமர்ப்பிப்பினை ஈகுவல் கிரௌண்ட், வடமேற்கு பல்கலைக்கழக சட்டப் பள்ளியின் சர்வதேச மனித உரிமைகளுக்கான மையம் மற்றும் மனித தேவைகள் மற்றும் மனித உரிமைகளுக்கான ஹார்ட்லேண்ட் கூட்டணியின் பாலியல் மற்றும் மனித உரிமைகளுக்கான உலகளாவிய முன்முயற்சி (GISHR) என்பவை இணைந்து செய்தன.[70] அச் சமர்ப்பிப்பு, இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் சட்டங்கள் LGBT தனிநபர்களின் மனித உரிமைகளைப் போதுமான அளவு பாதுகாக்கத் தவறிவிட்டன LGBT நபர்கள் வேலைவாய்ப்பு, வீட்டுவசதி, சுகாதாரப் பாதுகாப்பு, கல்வி மற்றும் திருமணத்திற்கான உரிமை ஆகியவற்றில் பாகுபாட்டுக்கு உட்படாமைக்கான உரிமையில் பல மீறுதல்களை அனுபவிக்கின்றனர் என்பவற்றைச் சுட்டிக்காட்டியதுடன் அரசியலமைப்புச் சீர்திருத்தம், தன்பாலீர்ப்புள்ளவருக்கிடையிலான பாலியல் நடத்தையை குற்றவியல் குற்றமாக்காமை, பால்நிலை அங்கீகார சான்றிதழ் (ஜி.ஆர்.சி), உரிமைகளை மீறும் அரச அதிகாரிகள் மற்றும் சமூக விழிப்புணர்வு தொடர்பான கேள்விகளை இலங்கையுடன் CESCR எழுப்ப வேண்டும் எனவும் பரிந்துரைத்தது.[71]

CESCR அதன் அவதானிப்புகளின் முடிவில், பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தையும் உள்ளடக்குவதற்காக அரசியலமைப்பின் 12 (2)வது சரத்தில் பாகுபாடுக்கு உட்படுத்துவதற்கு தடை செய்யப்பட்ட காரணங்களைக் கொண்ட பிரிவை விரிவுபடுத்துமாறும் தன்பாலீர்ப்புள்ளவருக்கிடையிலான பாலியல் நடத்தையை குற்றவியல் குற்றமற்றதாக ஆக்குமாறும், LGBTQI + நபர்களுக்கு எதிரான வன்முறையை எதிர்த்துப் போராடுவதுடன் அவற்றைத் தடுக்க அவசர நடவடிக்கைகளை எடுக்குமாறும் சுகாதாரம், கல்வி, வேலை மற்றும் வீட்டுவசதி ஆகியவற்றுக்கான உரிமைகளை அவர்கள் சமமாக அனுபவிப்பதை உறுதி செய்யுமாறும், அத்துடன் LGBTQI + தனிநபர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து பொது அதிகாரிகளுக்கு கற்பிப்பதற்கும்

66 ஐ. நா மனித உரிமைகள் சபை, இலங்கையின் ஐந்தாவது தவணை வாரியான மீளாய்வின் இறுதி குறிப்புகள் CCPR/C/LKA/CO/5, 30 ஒக்டோபர் 2014, பந்தி 8

67 "இலங்கை: தவணை வாரியான அறிக்கை", அரசு தரப்பின் அறிக்கை, CCPR/C/LKA/6, 22 பெப்ரவரி 2019, பந்தி 28

68 மேற்கூறிய அதே ஆவணத்தில் பந்தி 29 மற்றும் 30

69 ஐ. நாவின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் குழு, இலங்கையின் ஐந்தாவது தவணை வாரியான மீளாய்வில் குறிப்பிடப்படும் பிரச்சனைகளின் பட்டியல், E/C.12/LKA/Q/5, 7 நவம்பர், பந்தி 9

70 Equal Ground, வடமேல் பல்கலைக்கழகத்தின் சட்டக்கல்லூரியின் சர்வதேச மனித உரிமைகளுக்கான நிலையம், மற்றும் பாலியல்பு மற்றும் ஹார்ட்லண்ட் மனித தேவைகள் மற்றும் மனித உரிமைகளுக்கான கூட்டமைப்பின் மனித உரிமைகளுக்கான சர்வதேச முயற்ச்சி (GISHR) இலங்கையில் வாழும் தன்பாலீர்ப்புள்ள பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபாலீர்ப்புடையோர் மற்றும் திருநர்களுக்கெதிரான மனித உரிமை மீறல்கள்: ஒரு நிழல் அறிக்கை, ஆகஸ்ட் 2016

71 மேற்கூறிய அதே ஆவணத்தில் பந்தி

உணர்த்துவதற்கும் பயிற்சித் திட்டங்களை உருவாக்கி செயற்படுத்துமாறும் இலங்கைக்கு பரிந்துரை செய்தது.[72]

அதற்கு பதிலாளிக்கும் வகையில், இலங்கை "அரசியலமைப்பின் உறுப்புரை 12 (2) இன் கீழ் காணப்படும் பாகுபாடுக்கு உட்படுத்துவதற்கு தடை செய்யப்பட்ட காரணங்கள் முழுமையானவை அல்ல என்பதோடு 'அது பாலியல் ஈர்ப்பு தொடர்பான வேறுபாடுகளையும் உள்ளடக்குகிறது" என்பதை மீளவும் வலியுறுத்தியது.[73] மேலும், நடந்து கொண்டிருக்கும் அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறையின் மூலம் "பாலியல் ஈரப்பு" பாகுபாடுக்கு உட்படுத்த முடியாத ஒரு காரணமாக சேர்க்கப்படும் என்றும் சட்டத்தின் மீதான நீதித்துறை மீளாய்வு பாரபட்சமான தண்டனை விதிகளை நிவர்த்தி செய்யும் என எதிர்பார்ப்பதாகவும் 2017ம் ஆண்டு தொடக்கம் 2021ம் ஆண்டு வரையான மனித உரிமைகளுக்கான தேசிய செயல் திட்டத்தில் (NHRAP) சர்வதேச தரத்திற்கு ஏற்ப தண்டனைச் சட்டக் குற்றங்களைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடு சேர்க்கப்பட்டுள்ளது[74] என்பதையும் மேற்கோள்காட்டியது. இருந்தபோதிலும், தண்டனைச் சட்டக் கோவையின் 365 மற்றும் 365அ பிரிவுகள் தொடர்பான குறிப்பிட்ட ஏற்பாடுகள் 2017-2021 ஆண்டு வரையான மனித உரிமைகளுக்கான தேசிய செயல் திட்டத்தில் இருந்து அரசாங்கத்தால் அகற்றப்பட்டதன் பின்னரே இவ்வாறு அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்டிருந்தது.

## பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான குழு (CEDAW)

பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான குழு (CEDAW) பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கைக்கு அமைய உறுப்பு நாடுகள் தொடர்பில் தவணை வாரியான மீளாய்வுகளை செய்கிறது. CEDAW அதன் உறுப்பு நாடுகளின் மீதான மீளாய்வு செற்பாட்டின் போது சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து (CSO) சமர்ப்பிப்புகளை கோருகிறது. LGBTQI+ சமூகத்தினரைப் பாதிக்கும் பிரச்சனைகள் தொடர்பில் 2011 இல் இலங்கையின் ஒருங்கிணைந்த ஐந்தாவது, ஆறாவது மற்றும் ஏழாவது காலாந்தர மீளாய்வு அறிக்கைகளிலும் மற்றும் 2017 ஆம் ஆண்டில் அதன் எட்டாவது தவணை வாரியான மீளாய்வு அறிக்கையிலும் ஆராயப்பட்டன. 61 இலங்கை சிவில் சமூக அமைப்புகளின் (CSOs) சார்பில் பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனத்தின் (NGO) நிழல் அறிக்கை, தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் உறவுகள் அரசியலமைப்பின் உறுப்புரை 12 இல் காணப்படும் பாகுபாட்டுக்கு எதிரான கொள்கைகளுடன் ஏற்புடையதாக வேண்டுமெனில் தண்டனைச் சட்டக் கோவையை மீளாய்வு செய்து தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் உறவுகளை குற்றவியல் குற்றமாக்குவதிலிருந்து விலக்க வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்டது.[75] மேலும், அலைந்துதிரிவோர் கட்டளைச் சட்டம் மற்றும் விபச்சார விடுதிகள் கட்டளைச் சட்டம் என்பவை விரிவான மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு திருத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கை குறிப்பிட்டது. மகளிர் ஆதரவுக் குழு சமர்ப்பித்த நிழல் அறிக்கை இலங்கையில் தன்பாலீர்ப்புள்ள் பெண், இருபாலீர்ப்பை கொண்டோர் , மற்றும் திருநங்கைகளின் நிலை குறித்து குறிப்பாக கவனம் செலுத்தியது.[76]

CEDAW அதன் அவதானிப்புகளின் முடிவில், 'தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான உறவை குற்றவியல் குற்றமாக்குவதால் பெண்கள் சட்டப் பாதுகாப்பிலிருந்து முற்றிலுமாக விலக்கப்படுவார்கள்' என்ற கவலையை வெளிப்படுத்தியதுடன், வயது வந்தவர்களுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய தன்பாலீர்ப்புள்ள பாலியல் நடத்தையை குற்றவியல் குற்றம் என்பதிலிருந்து விலக்குமாறும் உடன்படிக்கையின் கீழ் பாகுபாட்டுக்கு உட்படுத்தாமை எனும் கடமைக்கு கட்டுப்பட்டு நடக்குமாறும் பரிந்துரை செய்தது.[77] "அரசியலமைப்பின் உறுப்புரை 12 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள 'பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தின் அடிப்படையில் இடம்பெறும் பாகுபாட்டிலிருந்து பாதுகாப்பு எனும் அரசியலமைப்பு உத்தரவாதத்தை தண்டனைச் சட்டக் கோவையின் 365 மற்றும் 365(அ) பிரிவுகள் விலக்கிவிடாது" என இலங்கை 2015 இல் பதிலளித்தது.[78]

---

[72] ஐ. நாவின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் குழு, இலங்கையின் ஐந்தாவது தவணை வாரியான மீளாய்வின் இறுதி குறிப்புகள், E/C.12/LKA/CO/5, 7 நவம்பர் 2016, பந்தி 17 மற்றும் 18

[73] ஐ. நாவின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் குழு, லங்கையின் ஐந்தாவது தவணை வாரியான மீளாய்வில் குறிப்பிடப்படும் பிரச்சனைகளின் பட்டியல் - குறிப்பிடப்பட்ட பிரச்சனைகளுக்கான இலங்கையின் பதில்கள், E/C.12/LKA/Q/5/Add.1, 11 August 2017, பந்தி 52-55.

[74] மேற்கூறிய அதே ஆவணத்தில், பந்தி 51

[75] பெண்கள் மற்றும் ஊடகக்கூட்டமைப்பு, பெண்களுக்கெதிரான அனைத்துவித பாகுப்பாட்டையும் ஒழிப்பதற்கான குழுவுக்கான இலங்கை குறித்த நிழல் அறிக்கை, p 34.

[76] மேற்கூறிய அதே ஆவணத்தில், pp 36-7.

[77] பெண்களுக்கெதிரான அனைத்துவித பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான குழு, இறுதியான கண்ணோக்குகள், CEDAW/C/LKA/CO/7, April 8, 2011, para 25(g).

[78] பெண்களுக்கெதிரான அனைத்துவித பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான குழு, *2015ல் சமர்ப்பிக்க வேண்டிய அரச தரப்பின் எட்டாவது தவணை வாரியான அறிக்கை - அரச தரப்பின் அறிக்கை, இலங்கை*, CEDAW/C/LKA/8, May 29, 2015, para 36.

2017 இல் மீளாய்வு செயல்முறைக்கு பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பினால் செய்யப்பட்ட சமர்பிப்பு ‘அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறையைப் பொருட்படுத்தாமல்’, குற்றவியல் குற்றம் என்பதிலிருந்து விலக்களிக்கும் மற்றும் பாகுபாட்டுக்கு எதிரான சட்ட ஏற்பாடுகளை இயற்றுமாறு பரிந்துரைத்தது.[79] கெலிடோஸ்கோப் மனித உரிமைகள் அறக்கட்டளை மற்றும் ஈகுவல் கிரௌண்ட் என்பவற்றின் கூட்டு சமர்ப்பிப்பு பாகுபாடின்மை மற்றும் குற்றவியல் குற்றம் என்பதிலிருந்து விலக்களித்தல் என்பவை உட்பட முன்நிபந்தனையாகக் காணப்படும் பால்நிலை உறுதிப்படுத்தல் அறுவை சிகிச்சையைச் செய்யாமலேயே திருநர்கள் தங்கள் பால்நிலையை சட்டப்பூர்வமாக மாற்றக்கூடிய வகையில் பால்நிலை அங்கீகாரச் சான்றிதழ் (GRC) செயல்முறையை மாற்றுதல் கிராமப்புறங்களில் உள்ள LBTI நபர்களுக்கான சமூக-பொருளாதார சமத்துவம் மற்றும் பாதுகாப்புகள் தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான திருமணம் மற்றும் LBTI நபர்கள் பிள்ளைகளை தத்தெடுப்பதற்கு அனுமதித்தல் என பல பரிந்துரைகளை வழங்கியது.[80]

2017ல் CEDAW அதன் அவதானிப்புகளின் முடிவில், பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பன புதிய அரசியலமைப்பில் பாகுபாட்டுக்கு உட்படுத்துவதற்கு தடைசெய்யப்பட்ட காரணங்களாக சேர்க்கப்பட வேண்டும் பாலியல் சிறுபான்மையின பெண்கள் மீது சிறப்பு கவனம் செலுத்துவதோடு பால்நிலை சமத்துவத்தை அடைய தற்காலிக சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் அலைந்துதிரிபவர்கள் கட்டளைச் சட்டம் நீக்கப்பட வேண்டும்[81] என பரிந்துரைத்திருக்கிறது. இவற்றிற்கு பதிலளிக்க இலங்கைக்கு இன்னும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

### *சிறுவர் உரிமைகளுக்கான குழு (CRC)*

சிறுவர் உரிமைகளுக்கான குழு (CRC) சிறுவர் உரிமைகள் சமவாயத்துக்கு அமைய உறுப்பு நாடுகள் தொடர்பில் காலாந்தர மீளாய்வுகளை செய்கிறது. சிறுவர் உரிமைகளுக்கான குழு (CRC) அதன் உறுப்பு நாடுகளின் மீதான மீளாய்வு செற்பாட்டின் போது சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து (CSO) சமர்ப்பிப்புகளை கோருகிறது. LGBTQI+ சமூகத்தினரைப் பாதிக்கும் பிரச்சனைகள் தொடர்பில் 2018 இல் இலங்கையின் ஒருங்கிணைந்த ஐந்தாவது மற்றும் ஆறாவது தவணை வாரியான மீளாய்வு அறிக்கைகளில் ஆராயப்பட்டன.

ஈக்குவல் கிரௌண்டினால் செய்யப்பட்ட சமர்ப்பிப்பில் சிறுவர்களின் பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தின் அடிப்படையில் அவர்களை பாகுபாட்டுக்கு உட்படுத்தல் மற்றும் அவர்கள் உரிமைகளை மீறுதல் என்பன இலங்கையில் நடைமுறையில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இதனைத் தீர்க்க சட்டங்களை இயற்றுதல் மற்றும் கல்வி விழிப்புணர்வு நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.[82] எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பும் ECPAT இன்டர்நேசனலும் செய்துள்ள சமர்ப்பிப்பில் தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் நடத்தையை குற்றவியல் குற்றமாகக் கொள்வது சிறுவர்களை அக் குற்றத்திலிருந்து வெளிப்படையாக விலக்காததால் அவர்களை ஆபத்தில் ஆழ்த்தக்கூடும் எனவே ஒரு சிறுவர் சுரண்டல் சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்டவராகக் கொள்ளப்படாமல் ஒரு குற்றவாளியாக கருதப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[83] LGBTI நபர்கள் ‘பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை வெளிப்பாடு தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட பால்நிலை நியமங்களை சவாலுகுட்படுத்துவதனால்’ பாலியல் வன்முறைக்கு ஆளாகிறார்கள் என்று சகல பிழைத்து வாழ்பவர் திட்டத்தின் சமர்ப்பிப்பு குறிப்பிடுகிறது.[84]

CRC அதன் அவதானிப்புகளின் முடிவில், சமவாயத்தின் பாகுபாட்டுக்கு எதிரான ஏற்படுகளுக்கு அமைய, தன்பாலீர்ப்புள்ள பெண், தன்பாலீர்ப்புள்ள ஆண், இருபாலீர்ப்பை கொண்டோர், திருநர்கள் மற்றும் இடைஇலிங்கத்தவர்களாகத் தம்மை அடையாளப்படுத்தும் சிறுவர்கள் உள்ளடங்கலாக ’ஒதுக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ள சிறுவர்களுக்கு எதிரான பாகுபாட்டை களைவதற்கான உறுதியான சமூக நடவடிக்கைகள் உட்பட திட்டவட்டமான, நன்கு இலக்குவைக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கொண்டமைந்த ஒரு செயற்திறன்மிக்க விரிவான

---

79 பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு, பெண்களுக்கெதிரான அனைத்துவித பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான குழுவுக்கான இலங்கை குறித்த நிழல் அறிக்கை, ஜனவரி 2017, p. 11.

80 கலைடர்ஸ்கோப் மனித உரிமைகள் அறக்கட்டளை மற்றும் Equal Ground, ஐ.நா பெண்களுக்கெதிரான அனைத்துவித பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான குழுவுக்கான இலங்கையில் LBTI நபர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் குறித்த இணையான அறிக்கை, 2017, பந்திகள் 2. 2. 1-8

81 பெண்களுக்கெதிரான அனைத்துவித பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான குழு, இலங்கையின் ஏழாவது தவணை வாரியான அறிக்கையின் இறுதி அவதானிப்புகள், CEDAW/C/LKA/CO/8, 9 மார்ச் 2017, paras 11, 21, 27(g)

82 Equal Ground, இலங்கையில் பல்வகை பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் கொண்ட சிறுவர்களின் உரிமைகள் குறித்த அறிக்கை, பெப்ரவரி 2017.

83 எல்லா இடங்களிலும் சுற்றுச்சூழலை மற்றும் சிறுவர்களை பாதுகாத்தல் (ூயஊநு.்.நுஊீயுவு ழசை டுயமெய) மற்றும் நுஊீயுவு சர்வதேசம், மாற்று அறிக்கை, பெப்ரவரி 28, 2017, p. 11.

84 அனைத்து பிழைத்து வாழ்பவர்கள் நிகழ்ச்சித்திட்டம், இலங்கை, பொஸ்னியா மற்றும் ஹேர்சிகோவினாவில் ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை, 2017, p. 17.

மூலோபாயத்தைப் பின்பற்றுமாறு இலங்கைக்கு பரிந்துரைத்தது.[85] மேலும், "ஒப்புதலுடன் கூடிய தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் நடத்தைகளை குற்றவியல் குற்றமற்றதாக ஆக்குதல், திருநர் சிறுவர்களை சட்ட அமுலாக்கப் பணியாளர்கள் துன்புறுத்துவதைத் தடைசெய்தல், LGBTI சிறுவர்களை பாலியல் துஸ்பிரயோகம் செய்தோர் உட்பட வன்முறைக் குற்றவாளிகளை நீதிக்கு முன் நிறுத்துதல் என்பன உள்ளடங்கலாக LGBTI சிறுவர்களுக்கு எதிரான பாகுபாட்டை எதிர்த்துப் போராடுமாறும்" பரிந்துரை செய்தது.[86]

CRC மேலும் அவதானித்த விடயங்கள்:

> ஆண் பாலியல் வன்புணர்விற்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் இல்லாமை, மற்றும் களங்கம் காரணமாக ஆண் சிறுவர்கள் மீதான பாலியல் துஸ்பிரயோகம் முறைப்பாடு செய்யப்படாமை, தன்பாலீர்ப்புள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் உறவுகள் குற்றவியல் குற்றமாக்கப்பட்டிருத்தல், "ஆண்மையற்றவன்" என அழைக்கப்படுவதில் உணரப்படும் வெட்கம்.[87]

'சிறுவர்களின் பாலியல் துஸ்பிரயோகம் மற்றும் சுரண்டலைத் தடுப்பதற்கு செயற்திறனுள்ள விரிவான கொள்கையை உருவாக்குவதோடு', "ஆண் சிறுவர்களை சட்டரீதியான பாலியல் வன்புணர்வு செய்வதை குற்றமாக்குவதற்காக தண்டனைச் சட்டக் கோவையின் 363 வது பிரிவைத் திருத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறும்'', "ஆண் சிறுவர்கள் மீது புரியப்பட்ட பாலியல் வன்புணர்வு குறித்து புகாரளிப்பதை ஊக்குவிக்கவும், அதனுடன் தொடர்புடைய களங்கத்தை அகற்றவும் பெரிய அளவிலான விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், மற்றும் இத்தகைய மீறல்களுக்கு அணுகக்கூடிய, ரகசியத் தன்மை கொண்ட, சிறுவகளை நட்புடன் அணுகக்கூடிய பயனுள்ள அறிக்கையிடல் வழிவகைகளை உறுதி செய்யுமாறும்" அது இலங்கைக்கு பரிந்துரை செய்தது.[88] இந்த பரிந்துரைகளுக்கு இலங்கை இன்னும் பதிலளிக்கவில்லை.

## உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான LGBTQI + துணைவலிமை சேர்க்கும் செயற்படுகள் மீதான பிரதிபலிப்புகள்

LGBTQI+ உரிமைகளுக்கான துணைவலிமை சேர்க்கும் செயற்படுகள், ஆய்வுக்கு உட்படுத்திய காலப்பகுதியில் LGBTQI+ சமூகத்தினர் மீது கவனம் செலுத்தும் அமைப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வரும் ஒரு போக்கைக் காட்டுகிறது. இதன் விளைவாக, உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் இடம்பெறும் உத்தியோகபூர்வமான செயல்முறைகளில் LGBTQI+ பிரச்சனைகள் தொடர்பில் இப்பொழுது தொடர்ந்து குறிப்பிடப்படுகின்றன. மேலும், குற்றவியல் குற்றம் என்பதிலிருந்து நீக்குதல் மற்றும் பாகுபாட்டுக்கு ஏதிரான நிலைப்பாடு ஆகியவை இந்த துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகளில் மாறாமல் இருக்கும் அதேவேளை, பரந்த அளவிலான ஏனைய பிரச்சனைகளும் (மனித உரிமைகள் கட்டமைப்புகள் மற்றும் பேச்சுவார்த்தைகளில் முன்வைக்கப்பட்டவை) வெளிவந்துள்ளன.

LGBTQI+ பிரச்சனைகளுக்கு பதிலளிப்பதில் இலங்கை அரசாங்கத்தின் மூலோபாயத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை ஆய்வுக்கு உட்படுத்திய காலம் காட்டுகிறது. உள்நாட்டில், மஹிந்த ராஜபக்ச UPFA நிர்வாகம் LGBTQI+ துணைவலிமை சேர்க்கும் செயற்படுகளை குறித்து அலட்சியம் காட்டும் நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தது (அதேவேளை, LGBTQI+ சமூகத்திற்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாடு இடம்பெறுவதற்கு இது வழிவகுக்கிறது). சர்வதேச அளவில், LGBTQI+ சமூகம் பாகுபாட்டுக்கு உட்படுத்தப்படாமை என்பது அரசியலமைப்பு ரீதியாக சிந்திக்கப்படலாம் (உறுப்புரை 12 இன் கீழ்) என சிறப்பாக பதிலளித்து குறுகிய காலத்துக்கு கவனம் செலுத்தியது. அதைத்தவிர, LGBTQI+ சமூகத்தைப் பற்றி குறிப்பிடவோ அல்லது அதன் இருப்புப் பற்றி ஒப்புக்கொள்வதற்கோ எந்தவிதமான குறிப்பிடத்தக்க முயற்சிகளும் செய்யப்படவில்லை.

2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசாங்க மாற்றம் உள்நாட்டு துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகளுக்கு அதிகளவிலான வாய்ப்புகளை வழங்கியதோடு, சர்வதேச ரீதியில் LGBTQI+ சமூகம் மற்றும் அதன் பிரச்சினைகள் பற்றி அதிக அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஒரு சமூகத்தையும் அதன் பிரச்சினைகளையும் அங்கீகரிப்பது என்பது வரவேற்கத்தக்கது என்றாலும், பின்னோக்கிப்

[85] சிறுவர் உரிமைக்கான குழு, இலங்கையின் இணைந்த ஐந்தாவது மற்றும் ஆறாவது தவணை வாரியான அறிக்கைக்கான இறுதி அவதானிப்புகள், CRC/C/LKA/CO/5-6, பெப்ரவரி 2, 2018, https://tbinternet.ohchr.org/Treaties/CRC/Shared%20Documents/LKA/CRC_C_LKA_CO_5-6_30178_E.pdf, para 16(b).

[86] மேற்கூறிய அதே ஆவணத்தில்., para 16(c).

[87] மேற்கூறிய அதே ஆவணத்தில்., 23(b).

[88] மேற்கூறிய அதே ஆவணத்தில்., para 24.

பார்த்தால், அவை LGBTQI+ சமூகத்தின் அக்கறைகளை பதிவு செய்வதற்கான வாய்ப்புகளாக மட்டுமே தோன்றுவதோடு, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான எந்தவொரு அர்த்தமுள்ள வாய்ப்போ அல்லது அரசியல் விருப்பமோ அங்கு காணப்படவில்லை.

சர்வதேச அளவில், LGBTQI+ சமூகத்தின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு நோக்கம் கொண்டுள்ளதாக கூறி அழுத்தங்களின்றி LGBTQI+ சமூகத்தை ஏற்றுக்கொண்டது. சுருக்கமாக கூறின், இந்த பதில்கள் தற்போதைய அரசியலமைப்பில் பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தின் அடிப்படையில் பாகுபாடின்மை உள்ளடங்குகின்றது என்பதை வலுவாக வலியுறுவதிலேயே தங்கியிருந்தன (விமலசிறி வழக்கின் தீர்ப்பு போன்ற முன்னேற்றங்களை மேலதிகமாக எடுத்துக்காட்டியது). இந்த காலகட்டத்தில் அரசாங்கத்தின் பதில்கள் அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறையையும், நிலையான அரசியலமைப்பு ரீதியிலான பாகுபாடின்மை மற்றும் உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகள் எனும் வாக்குறுதியிலும் பெரிதும் தங்கியிருந்தன. எவ்வாறாயினும், குறிப்பாக அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறை ஸ்தம்பித்துவிட்டதாலும், LGBTQI+ சமூகத்தின் நலனுக்காக அரசாங்கம் ஒரு சில நடவடிக்கைகளையே செய்தமையினாலும் அரசாங்கத்தின் பதவிக்காலம் தொடர்கையில் இவற்றில் மீண்டும் மீண்டும் தங்கியிருப்பது சோர்வடையத் தொடங்கியது.

தசாப்தத்தின் முடிவில், LGBTQI+ சமூகத்தைப் பற்றிய யஹபாலனய அரசாங்கத்தின் நிலைப்பாடு குறிப்பாக எந்தவித நிலையான முன்னேற்றமோ அர்ப்பணிப்போ காணப்படாத நிலையில், வெறுமையாகவும் சூழ்ச்சியாகவுமே தோன்றுகிறது. 2019ம் ஆண்டின் கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான இலங்கை பொது ஜன பெரமுனவின் அரசு மாற்றத்தின் பின் எவ்வாறான போக்கு எதிர்நோக்கப்படும் என்பது தெளிவின்றியுள்ளது. அது 2005 - 2014 வரையான மஹிந்த ராஜபக்சவின்.ஃஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசியல் குழுக்கள் மற்றும் அரசியல்வாதிகளை கொண்டு அமைந்திருக்கிறது. எவ்வாறிருப்பினும், அது அதிகமாக பழமை/கலாச்சாரவாத போக்கையுடைய LGBTQI+ சமூகத்தின் மீது தப்பபிப்பிராயங்களை கொண்டதாவே அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது

ஒட்டுமொத்தமாக, LGBTQI+ துணைவலிமை சேர்க்கும் செயற்படுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வெற்றி அளித்திருக்கின்றன. குற்றவியல் குற்றம் என்பதை நீக்குதல் மற்றும் பாகுபாடு-எதிர்ப்புச் சட்டத்தை இயற்றுதல் ஆகியவை அடையப்படவில்லை, மேலும் உள்நாட்டு பிரதான அரசியல் நிகழ்ச்சி நிரலில் மிக சிரியளவிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன. LGBTQI+ துணைவலிமை சேர்க்கும் செயற்பாட்டாளர்கள் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு உத்தியோகபூர்வமான/முறையான துணைவலிமை சேர்க்கும் செயல்முறைகளும் அவர்களது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட அரசியல்மயமாக்கலுக்கு உட்பட்டுள்ளதால், இந்த வெற்றியின் குறைபாட்டுக்கு துணைவலிமை சேர்க்கும் முயற்சிகளை முற்றிலும் காரணமாக கொள்ள முடியாது. எவ்வாறாயினும், உத்தியோகபூர்வமான/முறையான அரசியல் மட்டத்தில் (அதாவது உயர் மட்ட பொது பிரதிநிதிகள், அதிகாரிகள் மற்றும் நிறுவனங்கள்) தொடர்ந்து ஈடுபடுவதன் வினைத்திறன் பற்றிய கேள்விகளை இது எழுப்புகிறது, அந்த மட்டத்தில் அரசியல் அமைப்பு மற்றும் இயக்கவியல் கணிசமாக மாறவில்லை.

ஒட்டுமொத்தமாக, கடந்த 15 ஆண்டுகளில் துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகள் ஒரு பரந்ததளவிலான மனித உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளன. LGBTQI+ இலங்கையர்களின் வாழ்க்கையில் சமமற்ற வகையில் குற்றப்படுத்தல் மற்றும் கணிசமானளவு அரசியல் பாதுகாப்புகள் இல்லாமை என்பவற்றால் இது நிச்சயமாக அவசியமாகிறது. எவ்வாறாயினும், நேரடியான பொருள்சார் நலன்புரி விடயங்களில் செலுத்தப்பட வேண்டிய கவனத்தை கிரயமாகக் கொண்டே இந்த மனித உரிமைகள் மீது கவனம் செலுத்தப்படுகிறது (அவை தொடர்பில் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகள் மூலம் வெறுமனே வெளிப்படுத்துவதோடு சரி). அத்தகைய கவனம், உதாரணமாக, நேரடி நலன்புரி கொடுப்பனவுகள், வேலை உத்தரவாதங்கள் அல்லது LGBTQI+ இலங்கையர்களுக்கான கல்வி ஏற்பாடுகள் போன்ற நடவடிக்கைகளுக்கு பரிந்துரைக்கும்/துணைவலிமை சேர்க்கும். அத்தகைய கவனம் தற்போதுள்ள துணைவலிமை சேர்க்கும் அமைப்புகளுக்கு சிக்கல்களை எழுப்புகிறது, அதாவது பிற பின்தங்கிய சமூகக் குழுக்களுடன் ஒழுங்கமைத்து அல்லது இணைந்து துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகளில் ஈடுபட அவசியமான தேவையை ஏற்படுத்துகிறது. எவ்வாறாயினும், குறிப்பாக தற்போதைய துணைவலிமை சேர்க்கும் முயற்சிகள் சந்திக்கும் சவால்கள் மற்றும் தடைகள் காரணமாக, இந்த கேள்விகள் இலங்கையின் LGBTQI+ சமூகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் துணைவலிமை சேர்க்கும் செயற்பாட்டாளர்களினாலும் மற்றும் ஆர்வலர்களினாலும் சிந்திக்கப்பட வேண்டியவை ஆகும்.

அதன்படி, LGBTQI+ துணைவலிமை சேர்க்கும் செயற்பாட்டாளர்கள் பிற மட்டங்கள், வழிகள் மற்றும் துணைவலிமை சேர்க்கக் கூடிய சிக்கல்களை ஆராய்வது பயனுள்ளது. ஆய்வுக்குட்படுத்திய காலகட்டத்தில் உள்நாட்டு LGBTQI+ துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகளின் குறிப்பிடத்தக்க வெற்றிகளில் ஒன்று, ஒரு பொது நிறுவன மட்டத்தில், ஒரு சுயாதீன ஆணைகுழுவுடன் இணைந்து, மற்றும் உயர் மட்ட அரசியல் பிரதிநிதிகள் அல்லது பொது அதிகாரிகளிடமிருந்து (அமைச்சர்கள், எம்.பி.க்கள் அல்லது அமைச்சக அதிகாரிகள் போன்றோர்) விலகி GRC செயல்முறையை நிறுவியமை.

இதேபோல், பாராளுமன்றம் அல்லது அமைச்சுகள் மூலம் முறையான அரசியல் ஈடுபாடுகளுக்கு பதிலாக, ஒரு அரசியல் கட்சி வலையமைப்பினுள் உள்ளார்ந்த துணைவலிமை சேர்க்கும் செயற்பாட்டின் விளைவாகப் பெறப்பட்ட LGBTQI+ உரிமைகளுக்கான ஜே.வி.பியின் பொது அர்ப்பணிப்பைக் கூறலாம். இத்தகைய (ஒப்பீட்டளவில்) வெற்றிகரமான முயற்சிகள் கீழ்மட்ட அரசியல் தளங்களில் துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை கருத்தில் கொள்ள வேண்டும் என்பதற்கு உத்தரவாதமளிக்கிறது -உதாரணமாக, திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அரசாங்க அலகுகள் மற்றும் மாகாண, உள்ளூராட்சி பிரதிநிதிகளுடன் பொதுத்தளங்களில் எதிர்கொள்வதை குறைக்கக்கூடிய அமைப்புகளில் உதாரணமாக, அரசியல் கட்சியின் உள்ளக செயல்முறைகள் மூலம் மேலும் தீர்க்கப்படுவதற்கு பாரிய சட்ட மற்றும் நிறுவன மாற்றங்களை உள்ளடக்காத திட்டமான பிரச்சனைகளை குறித்து செயற்படல்.

சர்வதேச ரீதியில், LGBTQI+ பிரச்சனைகள் குறித்து அதிகளவில் ஏற்றுக் கொள்வதற்கும் ஆதரவான பரிந்துரைகளை வழங்குவதற்கும் மீளாய்வு செயல்முறைகள் மற்றும் சர்வதேச சமவாய அமைப்புகளை தூண்டுவதில் LGBTQI+ துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகள் வெற்றியளித்துள்ளன. இது சர்வதேச அரங்குகளில் LGBTQI+ சமூகம் குறித்த இலங்கையின் சொற்பிரயோக அணுகுமுறையில் ஒரு சிறிய மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், இந்த மாற்றத்தை கூட மீள மாற்ற முடியும், மேலும் 2005-2010 காணப்பட்ட அரசாங்க நிலைப்பாட்டிற்கு மீளத் திரும்பக்கூடிய வாய்ப்புகள் இருப்பதை பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டியதாயும் உள்ளது. மாறாக, அத்தகைய செயல்முறைகள் மற்றும் அமைப்புகளால் செய்யப்பட்ட பரிந்துரைகள் மற்றும் அரசாங்கம் பொருந்திக் கொண்ட கடமைகள், இலங்கையில் உள்ள LGBTQI+ சமூகத்தை எதிர்க்கும் அல்லது முற்றிலும் புறக்கணிக்கும் நிலைகளை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு அரசாங்க நடவடிக்கைக்கும் ஒரு குறிப்பிட்டளவிலான நிறுவன எதிர்ப்பை உருவாக்கியிருக்கின்றன. கடந்த 15 ஆண்டுகளில் இதுபோன்ற எதிர்ப்பு எந்தளவு உருவாக்கப்பட்டுள்ளது என்பது அடுத்த சில ஆண்டுகளில் தெளிவாகிவிடும்.

சர்வதேச ரீதியில் துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகளில் ஈடுபடும் LGBTQI+ செயற்பாட்டாளர்களுக்கு தற்போதைய நிலைமை பல சங்கடமான உண்மைகளை விளம்புகிறது. இலங்கையில் உள்ள LGBTQI+ சமூகத்தை பாதிக்கும் பிரச்சனைகளை அங்கீகரிப்பதற்கும், அந்த பிரச்சினைகளை தீர்ப்பதில் அரசாங்கத்தை ஊக்குவிப்பதற்கும் சர்வதேச மீளாய்வு செயல்முறைகள் மற்றும் சர்வதேச சமவாய அமைப்புகளை பெறுவதில் அவர்கள் வெற்றிகரமாக இருந்தபோதிலும், உண்மையில் அரசாங்கம் அதன் கடமைகளைப் பின்பற்றாத காரணத்தினால் கள நிலைமையில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை.

இலங்கையின் அரசியல் கலாச்சாரம் ஏற்கனவே சர்வதேச அரங்குகளுக்கு, குறிப்பாக ஐ.நாவுக்கு எதிரானதாக கட்டமைக்கப்பட்டுள்ளதால் LGBTQI+ சமூகத்தின் நலனுக்காக அரசாங்கம் மெய்யான மாற்றங்களைச் செய்வதற்கான அரசியல் விருப்பத்தை சர்வதேச செயல்முறைகளிலிருந்து எளிதில் உருவாக்கிட முடியாது. ஐ.நா. அமைப்புகளின் பரிந்துரைகள், LGBTQI+ துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகள் மற்றும் LGBTQI+ அடையாளங்கள் என்பன மேற்கத்திய கட்டுமானங்கள் அல்லது 'சதித்திட்டங்கள்' என்ற கருத்தியலுக்குள் எளிதில் பொருத்திவிடுகின்றன.

இது தற்போதைய சர்வதேச துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகளுக்கான உத்திகளையும், அவற்றை மேலும் கூர்மைப்படுத்தலாமா என்பதைப் பற்றியும், அவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வளங்களை வேறு இடங்களில் சிறப்பாக பயன்படுத்தலாமா என்பதைப் பற்றியுமான உள்ளக பிரதிபலிப்புக்கு உத்தரவாதம் அளிக்கிறது. குறிப்பாக இரண்டு தளங்களிலும் ஈடுபடக்கூடிய திறன் கொண்ட LGBTQI+ நிறுவனங்கள், இதையும் மேலே குறிப்பிட்ட உள்நாட்டு துணைவலிமை சேர்க்கும் செயற்பாடுகள் பற்றிய பிரதிபலிப்புகளின் பின்னணியிலேயே நோக்க வேண்டும்.

# ஆய்வு

2005 முதல் 2020 வரை இலங்கையில் டுபுடீவுஞ சார் பிரச்சனைகள் குறித்து செய்யப்பட்ட ஆய்வுகளை 5 விரிவான தலைப்புகளின் கீழ் ஒழுங்கு படுத்த முடியும். வன்முறை மற்றும் பாகுபாடு, சட்ட அமைப்புகள், அடையாளத்தின் கட்டமைப்பு, எச்.ஐ.வி தொடர்பான தலையீடுகள் மற்றும் LGBTQI+ நிறுவனங்களிற்கு இடையிலான செயல்முனைப்பு ஆகியனவற்றை விவரிக்கும் பல்வேறு கருப்பொருள்களின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச கல்விசார் இதழ்களில் கல்விசார் ஆய்வு வெளியீடுகளாகவும், உள்நாட்டு மற்றும் சர்வதேச CSOக்கள் வெளியிட்ட ஆய்வுகள் மற்றும் துணைவலிமை சேர் அறிக்கைகள் மற்றும் அரசாங்க திணைக்களங்களால் வெளியிடப்பட்ட ஆய்வுகளாகவும் பரவியுள்ளது.

### *வன்முறை மற்றும் பாகுபாடுகள் சார்ந்த அனுபவங்கள்*

இலங்கையில் LGBTQI+ சமூகம் எதிர்கொள்ளும் வன்முறை மற்றும் பாகுபாடு என்பன செய்யப்பட்ட ஆய்வுகளில் ஒரு குறிப்பிடத்தக்க கருப்பொருளாக இருந்தது. கணிசமான எண்ணிக்கையிலான ஆய்வுகள் டுபுடீவுஞ நபர்களுக்கும், அரச மற்றும் தனியார் துறைகளுக்கும் இடையிலான தம் அனுபவங்களை தெளிவுபடுத்தும் ஆவணப்படுத்திய நேர்காணல்கள் மற்றும் கருத்தாய்வுகளை கொண்டதாக அமைந்தது.

பொதுவாக பொலிஸார் போன்ற சட்ட செயலாக்க முகவர்கள் சம்பந்தப்பட்ட இடங்களிலான வன்முறை அனுபவங்களே பரவலாக காணப்பட்டன. உதாரணமாக, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் 2016 அறிக்கையில் ''ஐந்து விரல்களுமே ஒரே மாதிரியானவை அல்ல'', அத்தகைய அனுபவங்கள் வாய்மொழி மற்றும் உடல் ரீதியான துன்புறுத்தல், தன்னிச்சையான தடுப்புக்காவல், உடல் மற்றும் பாலியல் வன்முறை மற்றும் கையூட்டுப் பெறல்[89] ஆகியவையாக வேறுபட்டு இருந்தன. 61 LGBTI சமூக மக்கள் மற்றும் 17 அரசாங்க அதிகாரிகள், மனித உரிமை ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் சமூக சேவைகள் பயிற்சியாளர்களுடன் இலங்கையின் நான்கு நகரங்களில் நடத்தப்பட்ட நேர்காணல்களின் அடிப்படையில், LGBTQI+ அடையாளத்தை குற்றமாக்குவது பாதிக்கப்பட்டவர்கள் தீர்வுக்கான முறையான நீதி வழிமுறைகளை அணுகுவதை எவ்வாறு தடுக்கிறது என்பதையும் இந்த அறிக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.[90]

தமித் சந்திமாலின் திருநர் இலங்கையர் பற்றிய சூழ்நிலை மதிப்பீட்டில், பொலிஸ் துன்புறுத்தல்களின் ஒரு ஸ்னாப்சாட் (சுருக்கமான விபரங்கள்) வழங்கபட்டுள்ளது மற்றும் பாலியல் வன்புணர்வுகள் மற்றும் கையூட்டம் போன்ற திருநர் இலங்கையர்கள் போலீசாரின் கைகளில் எதிர்கொள்ளும் வன்முறைகள் பற்றிய சூழ்நிலை கணக்குகளையும் இது வழங்குகிறது.[91] இரண்டு மாவட்டங்களில் உள்ள 22 திருநர்களுடனான ஆழமான நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்ட இந்த அறிக்கை, வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் வழக்குத் தொடர்வதால் தங்களைத் தாங்களே தண்டனைக்குட்படுத்தலாம் என்ற அச்சத்தின் பொருட்டும், பிற நிறுவனங்களால் ஊக்கமிழக்கச் செய்யப்படுவதனாலும், மற்றும் பொதுச்சமூகத்தில் உள்ள களங்கம் மற்றும் அவமானம் ஆகியவற்றால் தீர்வுக்கான வழிமுறைகளைத் தொடரவில்லை என்பதையும் விரிவாக விவரிக்கிறது.[92]

இதுபோல, பெண்கள் உதவிக்குழுவினால் 2014ம் ஆண்டு வெளியிடப்பட்ட நொட் கொன்ன டேக் இட் லையிங் டௌன்" (''Not Gonna Take It Lying Down''), அரச மற்றும் அரசு சாரா தரப்பினரினால் பொது இடங்களில் அநேகமான நேரங்களில் நடத்தப்படும் வன்முறைகளை இனம்கண்டது.[93] 33 தன்பாலீர்ப்புள்ள பெண்கள், இருபாலீர்ப்புள்ள பெண்கள் மற்றும் திருநர்கள் (டுடீவு நபர்கள்) இடையே நடத்தப்பட்ட தரத்தை மதிப்பிடும் நேர்காணல்கள் மற்றும் மேலதிகமாக சமூக பங்காளர்கள் 51 பேரிடையே நடத்தப்பட்ட தரத்தை மதிப்பிடும் நேர்காணல்களை சார்ந்து செய்யப்பட்ட இவ்வாய்வு, தனிப்பட்ட விதமாக காணப்படும் வன்முறைகளான குடும்ப அங்கத்தவர்களால் நடத்தப்படும் வன்முறை, முக்கியமாக உளரீதியான வன்முறைகள் மற்றும் LBT நபர்களிடையே காணப்படும் நெருங்கிய துணை

---

[89] Human Rights Watch (ஹியூமன் ரைட்ஸ் வொட்ச் அமைப்பு), "ஐந்து விரல்களும் ஒரே மாதிரியானவை அல்ல'' *பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல் ஈர்ப்பு போன்ற காரணிகளினால் இலங்கையில் நிகழும் பாகுபாடுகள்,* 2016, https://www.hrw.org/report/2016/08/15/all-five-fingers-are-not-same/discrimination-grounds-gender-identity-and-sexual

[90] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

[91] தமித் சந்திமால், திருநர் வெறுப்பு கலாச்சாரத்தை ஆராய்தல்: இலங்கையில் திருநர்கள் சந்திக்கும் களங்கம், பாகுபாடு மற்றும் வன்முறை குறித்த சூழ்நிலை ஆய்வு, கொழும்பு: Equal Ground, 2014.

[92] மேற்க்கூறிய அதே ஆவணத்தில். , pp. 72-74.

[93] பெண்கள் உதவிக்குழு, ''Not Gonna Take It Lying Down'' இலங்கையில் உள்ள டுடீவு நபர்களால் கூறப்படும் வன்முறை மற்றும் பாகுபாட்டை சந்தித்த அனுபவங்கள், கொழும்பு: WSG, 2014. இந்த அறிக்கை "பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் அல்லது பாலியல் வெளிப்பாடு காரணமாக எதிர்பாலீர்ப்பை பின்பற்றாத மற்றும் திருநர்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளை கையாள நடத்தப்படும் செயற்பாட்டு ஆய்வு" எனும் விரிவான ஆய்வின் ஒரு பகுதியாகும், சர்வதேச தன்பாலீப்புள்ள ஆண்கள், தன்பாலீர்ப்புள்ள பெண்களுக்கான மனித உரிமை ஆணையகத்தினால் (IGLHRC) வழிநடத்தப்பட்ட 5 நாடுகளுக்கிடையிலான நிகழ்ச்சித்திட்டம்.

மூலமாக ஏற்படும் வன்முறை போன்றவற்றை இனம்கண்டது. எதிர்பாலீர்ப்பினராகவோ எதிர்பாலீர்ப்பு இல்லாதாராகவோ இருந்தாலும் LBT நபர்களிடையே கணப்படும் வன்முறைகளுக்கான இடைவெளிகளைப் பற்றிய புரிதல் சிக்கலாகிறது.[94]

ஆண்ட்ரியா நிக்கோல்ஸ் எழுதிய ‘‘டான்ஸ் பொன்னாயா, டான்ஸ்!’’ என்பது இலங்கையில் திருநங்கை பாலியல் தொழிலாளர்களுடனான 24 ஆழமான நேர்காணல்கள் மற்றும் 3 இலக்குக் குழுகலந்துரையாடல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட பகுப்பாய்வின் அடிப்படையில் திருநங்கையினர் மீதான பொலிஸாரின் தவறான நடத்தையை ஆராய்கிறது.[95] அதன் விளைவுகள் திருநங்கை பாலியல் தொழிலாளர்கள் தங்கள் பெண்மை பால்நிலை வெளிப்பாடு மற்றும் தன்பாலீர்ப்பு போன்றவற்றினால் பொலிஸாரினால் தொடர் பாதிப்புக்குள்ளதல் நடவடிக்கைகளை அனுபவிக்க நேரிடுகின்றது என்று குறிப்பிடுகின்றன. இந்த நிந்தனைகளில் வாய்மொழி, உடல் மற்றும் பாலியல் சார்ந்த நிந்தனைகளும் பாதிப்புக்குட்படுத்தப்படல் மற்றும் குற்றம் சாட்டப்படல் என்பவற்றின் போதான பொலிஸாரின் நடவடிக்கைளில் காணப்படும் சமத்துவமின்மை ஆகியவையும் அடங்கும்.[96]

இத்தகைய துன்புறுத்தல் மற்றும் வன்முறைக்கான ஏதுக்கள் குறித்து இந்த ஆய்வு சில பொதுவான முடிவுகளுக்கு வருகிறது. தற்போதுள்ள குற்றவியல் சட்டம் ஒரு பெரிய தடைக்கல்லாக உள்ளது, இது அரசு மற்றும் தனியார் செயற்பாட்டாளர்கள் துன்புறுத்தப்படும் கலாச்சாரத்தை ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களின் குரல்களை நெரித்தல் மற்றும் அவர்களுக்கு அவமானமான சூழ்நிலையை உருவாக்குவதுமாக உள்ளது. தொடர்ந்து தனிநபர்களின் உண்மையான அல்லது மற்றவர்களால் உணரப்பட்ட பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தின் மீதான சகிப்புத்தன்மையின்மையால் தூண்டப்படும் வன்முறை மற்றும் துன்புறுத்தல்கள் என்பவற்றை இந்த ஆய்வு கோடிட்டுக் காட்டுகிறது. இத்தகைய சகிப்புத்தன்மையின்மை நபரின் உண்மையான பால்நிலை அடையாளம் அல்லது பாலீர்ப்பு, அவர்கள் வன்முறையை அனுபவிப்பவர்களது சமூக அமைப்பு மற்றும் அவர்களின் ஒப்பீட்டளவிலான பொருளாதார நிலையைப் பொறுத்து பாதிப்புக்குள்ளாதல் மற்றும் சுரண்டலிற்குட்படல் என்பவற்றைப் பொறுத்து வேறுபட்ட விளைவுகளை விளைவிக்கிறது. நிக்கோல்ஸின் ”டான்ஸ் பொன்னாயா, டான்ஸ்!” “பாதிப்பிற்குட்படுதலின் குறுக்கீடு தன்மை’’ பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றை உள்ளடக்கியதென்பதை பிரதிபலிக்கின்றது.[97]

சற்றே வேறுபட்ட தளத்தில் சில ஆய்வுகள் நேரடியாக வன்முறைகளை நோக்கி, துன்புறுத்தல் மற்றும் பாகுபாடு பற்றிய LGBTQI+ தனிநபர்களின் அனுபவங்களை ஆய்கையில் சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி மற்றும் வேலைவாய்ப்பு போன்ற அடிப்படைதேவைகளை அணுக முயற்சித்த சந்தர்ப்பங்களில் இவை பரவலாக இருப்பதைக் கண்டறிந்தது. பால்நிலை அடையாளங்கள் மற்றும் பாலீர்ப்பு காரணமாக LGBTQI+ தனிநபர்கள் பாதிக்கப்படுவதில் உள்ளார்ந்த ஒரு வடிவம் காணப்படுவதனை இந்த ஆய்வு வெளிப்படுத்தியது. எடுத்துக்காட்டாக, திருநர் வெறுப்புணர்வு கலாச்சாரத்தை பகுப்பாய்வு செய்கையில் பணியிடங்கள் மற்றும் சுகாதார வழங்குநர்கள் மூலமான பாகுபாடு திருநர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான பொருள் இழப்பு மற்றும் மோசமான சுகாதார விளைவுகளை அனுபவிக்க வழிவகுக்கிறது என்பதை காட்டுகிறது.[98]

‘‘ஐந்து விரல்களும் ஒரே மாதிரியானவை அல்ல’’ ஆய்வு உத்தியோகபூர்வ ஆவணங்களைப் பெறுவதில் திருநர்களின் போராட்டங்கள் மற்றும் தேவையற்று, ஊடுருவும் வகையிலான ஆவணங்கள் மற்றும் கேள்வி செயல்முறைகள், அத்துடன் அதிகாரிகளின் தன்னிச்சையான முடிவெடுக்கும் செயல்முறைகள் தேசிய அடையாள அட்டை வழங்கல் ஆகியவற்றை முழுமையாக ஆராய்கிறது. இது தேசிய அடையாள அட்டை போன்ற முக்கியமான ஆவணங்களை மாற்றுவதற்காக சகித்துக் கொள்ளப்பட வேண்டிய கட்டாயம் என்பவற்றை ஆய்கிறது.[99] 2016 ஆம் ஆண்டு முதல், அபிவிருத்தியில் பங்கேற்பதற்கான கலந்துரையாடலுக்குரிய நிறுவனத்தினது திருநர்கள் பற்றிய விரைந்த சூழ்நிலை மதிப்பீட்டில் திருநர்களுக்கு எதிரான பாகுபாடு விளக்கப்பட்டுள்ளது.[100] திருநர்களின் எச்.ஐ.வி பற்றிய அறிவு மற்றும் சுகாதாரத்துறையை அணுகல் பற்றி கண்டறியப்பட்டவற்றை தவிர, இவ் ஆய்வறிக்கை பொதுவாக திருநர் இலங்கையர்கள் மிக உயர்ந்த உளவியல் மன அழுத்தத்தை அனுபவிக்கிறார்கள் என்பதையும் காட்டியுள்ளது -கிட்டத்தட்ட திருநர்களில் பாதி சதவீதம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் குறைந்தபட்சம் கால் பங்கு சதவீதத்தினர் தங்களுக்கு பொருந்தும் சட்ட

---

94 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 20-21

95 ஆண்ட்ரே நிகோலஸ், ”டான்ஸ் பொன்னயா டான்ஸ்! இலங்கையில் உள்ள திருநர் பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான பொலிஸ் வன்முறை”, பெண்ணிய குற்றவியல் 5, இலக்கம். 2 (2010): pp. 195-222.

96 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 215-19.

97 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

98 சந்திமால், திருநர் வெறுப்பு கலாச்சாரத்தை ஆய்வு செய்தல், pp. 39-48.

99 Human Rights Watch (ஹியூமன் ரைட்ஸ் வொட்ச் அமைப்பு), “ஐந்து விரல்களும் ஒரே மாதிரியானவை அல்ல””.

100 அபிவிருத்தியில் பங்குபற்றல் தொடர்பாடலூக்கான நிறுவனம், இலங்கையில் திருநர்கள் குறித்த விரைந்த சூழ்நிலை ஆய்வு, கொழும்பு: NSACP/FPA, 2016, https://www.aidsdatahub.org/sites/default/files/publication/Sri_Lanka_Rapid_Situational_Assessment_of_TGs_2017.pdf

அமைப்புகளைப் பற்றி போதுமான அறிவு இல்லை என்று நம்பினர்.[101] திருநர்கள் அணுகக்கூடியதான உகந்த சுகாதார வசதிகளை நிறுவுவது குறித்து இந்த அறிக்கை பல்வேறு பரிந்துரைகளை அளிக்கிறது.[102]

பெரும் மட்டத்தில் குறிப்பிட்ட மக்கள் குழுவினர் பாகுபாட்டினால் பாதிக்கப்படுவதை உறுதிப்படுத்த களங்கத்தின் குறியீடுகள் முயற்சிக்கின்றன. 2010[103] மற்றும் 2017[104] ஆம் ஆண்டில் NSACPயால் நியமிக்கப்பட்ட PLHIVகான களங்கக் குறியீடுகளில் ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள் (MSM) ஒரு முக்கிய மக்கள் தொகையாக உள்ளார்கள், இருப்பினும் அவர்கள் LGBTQI மக்களோடு ஒப்பிடும்போது ஆழமான களங்கம் மற்றும் பாகுபாட்டு அனுபவங்களை எதிர்கொள்ளவில்லை. LGBT நபர்களுக்கு குறிப்பாக ஒரு களங்ககுறியீட்டை உருவாக்கும் முயற்சி 2012 இல் ஈகுவல் கிரவுண்ட் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டது.[105] 119 எல்ஜிபிடி நபர்களுடன் நடத்தப்பட்ட கேள்வி ஆய்வை பயன்படுத்தி, LGBTQI மக்களில் முக்கால்வாசிப் பேர் பல்வேறு சமூக அமைப்புகளில் உடல், உணர்ச்சி, வாய்மொழி மற்றும் உளவியல் நிந்தனை ஆகிய வடிவங்களில் பாகுபாட்டை எதிர்கொண்டுள்ளனர் என்று இவ் அறிக்கை கண்டறிந்துள்ளது.[106] இதற்க்கு தொடர்புடைய வகையில் LGBT குறித்த களங்கம், இலங்கையர்களான LGBT நபர்களினாலும் ஆழமாக உள்வாங்கப்பட்டுள்ளது, இது அவர்கள் தாம் சந்தித்த பாகுபாடான நடத்தையிலிருந்து எழும் களங்கம் அல்லது அவமானம் காரணமாக அல்லது தம் பாலியல் ஈர்ப்பு அல்லது பால்நிலை அடையாளம் காரணமாக ஏற்படும் பயத்தினால் இந்த களங்கம் நிர்வகிக்கப்படுகிறது.[107]

எச்.யு.எஸ். சமரவீர மற்றும் பி.ஜி.ஐ.எம். சமரசிங்க ஆகியோர் பாகுபாட்டினால் விளையும் LGT இலங்கையர் மீதான பாதிப்புக்களை இலங்கை சமூகத்தின் நெறிமுறைசார்ந்த எதிர்பாலீர்ப்புக் கலாச்சாரத்தின் ஒரு விளைபொருளாக சட்டகப்படுத்துகின்றனர்.[108] 40 தன்பாலீர்ப்புடையோர், திருநர் மற்றும் பாலியல் தொழிலாளிகள் ஆகிய இலங்கையர்களை மாதிரியாகக் கொண்ட அவர்களது அறிக்கை வெவ்வேறு அடையாளங்கள் வெவ்வேறு இயங்குநிலை சார்ந்த பாகுபாடுகளை விளைவிக்கிறது என்பதைக் காட்டியது. திருநர் மற்றும் பாலியல் தொழிலாளிகளுக்கான சமூக விலக்குடன் ஒப்பிடுகையில் தன்பாலீர்ப்புடையோர் மீதான சமூக பாகுபாடு பரவலாக உள்ளது.[109] இதேபோல், டி.எம் லியனகே மற்றும் ஏ.எஸ். ஆதிகாரம் ஆகியோர் இலங்கையில் பணியிடங்களில் பாகுபாடு காட்டப்படுவதைக் காண்கின்றனர்.[110] 16 தன்பாலீர்ப்புடைய ஆண் ஊழியர்களுடனான ஆழமான நேர்காணல்கள், தனித்துவிடப்படல், நிராகரிப்பு, தாக்குதல் கருத்துக்கள், பாலியல் அவதூறுகள், அடிக்கடி பகிடிக்கு உட்படல் மற்றும் இழிவான பெயர்களில் அழைக்கப்படுவது, வதந்திகளைப் பரப்புவது, பாலியல் தாக்குதல், தேவையற்ற தொடுதல் மற்றும் அச்சுறுத்தல்கள் அல்லது பாலியல் சுரண்டல் மூலமான கையூட்டு ஆகியவற்றின் மூலம் துன்புறுத்தல் நிகழ்தல் பற்றி விளக்குகிறது. இவ்வறிக்கை எதிர்பாலீர்ப்பு இயல்பானதென்று ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட பணியிடங்களில் எதிர்பாலீர்ப்பு ஆதிக்கத்தினால் எழும் பாலியல் துன்புறுத்தல் என இதை வகைப்படுத்துகிறது.[111] இவ்வறிக்கையின் ஆசிரியர்கள் மற்றுமொரு இசைந்த ஆய்வு மூலம் தன்பாலீர்ப்புடைய ஊழியர்கள் வேலைதளத்தில் இந்த எதிர்பாலீர்ப்பு ஆதிக்க துன்புறுத்தலை எவ்வாறு சமாளிக்கிறார்கள் என்பதை ஆராய்ந்துள்ளார்கள்.[112] துன்புறுத்தலை எதிர்கொள்ளும் தன்பாலீர்ப்புடைய ஊழியர்களின் சமாளிக்கும் உத்திகள் களங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன, இது பல்வேறு மற்றும் சிக்கலான சமாளிக்கும் உத்திகளுக்கு வழிவகுக்கிறது, இது நபர்கள் களங்கத்தின் குறியிடல்களை ஏற்றுக்கொண்டார்களா அல்லது அவர்கள் தங்கள் பாலீர்ப்பு பற்றி வெளிப்படையாக உள்ளார்களா என்பதைப் பொறுத்தது. ஆய்வறிக்கையின் பல பக்கங்களில் ஊடக சூழலில் உள்ள பாகுபாடு கொண்ட இயங்குநிலையை வெளிக்காட்டியது.[113]

---

[101] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 34-50.

[102] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p.55.

[103] NSACP, UNAIDS, குடும்ப திட்டமிடல் இலங்கை மற்றும் பலர், எச்.ஐ.வியுடன் வாழும் நபர்கள் களங்கக் குறியீடு இலங்கை, கொழும்பு: NSACP, 2010, https://www.aidsdatahub.org/sites/default/files/documents/UNAIDS_Family_Planning_Association_Sri_Lanka_and_Partners_(2010)_People_Living_with_HIV_Stigma_Index_Sri_Lanka.pdf

[104] ஜெ. விதானபதிரன, பி. சேனாநாயக்க, என். விஜயகுணவர்தன மற்றும் எம். பெர்னாண்டோ, இலங்கையில் எச்.ஐ.வியுடன் வாழும் நபர்களிடையே களங்க ஆய்வு, கொழும்பு: NSACP, 2017, https://www.aidsdatahub.org/sites/default/files/publication/Sri_Lanka_Stigma_Assesment_of_PLHIV_2017.pdf

[105] Equal Ground, *இலங்கைக்கு தன்பாலீர்ப்புள்ள பெண்கள் தன்பாலீர்ப்புள்ள ஆண்கள் மற்றும் திருநர்கள் தொடர்பான களங்கக் குறியீடு, கொழும்பு:* Equal Ground, 2012, https://equalgroundsrilanka.blog/wp-content/uploads/2017/12/The-LGBT-Stigma-and-Discrimination-Index-of-Sri-Lanka-A-project-of-EQUAL-GROUND.pdf

[106] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 102-3.

[107] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 104.

[108] எச்.யு.எஸ் சமரவீர மற்றும் பி.ஜி.ஐ.எம் சமரசிங்க, பேசக்கூடாத பொருளாக பாலியல்: "நகர்ப்புற இலங்கையில் LGT என அடையாளப்படுத்துவோர் மற்றும் பாலியல் தொழிலாளிகளுக்கெதிரான பாகுபாடு", ஒன்பதாவது சர்வதேச ஆய்வுக்கருத்தரங்கு, ரத்மலானை: கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (2016): pp. 50-54.

[109] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., P.53.

[110] னு டி. எம். லியனகே மற்றும் ஏ.எஸ். அதிகாரம், "இலங்கையில் எதிர்பாலீர்ப்பு ஆதிக்கம் கொண்ட வேலைத்தளங்களில் தன்பாலீர்ப்புள்ள ஆண்களின் அனுபவங்கள்", கொழும்பு: முகாமைத்துவம் மற்றும் நிதி பீடம், கொழும்பு பல்கலைக்கழகம், 2017.

[111] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

[112] எம். லியனகே மற்றும் ஏ. எஸ். அதிகாரம், "குறியீட்டு பெயர்களை ஏற்றுக்கொள்ளலா அல்லது நிராகரித்தல்: தன்பாலீப்புடைய ஆண்கள் பணித்தளங்களில் எவ்வாறு துன்புறுத்தலை சமாளிக்கின்றனர்", முகாமைத்துவத்தில் பால்நிலை, பாகம். 34 No. 8, (2019): pp. 644-64.

[113] மேற்க்கூறிய அதே ஆவணத்தில். pp. 657-63

பாதிக்கப்பட்ட முக்கிய மக்கள் குழுக்களுக்கு எதிரான களங்கம் மற்றும் பாகுபாட்டை பிரதிபலிப்பதிலும் நிலைநிறுத்துவதிலும் அச்சு ஊடகங்களின் பங்கை ஆராயும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) ஆய்வு, மற்ற முக்கிய மக்கள் குழுக்களுடன் ஒப்பிடுகையில் எச்.ஐ.வி தொற்றுடன் வாழ்வோர், ஆண்களுடன் உடலுறவில் ஈடுபடும் ஆண்கள் மற்றும் திருநர் ஆகியோர் மீதான ஊடகப் பிரசித்தம் ஒப்பீட்டளவில் குறைவாக (முறையே 5%, 1.7% மற்றும் 0.5%) காணப்பட்டதென கண்டறிந்தது.[114] ஆயினும்கூட, அவை இன்னும் எதிர்மறையான கருத்துக்களான: தன்பாலீர்ப்பு மற்றும் பால்நிலை மாற்றம் ஆபத்தானது, இலங்கையின் நீண்டகால பௌத்த கலாச்சாரத்தை அச்சுறுத்துகிறது, வெளியில் இருந்து வந்த மற்றும் வக்கிரமான மேற்கத்திய கலாச்சாரத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது மற்றும் சிறுவர் மீதான பாலியல் வன்முறைக்கு ஒரு முகமூடியாக உள்ளது.[115] குறிப்பாக பிரபல ஊடக கலாசாரங்களில் திருநர் வெறுப்பு கலாசாரத்தை ஆய்வு செய்வதன் மூலம், இலங்கையரான திருநர்கள் மீது களங்கத்தை ஏற்படுத்தும் ஊடக கோட்பாடுகளும் ஆய்வுகளில் இனம்காணப்பட்டுள்ளன.[116]

### *சட்ட கட்டமைப்புகள்*

பாகுபாடு கொண்ட சட்ட விதிகளின் விளைவுகளை (குறிப்பாக குற்றவியல் விதிகள்) ஆய்வு செய்யும் போது, அவை ஆய்வு முழுவதும் பரவலாக இருந்தது, இந்த சட்ட விதிகளை பகுப்பாய்வு செய்வதையும், சட்ட மாற்றத்திற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதையும் மையமாகக் கொண்டதாக இந்த ஆய்வு உள்ளது.

அரித்த விக்கிரமசிங்க, சர்வதேச அளவில் துளிர்க்கும் வழக்குச் சட்டம், சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச அளவிலான அரசாங்க அறிக்கைகள் என்பவற்றிற்கு எதிராக சட்ட விதிகளை குற்றமாக்குவதை ஆராய்கிறார். அத்தோடு இப்போது இலங்கையில் அந்தரங்கதிற்கான உரிமை மற்றும் LGBTQI+ தனிநபர்களின் மீதான பாகுபாடற்ற நிலை ஏற்கனவே உள்ளதாகவும் அதனால் சம்மதத்துடனான தன்பாலீர்ப்புள்ள நபர்களுக்கிடையிலான பாலியல் நடத்தை மறைமுகமாக குற்றமற்றதாக்கப்பட்டுள்ளது என்றும் வாதிடுகிறார்.[117] இந்த கண்டறிதல்கள ஏ.எச். விஜயத்தினுடைய LGBTQI+ அடையாளம் தொடர்பான குற்றவியல் ஏற்பாடுகளானவை நிறுவனமயமாக்கப்பட்ட சட்ட பாகுபாட்டின் பரந்த கட்டமைப்பிற்குள் விமலசிறி தீர்ப்பு மற்றும் GRC செயல்முறை போன்ற சமகால நேர்மறையான சட்ட அபிவிருத்திகள் பற்றிய சூழ்நிலை மதிப்பீட்டின் மீளாய்வுடன் ஒத்துப்போகிறது.[118]

பொலிஸ், சட்டத்தரணிகள், மருத்துவ நிபுணர்கள், LGBT சமூக உறுப்பினர்கள், மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் நாடு தழுவிய அளவில் நடத்தப்பட்ட 109 நேர்காணல்களைப் பயன்படுத்தி சட்டம் மற்றும் LGBT நபர்கள் மீதான அதன் தாக்கம் தொடர்பான நிலைமையை பிரியா தங்கராஜா மதிப்பிடுகிறார்.[119] இந்த சட்டங்களின் கீழ் எல்ஜிபிடி நபர்களின் வாழ்க்கை அனுபவங்களை ஆய்வு செய்யும் போது, இந்த அறிக்கை 365 மற்றும் 365A பிரிவுகளை குழந்தைகள் துஸ்பிரயோகத்திற்கு எதிரான பாதுகாப்புகளாக அதிகாரிகள் வலியுறுத்துவதையும் விமர்சிக்கிறது, மேலும் தண்டனைகளுக்கு எதிராக நேர்மறையாக பயன்படுத்தக்கூடிய சட்ட விதிகளை ஆராய்கிறது.[120] LGBT பிரச்சினைகளுக்கு உணர்திறன் கொண்ட வழக்கறிஞர்களின் வலையமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் வழக்கறிஞர்களின் கருத்துக்களையும் இது அளவிடுகிறது. அதே வகையில், திருநர் வெறுப்பு கலாச்சாரத்தை சண்டிமால் பகுப்பாய்வு செய்கையில், இதற்கு உள்ளக சமூகத்திற்குள் உள்ள தடைகள் மற்றும் அடிப்படை உரிமை மனுக்கள் போன்ற சட்ட நடவடிக்கைகளை தொடர்வதில் உள்ள நீண்ட சிரமங்களை அறிந்திருக்கும் நிலையில் திருநர் இலங்கையர்கள் இன்னும் வலுவாக அணிதிரள வேண்டும் என்று வழக்கறிஞர்களால் வலியுறுத்தப்பட்டது.[121]

ஊர்மிளா புல்லட் கொழும்பில் திருநங்கைகளுடன் இரண்டு அரை-கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள் மற்றும் மூன்று இலக்குக் குழு கலந்துரையாடல்களை பயன்படுத்தி இலங்கையில் திருநராக இருப்பது என்றால் என்ன என்பதை சட்டத்துக்குள் இணக்கம் செய்ய முடியும் முடியும் என்பதை ஆராய்கிறது.[122] பால்நிலை மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை மற்றும் மனநல தலையீடுகள் மீதான சார்புயின்மை அதன் திருநர் அடையாளங்களில் அவர் காணும் வேறுபாடுகள், பால்நிலை அடையாளத்திற்கு

---

[114] என். 'ர்மா மற்றும் எச். பிலிமோரியா, களங்கம், ப்பாகுபாடு மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள்: செய்தி ஊடக விளியீடுகளை கவனமாக ஆய்வு செய்வதன் மூலம் இலங்கையில் ஊடக துணைவலிமை சேர்த்தல் பணிகளை பலப்படுத்தல். பாங்காக்: UNDP, 2013, p. 6.

[114] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 7.

[115] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 7.

[116] சந்திமால், திருநர் வெறுப்பு கலாச்சாரத்தை ஆய்வு செய்தல், pp. 59-60.

[117] அரித்த விக்ரமசிங்க, "தன்பாலீர்ப்பும் சட்டமும்", கொழும்பு சட்டக்கல்லூரி மீளாய்வு (2017): pp. 115-124.

[118] ஏ. எச். விஜயத், இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலை அடையாள பல்வகைமை, இலங்கை குற்றவியல் சட்ட அமைப்பில் பாலியல் சிறுபான்மையினரின் உரிமை மற்றும் ஸ்தானத்தை விசேட குறிப்பாக கொண்ட கண்ணோக்கு, பாகம் 3, வெளியீடு 1, 2018, pp. 53-63

[119] பிரியா தங்கராஜா, இலங்கையில் டுபுடீவு நபர்களின் சட்ட பாதுகாப்பை பலப்படுத்தல்: குற்றமற்றதாக்குவதற்கான பாதை, கொழும்பு: Equal Ground, 2013.

[120] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 18-22.

[121] சந்திமால், திருநர் வெறுப்பு கலாச்சாரத்தை ஆய்வு செய்தல், pp. 69, 77.

[122] புல்லட், ஊர்மிளா, "இலங்கையில் திருநராதல்: இலங்கை மற்றும் இந்தியாவில் பால்நிலை அடையாளம் மற்றும் சட்டம்", SSRN 2425503 (2012).

காணப்படும் குறைவான நிர்வாகம் சார் தடைகள் காரணமாக, ஆர்ஜன்டினாவின் பால்நிலை அடையாள சட்டம் போன்ற சட்டம் சிறப்பாக அமையும் என அவர் தன் முடிவுரையில் கூறுகிறார். ஏனெனில் அது பால்நிலை மாற்று சத்திர சிகிச்சை மற்றும் உளவியல் சிகிச்சைகளில் தங்கி இருக்கவில்லை மற்றும் அது பாழ்நிலையின் விரிவான இருமையின்மை கருத்தியலை கொண்டுள்ளது.[123]

ஐக்கிய இராச்சியத்திற்கு நேரெதிரான இலங்கையின் சட்டரீதியான நிலைமையானது தினுசாபண்டிதரத்னவினால் மிகவும் கணிசமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஆசியாவில் முன்னாள் பிரித்தானிய காலனிகள் ஏன் தன்பாலீர்ப்புள்ள உறவுகளை அகற்றுவதற்கான அழைப்புகளை எதிர்த்தன மற்றும் சீர்திருத்தத்திற்கான வாய்ப்புகள் என்ன என்பது ஆய்வு செய்யப்படுகிறது.[124] பண்டிதரத்ன, மேற்கில் உள்ள அண்மைய போக்குகள், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் குற்றமற்றதாக்குவதனை எதிர்பார்க்கவில்லை என்றும், உண்மையில், அதை அடைவது மிகவும் கடினமாக இருக்கலாம் என்றும் காண்கிறார்.[125] மேற்கத்திய அரசாங்கங்கள் ‘‘கடுமையான கோரிக்கைகளை” தவிர்க்க வேண்டும் என்று அவர் முடிக்கிறார், ஏனெனில் இது LGBTQI+ உரிமைகள் மேற்கத்திய ‘‘உரிமை” என்ற தவறான மற்றும் எதிர் கண்ணோட்டத்தை ஊட்டுகிறது.[126] பண்டிதரத்னாவும் மேலே சண்திமாலைப் போலவே, குழந்தைகள் துஸ்பிரயோகத்தை தடுப்பது என்பது LGBTQI+ குற்றமாக்குவதற்கான ஒரு நியாயப்படுத்தலாக எதிர்கொள்ளப்படுவதை கூறுகிறார்.[127] குற்றமாக்கலை பராமரிக்கும் காரணிகளாக அவர், குற்றமாக்குதல் “செயல்படுத்தப்படாது’’; மேற்கில் இருந்தான ‘‘கலாச்சார” மற்றும் ‘‘தார்மீக” சுதந்திரத்தின் வலியுறுத்தல்கள் பொது சொற்பொழிவு மற்றும் சட்ட கட்டமைப்புகள் பாலின சமத்துவமின்மைகளை விட இனமத பிளவுகள் மீது கவனம் செலுத்துதல் வலுவான நீட்டிக்கப்பட்ட குடும்ப வலையமைப்புக்கள் மற்றும் பல தலைமுறை குடும்பங்கள் ஆகிய தவறான அனுமானங்கள்கொண்ட காரணிகளை அவர் பட்டியலிடுகிறார்.[128] இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பொருத்தமான சட்டங்கள்” LGBTQI+ அடையாளத்தை குற்றமாக்குவதற்கான இங்கிலாந்தின் வரலாற்றைக் கண்டறிவதற்கும், அது எவ்வாறு இலங்கையில் LGBTQI+ குற்றமாக்குவதனை விட்டுச் செல்கிறது என்பதையும் கண்டறிவதற்காக எம்.ஏ.என். சந்திரதிலக மற்றும் பி. மகாநாமஹேவ ஆகியோரும் ‘‘பாலீர்ப்பு மற்றும் மனித உரிமைகள்” என்ற ஒப்பீட்டு சட்ட ஆய்வை நடத்தினர்.[129]

அரசாங்க எச்.ஐ.வி தடுப்பு உத்திகளுடன் தொடர்புடைய LGBTQI+ நபர்களுக்கு பொருந்தும் இலங்கையின் சட்ட அமைப்புகளை கமனி ஜினதாசவின் சட்ட ரீதியான சுருக்கம் ஆராய்கிறது.[130] அடிப்படை சேவைகளை அணுகும் திறனை அதிகரிக்கவும், பாதுகாப்புச் சட்டம் இல்லாத நிலையில் அவர்கள் எதிர்கொள்ளும் களங்க அளவுகளைக் குறைக்கவும் எச்.ஐ.வி தொற்றுடன் வாழும் மற்றும் LGBTQI+ நபர்களுக்கு சட்ட ஆதரவை வழங்க வேண்டிய அவசியம் உள்ளது என்று அதில் கண்டறிந்துள்ளது. எச்.ஐ.வி தொற்றுடன் வாழ்வோர், LGBTQI சமூகத்தின் பாதிக்கப்பட்ட முக்கிய மக்களின் உரிமைகளை வலுப்படுத்தும் முன்னோடிகளை நிறுவ வழக்குகளை தாக்கல் செய்வது முக்கியம் என்று ஜினதாசா முடிக்கிறார்.[131] நிறுவன எல்லைக்குள், 2013 UNDP-IDLO அறிக்கை பாலீர்ப்பு, பால்நிலை அடையாளம் மற்றும் எச்.ஐ.வி தொடர்பாக மனித உரிமைகளை நிவர்த்தி செய்வதற்கான மனித உரிமைகள் ஆணையத்தின் திறனை மதிப்பீடு செய்கிறது.[132] முறைசாரா நேர்காணல்கள் மூலம், மனித உரிமைகள் ஆணைக்குழு ஊழியர்களிடையே பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் பற்றிய விழிப்புணர்வு, புரிதல் மற்றும் திறன் என்பவற்றைப்பற்றிய விளக்கத்தில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை இருப்பதை அறிக்கை கண்டறிந்தது (அதன் பின்னர் இந்த நிலைமை கணிசமாக மாறிவிட்டது, குறிப்பாக 2015 இல் ஒரு சுயாதீன ஆணைக்குழுவாக மனித உரிமைகள் ஆணைக்குழு மீளமைக்கப்பட்டது).

123 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp.15-23.

124 தினுசா பண்டிதரத்ன, ”ஆசியாவில் தன்பாலீர்ப்புள்ள உறவுகளை குறமற்றதாக்குதல்: சட்ட சீர்த்திருத்தங்களுக்கு தடையாக அமையும் சமூக கலாச்சார காரணிகள்”, அமெரிக்க பல்கலைக்கழக சர்வதேச சட்ட மீளாய்வு 31, (2016): pp. 171-207.

125 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 173.

126 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 205-7.

127 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 190-92.

128 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 186-89, 193-204.

129 எம். ஏ. என். சந்திரதிலக மற்றும் பி. மஹாநாமஹேவா, ”பாலீர்ப்பு மற்றும் மனித உரிமைகள் இலங்கை மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் பயன்பாட்டிலுள்ள சட்டங்கள்”, 8வது சர்வதேச ஆய்வு மாநாடு, ரத்மலானை: கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (2015): pp. 110-14.

130 கமணி ஜினதாச, ”எச்.ஐ.வி தொடர்பான பாதுகாப்பு சட்டங்கள், ஆண்களுடன் உறவு கொள்ளும் ஆண்கள் மற்றும் திருநர்”, பாங்காக்: UNDP/சர்வதேச அபிவிருத்தி சட்ட நிறுவனம், 2011.

131 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 7.

132 அயேசா மாகோ, மனித உரிமை ஆணைக்குழு இலங்கை: பிராந்திய தேசிய மனித உரிமைகள் நிறுவனத்திற்கான அறிக்கை, உள்ளடக்கல், சுகாதாரத்திற்கான உரிமை மற்றும் பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்திற்கான உரிமை சார்ந்த நிகழ்ச்சித்திட்டம், பாங்கொக்: UNDP/சர்வதேச அபிவிருத்தி சட்ட நிறுவனம், 2013.

### *அடையாளத்தை கட்டமைத்தல்*

இலங்கையில் LGBTQI+ ஆராய்ச்சி பல அணுகுமுறைகள் மூலமாக அடையாளத்தைப்பற்றிக் கொள்கிறது, அவற்றில் சமூகவியல் மற்றும் மருத்துவ அணுகுமுறைகள் மிகவும் பரவலாக இருந்தன.

இலங்கை சமூக வைத்தியர்கல்லூரியால் வெளியிடப்பட்ட இலங்கையில் பாலியல் தன்மை பற்றிய தொகுப்பு மற்றும் 2018 இல் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பாலியல் அடையாளத்தின் தனிப்பட்ட கதைகளின் ஒரு தொடர் தொகுப்பு, ஆகியவற்றில் பல LGBTQI+ நபர்களின் அனுபவங்கள் சேர்க்கப்பட்டுள்ளது.[133] இந்த விவரிப்புகள், LGBTQI+ நபர்கள் தங்கள் அடையாளங்கள் மற்றும் உறவுகளை எவ்வாறு கொண்டுசெல்கின்றனர் என்பதை ஆராய்கின்றன மற்றும் பால்நிலை அடையாளங்கள் மற்றும் பாலீர்ப்பு என்பன இலங்கையின் ஒடுக்குமுறை கொண்ட எதிர்பாலீர்ப்பு சமூகத்தில் எவ்வாறு கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதன் ஒரு மாறுபட்ட சித்திரத்தை வரைகின்றது.[134]

பெண்கள் மற்றும் ஊடக கூட்டு வெளியிட்ட மற்றுமொரு விரிவான ஆய்வு அடையாள கட்டமைப்பின் மற்றொரு சமகால கண்ணோட்டம் இருமையியல் குறியீட்டை சீர்குலைப்பதன் மூலம் வழங்கப்படுகிறது என்பதை அடையாளம் காண்கிறது இது எழிவரி (ஆன்லைன்) தளத்தை LGBTQ நபர்கள் பயன்படுத்துவதை பற்றி ஆராய்கிறது.[135] பொதுவான சமூகத்தில் (offline) சாத்தியமற்ற உறவுகளை இணைய மானது எளிதாக்குவதால், LGBTQ இலங்கையர்களுக்கு இது மிகவும் முக்கியமானது என்று அது கண்டறிந்தது மேலும் இது சுயத்தின் வெளிப்பாடு மற்றும் பொது கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது உலகளாவிய பால்ப்புதுமை கலைகளுக்கான அணுகலையும் இது வழங்குகின்றது. அதே நேரத்தில் குறிப்பிட்ட சமூகத்தை தனிப்படுத்தி, சமூகத்தை ஒழுங்கமைத்தல் மற்றும் அணிதிரட்டலை பாதிக்கிறது.[136] பால்நிலை அடையாளங்கள் மற்றும் பாலியல் ஈர்ப்பு பகிரங்கமாக பகிர்ந்து கொள்ளபடுவதில்லை; பல கணக்குகள் பயன்பாடு அநாமதேய அல்லது புனைப்பெயர் கொண்டுள்ளது; மற்றும் பாலியல் சந்திப்புகளுக்கு ஆன்லைன் தளங்களை ஊக்குவிதல் -என்பவற்றை சிறப்பு இயக்கவியல்கள் என ஆய்வு அடிக்கோடிட்டு காட்டுகிறது. *இலங்கையில் பாலியல் தொகுப்பில்* விவரிக்கப்பட்டுள்ள பாலியல் அடையாளத்தின் சில தனிப்பட்ட கதையாடல்களிலும் இவை எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.[137]

அனீ பட்டாச்சார்யா மற்றும் கெர்ல் பெர்னாண்டோ வின் இந்தியா மற்றும் இலங்கை பற்றிய ஒப்பீட்டு ஆய்வு, ஆணாதிக்க மற்றும் எதிர்பாலீர்ப்பு ஆதிக்க அரசு நிறுவனங்கள் பாலியல் பற்றிய கலந்துரையாடல்களை வடிவமைத்து கட்டுப்படுத்தியுள்ளன மற்றும் எதிர்பாலீர்ப்பு தன்மையைப் பேணி வருகின்றன என்று வாதிடுகிறது.[138] குறிப்பாக, இலங்கையில் நிலவும் பாலியல் பற்றிய கடுமையான, நெறிமுறை புரிதல்களால் குறிப்பாக பாலியல் அரசியல் எவ்வாறு மோசமாக கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை எழுத்தாசிரியர்கள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றனர்.[139] இந்த கட்டமைப்பிற்குள் அடையாள ஆய்வுக்கு ஒரு உதாரணம், கீழ்-நடுத்தர வர்க்க கிராம சூழல்களில் இருந்தான இரண்டு திருநர்களின் பால்நிலை அடையாளத்தின் சுய-கண்ணோட்டங்களை செர்மல் விஜேவர்தன ஆராய்கையில், இந்நபர்கள் தொடர்ந்து தங்கள் பால்நிலை வித்தியாசத்தை கட்டமைக்க தங்கள் சொந்த கற்பனை வளங்களில் தூக்கி எறியப்படுவதைக் காண்கிறது[140]. பால்நிலை பன்மைத்தன்மையை சகித்துக் கொள்ளாத ஒரு சமூகத்தில் தங்களை கண்ணியத்துடன் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே ஆதாரமாக சுய உணர்வுகள் தான் தங்கள் வாழ்க்கையில் உதவியுள்ளன என்று விஜேவர்தன வாதிடுகிறார்.[141] இந்த விளைவுகள் பால்நிலை அடையாளம் பற்றிய கருத்துக்கள் பொதுவான (மற்றும் மேற்கத்திய) சூழல்களில் எவ்வாறு வெளிப்படுத்தப்படலாம் என்பதற்கு விட உள்ளூர் நபர்களிடை வித்தியாசமாக புரிந்து கொள்ளப்படுகின்ற நடைமுறையில் உள்ளன என்று தெரிவிக்கின்றன.

இதே போன்று, ஜயந்தி குரு-உதும்பலா இலங்கையில் பால்நிலை சமூக விதிகளை பின்பற்றாத தன்பாலீர்ப்புடை பெண்கள் பன்னிருவரிடம் ஆண்மைதத்தன்மை கொண்ட பெண்கள் என்ற கருத்தை விசாரிக்கிறார்.[142] சமூக கட்டமைப்பாளர் மற்றும் பின்நவீனத்துவ அணுகுமுறைகளைப் பயன்படுத்தி,

---

133 சந்துஸ்யா பெர்னாண்டோ, சேனல் வன்னியாராச்சி மற்றும் ஜானகி விதானப்பத்திரன, இலங்கையில் பாலியல் ஒரு தொகுப்பு, இலங்கை சமூக வைத்தியர்களின் கல்லூரி மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம்: இலங்கை சமூக வைத்தியர்களின் கல்லூரி, 2018.

134 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., பார்க்கவும்: pp. 23-47, 64-66.

135 பபா தேசப்பிரிய, மைக்கல் மெண்டிஸ், சேர்மால் விஜேவர்தன மற்றும் சுபா விஜேசிறிவர்தன், இருமையியலை தகர்த்தல்: டுபுடீவு இலங்கையரின் இணைய அனுபவங்கள், கொழும்பு, பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு, 2017.

136 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 29-64, 102-104.

137 பெர்னாண்டோ, வன்னியாராச்சி மற்றும் விதானப்பத்திரன, இலங்கையில் பாலியல் ஒரு தொகுப்பு, pp. 64-68.

138 ஆணீ பட்டாச்சார்யா மற்றும் கேர்ள் பெர்னாண்டோ, "பாழ்ப்புதுமை செயற்பாடு மற்றும் பாலியல் சிறுபான்மையினரின் அடையாளம்: இலங்கை மற்றும் இந்தியா குறித்த சூழ்நிலை ஆய்வு",, 9வது சர்வதேச ஆய்வு மாநாடு, ரத்மலானை: கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம (2016): pp. 55-62.

139 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 62.

140 சேர்மல் விஜேவர்தன, "எனினும் நான் இப்போது யார் என்பதை யாரும் எனக்கு விளக்கவில்லை...": இலங்கையில் "திருநர்" சுய-பார்வை" ுநைசபைெய ளு.ந., டீடயஉமறழழன ந., டீயலைய ய. (நனள) உலகமயமாகும் ஆசியாவில் பெண்களின் பாலியல் மற்றும் ஆண்மைத்தன்மை. ஒப்பீட்டு பெண்ணிய ஆய்வுத்தொடர், pp. 101-116, New York: Palgrave Macmillan, 2007.

141 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 101-102

142 ஜயந்தி குரு-உதும்பலா, "டீரவஉாபைெ வை ரி: இலங்கையில் தன்பாலீர்ப்புள்ள பெண் ஆண்மைத்தன்மை குறித்த ஆய்வு", கலாச்சாரம், சுகாதாரம் மற்றும் பாலியல், 15:sup2, pp. S153-S165.

ஆண்மைத்தன்மை உடைய பெண்கள் என்ற கருத்தாக்கம் ஆண்மைத்தன்மை உடைய பெண்கள் மூலம் ஆண்மையிலிருந்து ஆண்தன்மையையும் அகற்ற அனுமதிக்கிறது என்று அவர் வாதிடுகிறார்.[143] ஆயினும்கூட, “பாலின இடையூறுகள்“ அல்லது “பாலின நிராகரிப்புகள்“ போன்ற சொற்கள் பால்நிலை சமூக விதிகளை பின்பற்றாத பெண் தன்பாலீர்ப்பினரின் பொதுவான பார்வையை மறுப்பதால், அதற்கு பதிலாக இருமை செய்யப்பட்ட பாலின குறியீடுகளுக்கு அப்பால் நகர்ந்து கொண்டிருக்கலாம் என்று அவர் வாதிடுகிறார்.[144]

ஆண்ட்ரூ நிக்கோல்ஸ் ஜோடி மில்லருடன் இணைந்து செய்த ஆய்வில் ”டான்ஸ் பொன்னாயா டான்ஸ்!”யில் பால்நிலை அடையாளம், பாலீர்ப்பு மற்றும் ஆசை ஆகியவை நச்சி நபர்களால் கட்டமைக்கப்படும் சிக்கலான மற்றும் முரண்பாடான வழிகளை ஆராய்வதன் மூலம் செய்யப்பட்டுள்ளது.[145] அவர்கள் தம்மை மாறாப்பாலின பெண்கள் மற்றும் மாறாப்பாலின ஆண் தன்பாலீர்ப்பினர்களிடம் இருந்து வேறுபடுத்தி அறிவதுடன் தமது பெண்மையைக் கொண்டாடும் தன்மை காணப்படுகிறது ஆனால் அவர்களின் உயிரியல் ரீதியான “ஆண்மை“ மற்றும் ஆண்கள் மீதான தங்கள் தீவிர பாலியல் ஆசை என்பவற்றை அவர்கள் ஏற்றுக்கொள்வது பற்றி ஆய்வறிக்கை ஆராய்கிறது, இந்த வாதங்கள் குறிப்பாக பரிவர்த்தனை பாலியல் பரிமாற்றங்கள் மூலம் சூழ்நிலைப்படுத்தப்படுகின்றன, பொருளாதாரம், ஆசை, களங்கம் மற்றும் சுரண்டல் ஆகியவற்றின் சிக்கலான இயங்குநிலை நச்சி அனுபவங்களை வடிவமைக்கிறது.[146]

தெமல் எல்லாவலவின் ”பொருந்தாத காதலர்கள்” அகநிலை அடையாள கட்டுமானத்தை பற்றிய இதே போன்றதொரு ஆய்வாகும்.[147] உளவியல் மற்றும் சமூகவியல் இரண்டிலும் பாலியல் மற்றும் பால்நிலை அடையாள மேம்பாட்டு கோட்பாடுகள் இலங்கையில் உள்ள எதிர்ப் பாலீர்ப்பு இல்லாதோர் மற்றும் திருநர்கள் அனுபவங்களுடன் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை இது ஆராய்கிறது. 15 பங்கேற்பாளர்கள் பங்கேற்ற ஒரு தரம்சார் ஆய்வு மூலம் பங்கேற்பாளர்கள் பால்நிலை மற்றும் பாலியல் சுய கருத்தாக்கங்கள் முக்கிய அடையாள கருத்தாக்க கோட்பாடுகளுடன் கணிசமான அளவில் பொருத்தமற்றதன்மை உடையதாக வெளிப்படுத்தினர் என்று அறிக்கை காட்டியது.[148] இது பாலினம் மற்றும் பால்நிலை பற்றி கற்கையில் தனிப்பட்ட வேறுபாடுகள் மற்றும் கலாச்சார சூழல்களை கருத்தில் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது, மேலும் கலாச்சார வேறுபாடுகளைக்கடந்து கோட்பாடுகளை உலகளாவியதாக்குவதன் ஆபத்துக்களை எச்சரிக்கிறது.[149] இதன் அடிப்படையில், எல்லாவல அவர்கள் விஜேவர்தன, குரு-உதும்பாலா நிக்கோல்ஸ் மற்றும் மில்லர் ஆகியோரால் அடையாளம் காணப்பட்ட வேற்றுமைகள் உள்ளூர் புரிதல்கள் மற்றும் உலகத்தின் பொதுவான புரிதல் நடைமுறைகளுக்கு இடையில் உள்ள தூரத்தை எதிரொலிகின்றார்.

மருத்துவ அணுகுமுறைகள் LGBTQI+ அடையாளத்திற்கு உளவியல் மதிப்பீடுகள் மற்றும் சமூக மற்றும் சுகாதார மதிப்பீடுகளை மிகவும் நேரடியாகப் பயன்படுத்துகின்றன. இதன் விளைவான விமர்சனங்கள் கோட்பாட்டு அடிப்படையில் குறைவுடையதாகவும் நடைமுறை நிலையின் அடிப்படையில் சிறந்தனவாகவும் உள்ளன. எடுத்துக்காட்டாக, ஏ.எஸ். மலலகம பால்நிலை உறுதிப்படுத்தா அடையாளங்களை பாகுபாடு, பாலியல் தொழில், பாலியல் சுகாதார அமைப்புகள் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச கட்டமைப்புக்களை நோக்குவதன் மூலம் உருவாக்குகிறார்.[150] பாலியல் நலம் மற்றும் எச்.ஐ.வி மருத்துவம் மற்றும் இலங்கை மனநல மருத்துவர்கள் கல்லூரி என்பன பால்நிலை இணக்கமற்ற மக்கள் தொகையுடன் ஒத்துழைக்கவும் ஆய்வு செய்யவும் பால்நிலை மாறா எதிர்ப் பாலீர்ப்பு சமூகத்தினால் விளையும் ஒடுக்குமுறைகளில் இருந்து மீள உதவியளிக்கும் திறன் கொண்டவை என அவர் கூறுகின்றார்.[151] இதே போல கொள்கை மற்றும் அரசியல் துறைகளில் தலையிட வேண்டிய மனநல மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதார நிபுணர்களின் LGBTQI+ நபர்களின் மனநல விளைவுகளை நிவர்த்தி செய்வதற்கான துணைவலிமை சேர் நடவடிக்கைகள், மியுருசந்திரதாசாவின் ‘‘தன்பாலீர்ப்புள்ள இளம் பருவத்தினரில் தற்கொலை எண்ணம்” எனும் ஆக்கத்திலும் காணப்படுகிறது.[152]

இதேபோல், ‘‘பால்நிலை மாற்றம் பற்றிய ஒரு புதுய பதிப்பில்”, மலலகம எஸ். ஜினியுடன் சேர்ந்து தமது பால்நிலை மீதான வெறுப்பு மற்றும் சமூக பாகுபாடு பற்றிய திருநர்களின் அனுபவங்கள் மற்றும் ஒரே நேரத்தில் நிகழும் மனநலக்குறைவுகள் குறிப்பாக மன அழுத்தம், மனப் பதற்றம் மற்றும்

---

143 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. S163.

144 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

145 ஜோடி மில்லர் மற்றும் ஆண்ட்ரே நிகோலஸ், ”இலங்கை நச்சி நபர்களிடையே அடையாளம், பாலியல் மற்றும் பாலியல் தொழில்”, பாலியல்புகள் 15, இலக்கம் 5/6 (2012): pp. 554-69.

146 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 561-66.

147 தேமல் எல்லாவல, ”பிழையாக சேர்க்கப்பட்ட காதலர்: இலங்கையில் LGBTQ+ அடையாள தேற்றங்கள் மற்றும் பால்நிலை மறறும் பாலியல் பல்வகைமைக்கும் இடையிலான பொருந்தும் தன்மையை ஆராய்தல்”, பாலியல் மற்றும் கலாச்சாரம் (2018): pp. 1321-39.

148 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

149 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 1334-36.

150 ஏ. எஸ். மங்களகம, ”இலங்கையில் மாறி வரும் பால்நிலை அடையாளம் மற்றும் சூழல்”, இலங்கை பாலியல் சுகாதாரம் மற்றும் எச்.ஐ.வி மருத்துவ வெளியீடு, பாகம் 3, (2017): pp. 45-50.

151 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 50.

152 மியுரு சந்திரதாச, இலங்கையில் சமூக களங்கம் மற்றும் தன்பாலீர்ப்பு குற்றமாக்கப்பட்டுள்ள சூழலில் தன்பாலீர்ப்புள்ள கட்டிளமைப்பருவ ஆண்களிடையே தற்கொலை எண்ணம்”, சமூக உளநலத்துக்கான சர்வதேச வெளியீடு (2018): pp. 1-2.

தற்கொலை ஆகியவற்றின் "உயர்ந்த பரவல்'' பற்றிய கண்ணோட்டத்தை உருவாக்குகிறார்.[153] தமது பால்நிலை மீதான வெறுப்புணர்வை நிர்வகிப்பதற்காக பல துறை அணுகுமுறையை பரிந்துரைப்பதற்கு ஆய்வாசிரியர்கள் இதைப் பயன்படுத்துகிறார்கள், இதற்கு மனநல மருத்துவர்கள், அகச்சுரப்பியல் நிபுணர்கள், மகப்பேறு மருத்துவர்கள், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள், ஆலோசகர்கள், சமூக சேவகர்கள், வழக்கறிஞர்கள், அர்ப்பணிப்புள்ள அரசு சாரா நிறுவனங்கள், திருநர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு இடையே ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.[154]

இலங்கையில் உள்ள திருநர்களுன் தொடர்புடைய தொற்றுநோயியல் காரணிகள் பற்றிய வெளியிடப்பட்ட தரவுகளின் இடைவெளியை நிவர்த்தி செய்வதற்காகமூன்றாம் நிலை சிகிச்சை மைய அமைப்பில் உள்ள பாலநிலை மாற்ற மருத்துவகதின் பங்கேற்பாளர்களின் தொற்றுநோய் பண்புகள் மற்றும் மேலாண்மை பற்றிய ஆய்வின் மூலம் அத்தகைய பங்களிப்பை செய்யும்படி ஆய்வாசிரியர்களான, பி.டி.எல்.ஆர். விஜேசிங்க மற்றும் என். குணவர்தன இணைந்து கருத்துரைத்துள்ளனர்.[155] 1985 முதல் 2018 வரை பேராதனை போதனா வைத்தியசாலையின் கிழமைதோறுமான வயது வந்தோர் மனநல சிகிச்சை நிலையத்தில் மற்றும் பாலியல் பிரச்சனைகளுக்கான சிகிச்சை நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து நபர்களின் மருத்துவ பதிவுகளை இந்த ஆய்வு மதிப்பாய்வு செய்தது. மனநல உதவியை நாடும் திருநர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும், ஆனால் அவர்களுக்கு கிடைக்கும் சேவை ஒதுக்கீட்டில் முக்கிய இடைவெளிகள் இருப்பதையும் இந்த ஆய்வு காண்கிறது.[156] தொடர்புடைய தொழில்முறை குழுக்கள் மற்றும் பொதுக் கல்வியில் மனநிலை சார் மாற்றத்தை பரிந்துரைப்பதுடன், இவ் ஆய்வறிக்கை, திருநர் நல சுகாதாரத்தில் அனைத்து பங்குதாரர்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் இலங்கைக்கான தேசிய நல்ல நடைமுறை வழிகாட்டுதல்களை உருவாக்குவதற்கான குறிப்பிட்ட பரிந்துரையை செய்கிறது.[157]

### *எச்.ஐ.வி தொடர்பான தலையீடுகள்*

ஆய்வின் ஒரு பகுதியாக எச்.ஐ.வி தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான சுகாதார திட்டத்தின் தலையீடுகள், ஆய்வு செய்யப்பட்ட காலத்தில் கணிசமான இடத்தை கொள்கிறது. LGBTQI+ மக்கள் தொகைகளை வெளிப்படையாக அடையாளம் காணும் ஆராய்ச்சிகளில், ஆரம்பகால தலையீடுகளில் ஒன்று, தன்பாலீர்ப்பாளர் மற்றும் ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள் ஆகியோரது எச்.ஐ.வி பற்றிய அறிவு மற்றும் பாலியல் நடத்தைகள் பற்றிய கம்பெனியன் ஒன் ஜர்னியின் ஒரு 2007 அறிக்கை ஆகும்.[158] அக்காலப்பகுதியில் ஐந்து நகரங்களில் 494 ஆண்கள் கணக்கெடுப்பு அடிப்படையில்,. ''இலங்கை சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் ஆண்களுடன் உடலுறவுகொள்ளும் ஆண்கள் வாழ்கிறார்கள், வேலை செய்கிறார்கள் என்பதையும் அவர்கள் சுற்றுலாப் பகுதிகள் அல்லது கொழும்பில் உள்ள ஆங்கிலம் பேசும் உயரடுக்கு மக்களுக்கு மட்டும் மட்டுப்படவில்லை என்ற முக்கியமான அவதானிப்பு இந்த அறிக்கையில் உள்ளது.[159] அவர்கள் "எச்.ஐ.வி-ஆபத்துக்குரிய பல்வேறு பாலியல் நடத்தைகளில் ஈடுபடுகிறார்கள் மற்றும் பல பாலியல் அடையாளங்களைக் கொண்டுள்ளனர் என்பதைப்போல பெண்மையான இயல்புடை ஆண்கள் குத வழி பாலியலுறவில் பெறுநராக சித்தரிக்கும் முன்முடிவு கொண்ட பாரம்பரியம்.[160] மற்றும் தன்பாலீர்ப்பு ஆண்கள் மற்றும் ஆண்களுடன் புணரும் ஆண்கள் மீது கவனம் செலுத்தும் அறிக்கை பல ஆண்களுடன் புணரும் ஆண்கள் பெண்களளுடனும் கூட புணருகின்றனர் என்பதை தெளிந்தறிய உதவியது. அத்தோடு சமூக ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ தன்பாலீர்ப்பாளர் என்று அடையாளம் காண்பது, இது எச்.ஐ.வி தடுப்பு இலக்கு உத்திகளை உருவாக்குவதற்கு ஒரு குறிப்பிடத்தக்க அளவிலான சவாலாக முன்வைக்கிறது.[161]

இன ஆய்வுகளுக்கான சர்வதேச மையத்தின் ஒரு கணக்கெடுப்பில் குறிப்பாக தனித்துவமான ஆய்வு முயற்சி செய்யப்பட்டது. இது எச்.ஐ.வி/எய்ட்ஸ் பாதிப்புக்குள்ளாகக்கூடிய ஒரு குழுவாக இராணுவத்தை கருதி அதன் மேல் கவனம் செலுத்தியது மற்றும் இலங்கை இராணுவ அதிகாரிகளின் எச்.ஐ.வி/எய்ட்ஸ் அறிவையும், அவர்கள் எந்த அளவிற்கு ஆபத்தான பாலியல் நடத்தைகளில் ஈடுபட்டனர் என்பதையும் மதிப்பிட்டது.[162] இந்த அறிக்கையில் கடந்தகால தன்பாலீர்ப்புள்ள பாலியல்

---

153 பி. கினிகே மற்றும் ஏ. எஸ் மலலகம, "மாற்றுப்பாலியல் தொடர்பான அறிக்கை", இலங்கை உளநல மருத்துவ வெளியீடு 9, இலக்கம் 2 (2018): pp. 4-9.

154 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 9

155 பி. கினிகே, ஏ. எஸ் மலலகம பி.டி.எல்,ஆர். விஜேசிங்க மற்றும் என் குணவர்தன, "மாற்றுப்பாலியல் இலங்கையின் அனுபவம்: இலங்கையில் மூன்றாம் நிலை சுகாதார பராமரிப்பு சிகிச்சை அமைப்பில், தொற்றுநோயியல் குணவியல்புகள் மற்றும் திருநர்களின் பிரச்சனைகளை முகாமைத்துவம் செய்தல் குறித்த விரிவான ஆய்வு", இலங்கை பாலியல் சுகாதாரம் மற்றும் எச்.ஐ.வி மருத்துவ வெளியீடு, பாகம் 4, (2018): pp. 18-23.

156 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

157 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 22-23.

158 பயணத்தில் துணை வருவோர், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள் சமூகத்தில் அறிவு, மனப்பாங்கு மற்றும் நடத்தை, இலங்கையில் தன்பாலீர்ப்புள்ள ஆண்களாக அடையாளப்படுத்துவோர், ஆண்களுடன் உறவு கொள்ளும் ஆண்கள், கொழும்பு: Companions on a Journey, 2007, https://www.aidscontrol.gov.lk/images/pdfs/publications/research_documents/cojk_nowledge.pdf

159 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 24.

160 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

161 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

162 இனக்கல்விக்கான சர்வதேச நிலையம் (ICES), இலங்கையில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய சமூகங்களுக்கிடையில் எச்.ஐ.வி.∴எய்ட்ஸ் விழிப்புணர்வு மற்றும் ஆபத்தான பாலியல் நடத்தை, கண்டி: ICES, 2009.

நடத்தை பற்றிய ஒரு குறிப்பிட்ட பிரிவும் அடங்கும். கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கினர் (30.8%) தன்பாலீர்ப்புள்ள பாலியல் உறவு கொண்டிருந்ததாக இவ்வறிக்கை கூறுகிறது.[163]

2006-2007 வரை இலங்கையில் நடத்தப்பட்ட எச்.ஐ.வி பற்றிய முதல் நடத்தை கண்காணிப்பு கணக்கெடுப்பு, LGBT மக்களைக் உள்ளடக்குவதை வெளிப்படையான நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை, அதே நேரத்தில் ஆண்களுடன் புணரும் ஆண்கள் மற்றும் பீச் பாய்ஸ் எனப்படும் கடற்கரை ஆண்கள் ஆகியோர் முக்கிய பாதிப்பிற்குள்ளாகக்கூடிய மக்கள் தொகையாக இருந்தனர்.[164] இந்த கணக்கெடுப்பு பாலியல் நடத்தைகள் மற்றும் இந்த மக்களின் புவியியல் பரவல் பற்றி பல கண்டுபிடிப்புகளை செய்தது.[165] இந்த ஆய்வைத் தொடர்ந்து, NSACP 2010[166], 2013[167] மற்றும் 2018[168] ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியான வரைபடங்களை உருவாக்கும் வலுவான முயற்சிகளை தொடங்கியது. 2010ன் முயற்சியில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய முக்கிய மக்கள் தொகையாக ஆண்களுடன் புணரும் ஆண்கள் (தன்பாலீர்ப்பு ஆண்கள், ஆண் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் நச்சி நபர்கள் உட்பட) 2013ன் முயற்சியில் ஆண்களுடன் புணரும் ஆண்கள் மற்றும் கடற்கரை ஆண்கள் (இவர்கள் தன்பாலீர்ப்புள்ளராகவோ எதிர்பாற்சேர்க்கையாளராகவோ அல்லது இருபாலீர்ப்புள்ளராகவோ இருக்கலாம்) 2018ன் முயற்சியில் ஆண்களுடன் புணரும் ஆண்கள் மற்றும் கடற்கரை ஆண்கள் மற்றும் திருநங்கைகள் என்று விரிவடைந்தது.

2010 பயிற்சி, கொழும்பு மற்றும் அனுராதபுரத்தில் சுகாதார அமைச்சு நியமித்த புவியியல் வலயங்களுக்குள் மாவட்ட அளவிலான மதிப்பீடுகளை உருவாக்குவதற்கு ஸ்பாட் நேர்காணல்களைப் பயன்படுத்தியது. 2013 மற்றும் 2018ன் முயற்சிகள் முறையே 303 மற்றும் 49 ஆம் நாட்களுக்குள் புவியியல் வரைபடமாக்கல் மற்றும் மாதிரி ஸ்பாட் நேர்காணல்களுக்கான அலகு பகுதிகளாக பிரதேச செயலகங்களைப் பயன்படுத்தி மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் மதிப்பீடுகளை மேற்கொள்ளுகின்றன.

2010 அறிக்கை கொழும்பு மற்றும் அனுராதபுர மாவட்டங்களில் ஆண்களுடன் புணரும் ஆண்கள் 9,569பேர் உள்ளதாக கணித்தது.[169] 2013 அறிக்கை நாடு முழுவதும் 7,551 ஆண்களுடன் புணரும் ஆண்கள் மற்றும் 873 கடற்கரை ஆண்கள் உள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது அதே நேரம் 2018 அறிக்கை 40,000 ஆண்களுடன் புணரும் ஆண்கள், 4,500 கடற்கரை ஆண்கள் மற்றும் 2,200 திருநங்கைகள் நாடு தழுவி இருப்பதாக காட்டியது. திருநங்கைகள் பற்றிய 2018 ஆய்வின் கண்டுபிடிப்புகள் அறிக்கையில் ''இலங்கையில் பெண் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் திருநங்கைகளின் மக்கள் தொகை அளவை மதிப்பிடுதல் என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.[170]

இந்த வரைபட முயற்சிகளின் கண்டுபிடிப்புகள் பயன்படுத்தப்படும் நபர்கள் பலமுறை மதிப்பிடல் மற்றும் பங்கேற்பாளர்களின் இடமாற்றம் காரணமாக மீள மதிப்பிடல் ஆகியவற்றால் இவற்றின் நம்பகத்தன்மை சிக்கலானவை, அவை அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தற்போதைய தரவுகளின் அடிப்படையில் உள்ளன.[171] அவர்களின் முறை மறைந்திருக்கும் மக்களை குறைத்து மதிப்பிடக்கூடும் என்பதை ஆய்வுகள் ஒப்புக்கொள்கின்றன.[172] இந்த மூன்று முயற்சிகளும் தரவு புள்ளிகளை சுத்திகரிப்பதற்கும் இன்னும் துல்லியமான மதிப்பீடுகளை அடைவதற்கும் பொது மக்கள் தொகை அடிப்படையிலான கணக்கெடுப்புகளுடன் இணைந்து இந்த வரைபட முயற்சியை மீண்டும் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.[173] மேலும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய மக்கள்தொகைகளின் ஒரு முக்கியமான விரிவாக்கத்துடன் LGBTQI+ பிரிவுகளையும் சேர்த்து தொடர்ச்சியான மீள் நடைமுறையின் படிப்படியான சுத்திகரிப்பு மூலம் வரைபடமாக்கலின் பெறுபேறுகள் அடையப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

---

163 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 27-8.

164 பி. ரவ்ஸ்டோன் மற்றும் எச். வொர்த், இலங்கை நடத்தைமுறையை கண்காணிக்கும் ஆய்வு: முதலாவது கட்ட ஆய்வின் பெறுபேறுகள், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து அமைச்சு, 2007.

165 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

166 தேசிய பாலியல் தொற்றுக்கள் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் (NSCAP), *இலங்கையில் எச்.ஐ.வி தடுப்புக்காக பாதிக்கப்படக்கூடிய மக்கள் குழுக்களை வரைபடப்படுத்தல், கொழும்பு*: NSCAP, 2010, https://www.aidscontrol.gov.lk/images/pdfs/publications/research_documents/hrd_mapping.pdf

167 NSCAP, *இலங்கையில் எச்.ஐ.வி அதிக பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்கள் குழுக்களின் அளவை மதிப்பிடும் தேசிய திட்டம், கொழும்பு*: NSCAP, 2013, https://www.aidscontrol.gov.lk/images/pdfs/publications/research_documents/national_size_estimation_2013.pdf

168 NSCAP, *இலங்கையில் எச்.ஐ.வி அதிக பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்கள் குழுக்களின் அளவை மதிப்பிடும் தேசிய திட்ட அறிக்கை, கொழும்பு*: NSCAP, 2018, https://www.aidscontrol.gov.lk/images/pdfs/publications/research_documents/Final-draft-report-Key-Population-Size-Estimation--2018July.pdf

169 NSCAP, 2010 *அறிக்கை*, p. 10.

170 I. Bozicevic, அ. மாணதுங்க, எ, ஸி. டொமிங்கோவிக், எஸ். பெனரகம மற்றும் கே. கிரிட்மா, ''இலங்கையிலுள்ள பெண் பாலியல் தொழிலாளிகள் மற்றும் திருநங்கைகளின் சனத்தொகை அளவை மதிப்பிடல்'', *PLoS ONE* 15(1), (2020).

170 NSCAP, 2010 *அறிக்கை*, p. 10.

171 NSCAP, 2018 *அறிக்கை*, pp. 71-2.

172 Bozicevic மற்றும் பலர், ''சனத்தொகை அளவை மதிப்பீடு செய்தல'', p. 8.

173 மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 8-9; தேசிய பாலியல் தொற்றுக்கள் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்,

எல்.ஜி.பி.டி மக்களை வரைபடமாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பயிற்சி 2017 இல் ஈகுவல் கிரவுண்ட் நிறுவனத்தால் நடத்தப்பட்டது.[174] இதில் கொழும்பு, கண்டி, மாத்தறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள 470 வயது வந்தோரை ஆய்வு செய்ததன் படி, அந்த மாவட்டங்களில் வாழும் வயது வந்தவர்களில் சுமார் 19.6% (753,973) பேர் தன்பாலீர்ப்புள்ள பெண், தன்பாலீர்ப்புள்ள ஆண், இருபாலீர்ப்புடையோர் மற்றும் அல்லது திருநங்கைகள் என மதிப்பிடப்பட்டுள்ளது.[175] LGBT நபர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தின் காரணமாக சவால்கள் அல்லது தடையை எதிர்கொண்டனர் என்று இந்த முயற்சி மேலும் கூறுகிறது.[176]

### *அரச சார்பற்ற நிறுவனங்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் செயலூக்கம் Activism*

ஆய்வுகுட்படுத்தப்பட்ட ஆய்வுமுயற்சியில், LGBTQI+ அரசு சாரா அமைப்புகளின் இயங்குநிலை மற்றும் செயல்திறன் மற்றும் பால்புதுமையினர் இயக்கத்தின் நிறுவன அரசியலையும் தொடுகிறது. LGBT அரசு சாரா அமைப்புகள் பூகோளமயமாக்கப்பட்ட செயற்பாட்டாளர்களது கோரிக்கைகளை உள்ளூர் அரசியல் இயங்குநிலையுடன் சமநிலைப்படுத்த எவ்வாறு முயற்சிக்கின்றன என்பதை தெமல் எல்லாவாலா அலசுகிறார், குறிப்பாக ஈகுவல் கிரவுண்டின் செயல்பாட்டின் அடிப்படையில் இதில் அவர் கவனம் செலுத்துகிறார்.[177] நேர்காணல்கள் மற்றும் முறைசாரா உரையாடல்களைப் பயன்படுத்தி, இலங்கை அரசை எதிர்கொள்ளும் போது இன-தேசியவாதம் மற்றும் வர்க்க விலக்கு பற்றிய நிலையான கலந்துரையாடல்களை இந்த அமைப்பு எவ்வாறு நிகழ்த்துகிறது என்பதை அவர் விவரிக்கிறார், மேலும் மேற்கத்திய நன்கொடையாளர்களை எதிர்கொள்ளும் போது பால் புதுமை அடையாளம் மற்றும் அடையாளங்களின் மேற்கத்திய வெவ்வேறு கற்கைகளை மறு உருவாக்கம் செய்கிறார்.[178] இது இந்த பரிமாற்றங்களினால் உள்ளூர் பால்புதுமையினர் மீது வன்முறைக் கட்டமைப்பு இயற்றப்படுவதற்கு வழிவகுத்து இணைச் சேதத்தை விளைவிக்கும் என்று கூறப்படுகிறது.[179]

ஜோசுவா அர்தேகாகோன்சலஸ் எழுதிய ஒரு ஆய்வு, காலனித்துவத்திற்குப் பிந்தைய இலங்கையில் LGBTQ இயக்கத்தின் அரசியல் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது என்பதற்கான சமூக இயக்கக் கோட்பாட்டையும் காலனித்துவத்திற்குப் பிந்தைய கோட்பாட்டையும் பயன்படுத்துகிறது.[180] இவ் இயக்கத்தின் "குறைகள்" நாட்டின் காலனித்துவ வரலாறு மற்றும் மனித உரிமைகள் சொற்பொழிவுடன் தொடர்புடையவை என்பதை அது காண்கிறது.[181] கோன்சலஸ் "அடையாளம்" என்பதன் பொருள் மேற்கத்திய கருத்தாக்கமான "LGBTQ" மற்றும் "LGBTQ இலங்கையர்" ஆகியவற்றுக்கு இடையே "கலப்பு" என்றும் முன்னைய இன்றியமையாவாதம் தொந்தரவானது என்றும் கருதுகிறார்.[182] மேற்கத்திய செயற்பாட்டாளர்களை பின்பற்றும் உள்ளூர் ஆர்வலர்களது உத்திகள் பற்றிய ஆர்வலர்களின் கவலைகளையும் இந்த ஆய்வு எழுப்புகிறது.[183]

பகமூனோவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் LGBTQI+ ஆர்வலர்களின் அக்கறைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இது பாகுபாடு மற்றும் குற்றமயமாக்கல் பற்றிய வழக்கமான அக்கறைகளை எதிரொலிப்பதுடன், ஆர்வலர்கள் மற்றும் செயற்பாட்டாளர் அமைப்புகளுக்கு இடையே வயது, இருப்பிடம் மற்றும் அரசியல் கண்ணோட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் பல ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்தியது. இந்த ஏற்றத்தாழ்வுகள் பற்றி ஆர்வலர்கள் கொண்டிருக்கும் மாறுபட்ட மதிப்புக்கள் இந்த ஆய்வு மூலம் வெளிப்படுகிறது. ஒரு ஒருங்கிணைந்த முன்னணி செயல்பாட்டுக்காக சில விருப்பங்களுடன் வேறுபாடுகளை இயற்கையானதாக கருதுவதானது வசதியானதாக உள்ளது.

### எல்.ஜி.பி.டி.ஐ ஆராய்ச்சி பற்றிய பிரதிபலிப்புகள்

இலங்கையில் உள்ள LGBTQI+ பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சி பொதுவாக பெரியவையாக இல்லை. இருப்பினும் இவ் ஆய்வறிக்கையின் மூலம், 2005 முதல் 2020 வரை கடந்த 15 ஆண்டுகளில் இந்த தொகுதியில் அதிக ஆராய்ச்சி சேர்க்கப்பட்டது என்று முடிவு செய்யலாம். எந்தவொரு LGBTQI+

---

[174] கேமோன் பிரெளன், கொழும்பு, கண்டி, மாத்தறை மற்றும் நுவரஎலியவில் டுபுடீவு நபர்களை வரைபடப்படுத்தல் Equal Ground, கொழும்பு: Equal Ground, 2017.

[175] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்.

[176] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 30-31.

[177] தேமல் எல்லாவல, "குரல்களை சட்டப்பூர்வமாக்கல்: தன்பாலீர்ப்புள்ள ஆண்கள் உரிமை அரசு சாரா நிறுவனம் மற்றும் இலங்கையின் பால்ப்புதுமை நபரை ஒழுக்கப்படுத்தல்", தெற்காசிய அபிவிருத்தி இதழ் 14, இலக்கம். 1 (2019): pp. 83-107.

[178] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 90-101.

[179] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., p. 84.

[180] ஜோஸுவா ஆர்டெடா கொன்சாலஸ், வானவில்லை மீள்வண்ணம்தீட்டுத்தல்: காலனித்துவத்திற்கு பின்னாக கொழும்பில் டுபுடீவுஞ அமைப்புகளின் அரசியல் குறித்த ஆய்வு, இலங்கை, முதுமாணி ஆய்வறிக்கை, லாண்ட் பல்கலைக்கழகம், 2019.

[181] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 31-34.

[182] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 35-38.

[183] மேற்க்கூறிய அதே ஆவணத்தில்., pp. 38-45.

பற்றிய ஆய்வுகளின் வெளியீடுகளோ அல்லது தலைப்புக்களோ அவற்றின் நோக்கத்தை விரிவுபடுத்துவதற்காக முற்றிலும் வரவேற்கப்பட வேண்டும்.

ஒரு பொதுவான மட்டத்தில், LGBTQI+ சமூகத்தின் பிரிவுகளில் குறிப்பானதாகவோ ஒப்பீட்டளவினதாகவோ கவனம் குவித்து செய்யப்படும் எந்த ஆய்வு முயற்சியும் சிறந்த மதிப்புடையதாகவே இருக்கும். இடைப்பாலின இலங்கையர் பற்றி முழுமையான ஆராய்ச்சியின்மை உள்ளது, அதே நேரத்தில் தன்பாலீர்ப்பு பெண்கள் மற்றும் இருபாலீர்ப்புள்ளோர் ஆகிய இலங்கையர்களும் ஒப்பீட்டளவில் குறைவாகவே ஆராயப்படுகிறார்கள். அதேபோல், தற்போதுள்ள ஆராய்ச்சிகள் திருநர் இலங்கையர்களை முற்றிலும் புறக்கணிக்கவில்லை என்றாலும், "திருநர்கள்'' என்பது இலங்கையில் பரந்த வகைக்கு உரியதாக உள்ள நிலையில், இதன் கீழ் நச்சி தனிநபர்கள் போன்ற சில அடையாளங்கள் மற்றவற்றை போல அல்லது எப்போதுமே கூட நோக்கப்படுவதில்லை.

ஒரு பரந்த மட்டத்தில், தற்போதைய ஆராய்ச்சியால் குறைவாக மாதிரி செய்யப்பட்ட பிற மக்கள்தொகை பிரிவுகளை சிறப்பாக அடையாளப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் தமிழ், முஸ்லிம் அல்லது ஏனைய சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த நபர்கள், புறநகர் மற்றும் கிராமப்புறதில் வாழ்வோர் மாற்றுத்திறன் கொண்டோர் (ஊனமுற்றவர்கள்), தற்போதைய மாதிரிகளை விடவும் வயதில் குறைந்த அல்லது கூடிய நபர்கள் கொண்ட மாதிரி என்பன அடங்கவேண்டும். ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் வள ஆதாரத்தின் போது மிகவும் பரிசீலிக்கப்பட்ட முடிவுகள் எடுப்பதற்கு இவை அவசியமானதாக இருக்கும். குறிப்பாக மொழி பயன்பாட்டைக் கூறலாம்.

குறிப்பாக இந்த ஆய்வில் அடையாளம் காணப்பட்ட கருப்பொருள்கள் எதிர்கால ஆராய்ச்சி திசைகளில் சில ஆலோசனைகளை செய்யக் கூடியவையாக அமைகின்றன. வன்முறை மற்றும் பாகுபாடு அனுபவங்கள் மீதான ஆய்வுகள் மூலம் பல அமைப்புகள் மூலமான எல்லைகள் இல்லாத பரந்த அளவிற்கு நகர்த்துவது விரும்பத்தக்கதாக இருக்கும். இது சமூகத்தின் குறிப்பிட்ட பிரிவினர் வீட்டுவசதி, கல்வி அல்லது வேலைவாய்ப்பு போன்றவற்றில் பாகுபாடுகளிற்கு உள்ளாவது போன்ற குறிப்பிட்ட அமைவுகளில் கவனம் செலுத்துவதை இன்றியமையாததாக்குகிறது. இத்தகைய ஆராய்ச்சியில், பாரபட்சத்தால் பாதிக்கப்பட்டவர்களாக LGBTQI+ நபர்களின் கண்ணோட்டங்களை மட்டுமல்லாமல், பாகுபாடுகளை விளைவிக்கும் அரசு மற்றும் தனியார் செயற்பாட்டாளர்களையும் இனம்காணும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, வீட்டு வசதிக்கான பாகுபாடு பற்றிய ஆய்வில் பாகுபாட்டால் பாதிக்கப்பட்ட LGBTQI+ தனிநபர்களை மட்டுமல்லாமல், மாநில வீட்டு அதிகாரிகள், சொத்து முகவர்கள் மற்றும் நில உரிமையாளர்களையும் இனம்காண முடியும்.

சட்ட அமைப்புகளில், தற்போதுள்ள ஆய்வுகளின் பெரும்பகுதி உள்நாட்டு மற்றும் ஒப்பீட்டு கவனம் ஆகியவற்றில் குற்றமயமாக்கல் விதிகளில் கவனம் செலுத்துகிறது. ஆயினும் கூட, இலங்கை சட்ட அமைப்பின் ஒவ்வொரு அம்சத்திலும் LGBTQI+ தனிநபர்களுக்கு எதிரான பாகுபாட்டை செயல்படுத்துகிறது. குறிப்பிட்ட சமூக அமைப்புகள் மற்றும் துறைகளில் உள்ள LGBTQI+ நபர்களின் பல்வேறு அனுபவங்களைப் பார்க்கும் ஆய்வுகள் பல வகையான சட்டங்களைப் பற்றி கவனம் செலுத்தி அவற்றின் ஆளுகை அமைப்பு ரீதியாகவோ இல்லாமலோ LGBTQI+ தனிநபர்களை வேறுபடுத்தி எவ்வாறு பாதிக்கலாம் என்பதைக் காண்பிக்கும்.

ஆடையாள கட்டுமானகேள்விகள் ஆய்விற்கான எண்ணற்ற சாத்தியக்கூறுகளை எழுப்புகின்றன. சமூகத்தில் குறைவாக ஆராயப்பட்ட பிரிவுகளின் அடையாளங்களை ஆய்வது நிச்சயமாக இந்த ஆய்வுமுயற்சியை விலைமதிக்க முடியாததாக்கும். அடையாளம் பற்றிய இந்த ஆய்வறிக்கை ஆய்வு முழுவதும் உள்ளடக்கிய ஒரு தொடர்ச்சியான கருப்பொருள், மேற்கத்திய மெய்ம்மையிய பால் புதுமை அடையாளத்தின் வகைகளுக்கும் உள்ளூர் புரிதல்கள் மற்றும் நடைமுறைகளுக்கும் இடையிலான பொருத்தமின்மை ஆகும். இந்த விலைமதிப்பில்லா பரப்பில் அதிகம் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பகுதிகளுள்ளன. எடுத்துக்காட்டு தம்மை தன்பாலீர்ப்பினராகவோ நச்சிகளாகவோ கருதாத ஆண்களுடன் புணரும் ஆண்கள்.

இலங்கையில் LGBTQI+ செயல்திறன் இன்னும் ஒப்பீட்டளவில் வளர்ந்து வருகிறது, மேலும் நிறுவனங்கள் மற்றும் செயல்பாட்டாளர்களின் ஆய்வுகள், பழையவை மற்றும் புதியவையுமான இரண்டுமே சிறந்த புரிதல்களை உருவாக்க உதவ முடியும். இந்த செயலூக்கம் ஒடுக்குமுறை செய்யும் அரசு மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக நெறிமுறைகள் மற்றும் மேற்கத்திய கருத்தியல் மற்றும் நிதி முன்னுதாரணங்களுக்கு இடையேய ஆபத்தான முறையில் வைக்கப்பட்டுள்ளது. LGBTQI+ நிறுவனங்கள் மாநில செயற்பாட்டாளர்கள், உள்நாட்டு அரசு சாரா செயற்பாட்டாளர்கள் மற்றும் சர்வதேச செயற்பாட்டாளர்கள் எவ்வாறான தொடர்பு நிகழ்கிறது, என்பதைப் பொறுத்தவரை இங்கே ஆராயப்பட வேண்டியது நிறைய உள்ளது. மனித உரிமைகளை மையமாகக் கொண்ட அணுகுமுறைகளுக்கு அப்பால் சென்று, அடிப்படை பொருளாதார இயங்கியல் அல்லது வரலாற்று மற்றும் சமகால (நவ)காலனித்துவ உறவுகளை வெளிக்கொணர முற்படல் இத்தகைய ஆய்வுகளுக்கு மிகவும் ஆழத்தை சேர்க்கும்.

LGBTQI+ பங்களிப்பு செய்யும் கலை இலக்கியம், திரைப்படம், நாடகம் அல்லது காட்சி மற்றும் செயல்திறன் கலை திட்டவட்டமான ஒருங்கிணைப்பு, விமர்சனம் மற்றும் பகுப்பாய்வு உத்தரவாதங்கள் ஆகியன இவ்வாய்வுகளில் உள்ளடங்கவில்லை. நிச்சயமாக இந்த வேலை சிறியதும் ஆனால் வளர்ந்து வருவதுமான LGBTQI+ கருப்பொருள்கள் மற்றும் கதாபாத்திரங்கள் பற்றி முதன்மையான கவனம் செலுத்தப்படுவதுடன் பரந்த கலாச்சார தயாரிப்புகளுக்குள்ளான LGBTQI+ பிரதிநிதித்துவங்களையும் ஆய்வு செய்ய வேண்டும். அதேபோல், இலங்கையின் வரலாற்று ஆராய்ச்சிக்குள் LGBTQI+ பற்றிக் கவனம் செலுத்தும் ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை காணப்படுகிறது. இலங்கையின் கடந்த காலத்திலிருந்த பால் புதுமை நபர்கள் மற்றும் பால் புதுமைக் கருப்பொருள்கள் பற்றி வெளிக்கொணரப்படவும், மதிப்பிடவும் மற்றும் பகுப்பாய்வு செய்யவும் அதிக இடைவெளி இருக்கிறது, அது பண்டைய, காலனித்துவ அல்லது நவீன வரலாறுகளிலிருந்தானதாக இருக்கலாம், அவை பெரும்பாலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன, ஆனால் அரிதாகவே ஆழமான முறையில் உறுதிப்படுத்தப்படுகின்றன. இத்தகைய ஆய்வுகள் நிச்சயமாக இலங்கையின் LGBTQI+ மக்கள் மிகவும் வலுவாக சமூக, கலாச்சார மற்றும் அரசியல் ரீதியாக தாங்களும் இலங்கையின் ஒரு பகுதி எனப் பார்க்கவும் வெளிப்படுத்தவும் உதவமுடியும்.

# References

All Survivors Project, *Sexual violence against men and boys in Sri Lanka and Bosnia & Herzegovina*, 2017.

Asia Pacific Forum of National Human Rights Institutions & UNDP, *Promoting and Protecting Human Rights in relation to Sexual Orientation, Gender Identity and Sex Characteristics: A Manual for National Human Rights Institutions,* 2016.

Bakamoono, *A review of recommendations made with regards to people of diverse sexual orientation and gender identity in Sri Lanka 2010-2017*, 2018 http://www.bakamoono.lk/admin/wp-content/uploads/2016/06/Review-of-recommendations.pdf

Bhattacharyya, Anee & Kerl Fernando, "Queer Activism and Identity of Sexual Minorities: A Situation Analysis of India and Sri Lanka", *Proceedings of 9th International Research Conference*, Ratmalana: Kotelawala Defence University (2016).

Bozicevic, I., & A. Manathunge A, Z. Dominkovic, S. Beneragama & K. Kriitmaa, "Estimating the population size of female sex workers and transgender women in Sri Lanka", *PLoS ONE* 15(1), (2020).

Brown, Kemone, *Mapping LGBT in Colombo, Kandy, Matara and Nuwara Eliya,* Equal Ground, Colombo: Equal Ground, 2017.

Chamara, Sumudu, 'LGBT people should vote for NPP to end discrimination – Waradas', *Ceylon Today*, November 12, 2019, https://ceylontoday.lk/news-more/8997; National People's Power, 'The Only Leader in History to Support LGBTQI+ rights is the NPP's Candidate – Thenu Ranketh', Samābhimāni Collective, November 12, 2019, https://www.facebook.com/nppsrilanka/posts/526635057917023

Chandimal, Damith, *Analysing the Culture of Transphobia: Situational Assessment on Stigma, Discrimination and Violence faced by Transgender Persons in Sri Lanka,* Colombo: Equal Ground, 2014.

Chandratilaka, M.A.N., & P. Mahanamahewa, "Sexual Orientation and Human Rights; Applicable Laws of Sri Lanka and UK", *Proceedings of 8th International Research Conference*, Ratmalana: Kotelawala Defence University (2015).

Coalition of NGOs for UPR - Sri Lanka (SOGI), *Joint Submission For 3rd Cycle UPR Review Of Sri Lanka*, 2017, https://ilga.org/downloads/stakeholders_report_SriLanka_UPR28.pdf.

*Colombo Telegraph*, 'JVP Vows To Fight For The Rights Of Oppressed LGBTIQ+ Community', July 9, 2019, https://www.colombotelegraph.com/index.php/jvp-vows-to-fight-for-the-rights-of-oppressed-lgbtiq-community/

Committee on Economic, Social and Cultural Rights, *List of issues in relation to the fifth periodic report of Sri Lanka - Replies of Sri Lanka to the list of issues*, E/C.12/LKA/Q/5/Add.1, 11 August 2017.

Committee on Elimination of All Forms of Discrimination against Women, *Concluding Observations*, CEDAW/C/LKA/CO/7, April 8, 2011.
--------, *Eighth periodic report of States parties due in 2015 - State Party's Report*, Sri Lanka, CEDAW/C/LKA/8, May 29, 2015.
--------, *Concluding observations on the seventh periodic report* of Sri Lanka, CEDAW/C/LKA/CO/8, 9 March 2017.

Committee on the Rights of the Child, *Concluding observations on the combined fifth and sixth periodic reports of Sri Lanka*, CRC/C/LKA/CO/5-6, February 2, 2018, https://tbinternet.ohchr.org/Treaties/CRC/Shared%20Documents/LKA/CRC_C_LKA_CO_5-6_30178_E.pdf

Companions on a Journey, *Knowledge, Attitude and Practice in the Gay Community, Gay Identified Men, and Men Who Have Sex with Men in Sri Lanka*, Colombo: Companions on a Journey, 2007, https://www.aidscontrol.gov.lk/images/pdfs/publications/research_documents/cojk_nowledge.pdf

Constitutional Assembly of Sri Lanka, Public Representations Committee on Constitutional Reform, *Report on Public Representations on Constitutional Reform*, May 10, 2016.
--------, *Report of Sub-Committee on Fundamental Rights,* November 2016.
--------, 'Documents Tabled At the Constitutional Assembly on 11 January 2019', https://english.constitutionalassembly.lk/media-centre/press-releases/152-documents-tabled-at-the-constitutional-assembly-on-11-january-2019
--------, 'The Process', http://english.constitutionalassembly.lk/index.php?option=com_sppagebuilder&view=page&id=13

Consultation Task Force on Reconciliation Mechanisms, *Final Report of the Consultation Task Force on Reconciliation Mechanisms*, Vol. 1, 17 Nov. 2016, available at http://war-victims-map.org/wp-content/uploads/2017/02/CTF-Final-Report-Volume-I-Nov-16.pdf.

Deshapriya, Paba, Michael Mendis, Shermal Wijewardena & Subha Wijesiriwardena, *Disrupting the Binary Code: Experiences of LGBT Sri Lankan's Online*, Colombo: Women and Media Collective, 2017.

Ellawala, Themal, "Mismatched Lovers: Exploring the Compatibility Between LGBTQ+ Identity Theories and Gender and Sexual Plurality in Sri Lanka", *Sexuality & Culture* 22 (2018).
--------, "Legitimating Violences: The 'Gay Rights' NGO and the Disciplining of the Sri Lankan Queer Figure", *Journal of South Asian Development* 14, no. 1 (2019).

Equal Ground, *Submission to the First UN Universal Periodic Review (Sri Lanka)*, Colombo, 2008.
--------, *Submission to the Second UN Universal Periodic Review (Sri Lanka)*, Colombo, 2012.

--------, *Towards a Lesbians, Gays, Bisexuals, Transsexuals and Transgendered (LGBT) Stigma and Discrimination Index for Sri Lanka,* Colombo: Equal Ground, 2012, https://equalgroundsrilanka.blog/wp-content/uploads/2017/12/The-LGBT-Stigma-and-Discrimination-Index-of-Sri-Lanka-A-project-of-EQUAL-GROUND.pdf
--------, *A submission to the United Nations Human Rights Council Universal Periodic Review of Sri Lanka,* March 2012, https://lib.ohchr.org/HRBodies/UPR/Documents/Session14/LK/JS2_UPR_LKA_S14_2012_JointSubmission2_E.pdf.
--------, the Center for International Human Rights of Northwestern University School of Law, & the Global Initiative for Sexuality and Human Rights (GISHR) of Heartland Alliance for Human Needs & Human Rights, *Human Rights Violations Against Lesbian, Gay, Bisexual, and Transgender (LGBT) People in Sri Lanka: A Shadow Report,* December 2013.
--------, the Center for International Human Rights of Northwestern University School of Law, & the Global Initiative for Sexuality and Human Rights (GISHR) of Heartland Alliance for Human Needs & Human Rights, *Human Rights Violations Against Lesbian, Gay, Bisexual and Transgender People in Sri Lanka: A Shadow Report*, August 2016.
--------, Report On the Rights of Children of Diverse Sexual Orientations and Gender Identities in Sri Lanka, February 2017.
--------, Kaleidoscope and Human Rights Foundation, Parallel Report to the UN Committee on the Elimination of Discrimination Against Women Regarding Sri Lanka's Protection of the Rights of LBTI Persons, 2017.

Fernando, Santhushya, Senel Wanniarachchi & Janaki Vidanapathiran, *Montage of Sexuality in Sri Lanka*, College of Community Physicians of Sri Lanka and the UN Population Fund, Colombo: College of Community Physicians of Sri Lanka, 2018.

Gonzalez, Joshua Arteta, *Repainting The Rainbow: A Postcolonial Analysis on the Politics of the LGBTQ Movement in Colombo, Sri Lanka*, Master's Thesis, Lund University, 2019.

Government of Sri Lanka, *National Action Plan for the Protection and Promotion of Human Rights 2017 – 2021*.

Groundviews, *A Meaningful Right to Equality and Non-Discrimination: Recognising Sexual and Gender Identities*, March 28, 2016, http://groundviews.org/2016/03/28/a-meaningful-right-to-equality-and-non-discrimination-recognising-sexual-and-gender-identities
--------. *Submission on LGBTIQ Persons and Transitional Justice Mechanisms*, August 25, 2016, http://groundviews.org/2016/08/25/submission-on-lgbtiq-persons-and-transitional-justice-mechanisms

Human Rights Commission of Sri Lanka, *Submission by HRCSL to the Third Universal Periodic Review of Sri Lanka*, Colombo, 2017.
--------, *Proposals for Constitutional Reform*, 2017, http://www.hrcsl.lk/wp-content/uploads/2020/01/Report_to_ESCR_Committee-2017-by-HRCSL.pdf

Human Rights Watch, *"All Five Fingers Are Not the Same" Discrimination on Grounds of Gender Identity and Sexual Orientation in Sri Lanka,* 2016, https://www.hrw.org/report/2016/08/15/all-five-fingers-are-not-same/discrimination-grounds-gender-identity-and-sexual

ILGA-Europe, Equal Ground, the International Gay and Lesbian Human Rights Commission and ARC International, *Joint Submission to the First UN Universal Periodic Review (Sri Lanka),* Brussels, 2008.

Institute for Participatory Interaction in Development, *Rapid Situation Assessment of Transgender Persons in Sri Lanka*, Colombo: NSACP/FPA, 2016, https://www.aidsdatahub.org/sites/default/files/publication/Sri_Lanka_Rapid_Situational_Assessment_of_TGs_2017.pdf

International Centre for Ethnic Studies (ICES), *A Survey of HIV/AIDS Awareness and Risky Sexual Behaviour in a Vulnerable Population in Sri Lanka*, Kandy: ICES, 2009.

International Crisis Group, *Sri Lanka's Transition to Nowhere*, Asia Report N°28, Brussels: ICG, 2017, https://d2071andvip0wj.cloudfront.net/286-sri-lanka-s-transition-to-nowhere.pdf, pp. 16-7.

International Gay and Lesbian Human Rights Commission, *Violence Against Lesbians, Bisexual Women and Transgender Persons in Sri Lanka*, October 2014, https://outrightinternational.org/sites/default/files/SriLanka1014WCover.pdf

Jinadasa, Kamani, "Protective Laws related to HIV, men who have sex with men and transgender people", Bangkok: UNDP/International Development Law Organization, 2011.

*Joint Civil Society Submission to the First Universal Periodic Review – Sri Lanka*, Colombo, 2008.

*Joint Civil Society Submission to the Second UN Universal Periodic Review (Sri Lanka)*, Colombo, 2012.

Kaleidoscope Human Rights Foundation, *Shadow Report to the UN Human Rights Committee regarding Sri Lanka's protection of the Rights of LGBTI Persons (Response to List of Issues),* September 2014, http://www.kaleidoscopeaustralia.com/wp-content/uploads/2014/09/Sri-Lanka-Report-Final.pdf

Kuru-Utumpala, Jayanthi, "Butching it up: an analysis of same-sex female masculinity in Sri Lanka", Culture, Health & Sexuality, 15:sup2.

Liyanage, D.M.& A.S. Adikaram, "Gays' Experiences of Harassments in Heteronormative Workplaces in Sri Lanka", Colombo: Faculty of Management and Finance, University of Colombo, 2017.

Mago, Ayesha, *Human Rights Commission of Sri Lanka: Report to the Regional National Human Rights Institutions Project on Inclusion, the Right to Health and Sexual Orientation and Gender Identity*, Bangkok: UNDP/International Development Law Organization, 2013.

Malalagama, A.S., "The shifting landscape of Gender Identity and the situation in Sri Lanka", Sri Lanka Journal of Sexual Health and HIV Medicine, Volume 3, (2017).

Miller, Jody, & Andrea Nichols, "Identity, sexuality and commercial sex among Sri Lankan nachchi", *Sexualities* 15, no. 5/6 (2012).

Ministry of Foreign Relations, 'The National Action Plan for the Protection and Promotion of Human Rights (2017-2021)', https://www.mfa.gov.lk/ta/6587-the-national-action-plan-for-the-protection-and-promotion-of-human-rights-2017-2021/

Ministry of Health, Gen*eral Circular No: 01-34/2016 on Issuing of Gender Recognition Certificate for Transgender Community*, 16 June 2016.

Miyuru Chandradasa, "Suicidal ideation in gay adolescents in the context of cultural stigma and criminalized homosexuality in Sri Lanka", *International Journal of Social Psychiatry* (2018).

National People's Power, *Hope For The Nation: Policy Manifesto*, 2019.

National STD/AIDS Control Programme (NSCAP), *Mapping Key Populations for HIV Prevention in Sri Lanka*, Colombo: NSCAP, 2010, https://www.aidscontrol.gov.lk/images/pdfs/publications/research_documents/hrd_mapping.pdf

--------, UNAIDS, Family Planning Association Sri Lanka et al, *People Living With HIV Stigma Index Sri Lanka,* Colombo: NSACP, 2010, https://www.aidsdatahub.org/sites/default/files/documents/UNAIDS,_Family_Planning_Association_Sri_Lanka_and_Partners_(2010)_People_Living_with_HIV_Stigma_Index_Sri_Lanka.pdf

--------, *National Size Estimation of Most at Risk Populations (MARPs) for HIV in Sri Lanka,* Colombo: NSCAP, 2013, https://www.aidscontrol.gov.lk/images/pdfs/publications/research_documents/national_size_estimation_2013.pdf

--------, *Report on the National Size Estimation of the Most at Risk Populations for HIV in Sri Lanka*, Colombo: NSCAP, 2018, https://www.aidscontrol.gov.lk/images/pdfs/publications/research_documents/Final-draft-report-Key-Population-Size-Estimation--2018July.pdf

--------, National HIV/STI Strategic Plan Sri Lanka 2018-2022, Colombo: NSACP, 2017.

Nichols, Andrea, "Dance ponnaya, dance! Police abuses against transgender sex workers in Sri Lanka", Feminist Criminology 5, no. 2 (2010): 195-222.

P. Ginige & A.S. Malalagama, "An update on transsexuality", *Sri Lanka Journal of Psychiatry* 9, no. 2 (2018): pp. 4-9.

--------, P.D.L.R. Wijesinghe & N. Gunawardena, "Transsexualism; A Sri Lankan experience: A descriptive study of epidemiological characteristics and management issues of transsexuals (TXLs) from a tertiary care clinic setting in Sri Lanka", *Sri Lanka Journal of Sexual Health and HIV Medicine*, Volume 4, (2018): pp. 18-23.

Panditaratne, Dinusha, "Decriminalizing Same Sex Relations In Asia: Socio-Cultural Factors Impeding Legal Reform", *American University International Law Review* 31, (2016): pp. 171-207.

Protecting Environment and Children Everywhere (PEaCE/ECPAT Sri Lanka) and ECPAT International, *Alternative Report*, February 28, 2017.

Pullat, Urmila, "Transgendered in Sri Lanka: Gender Identity and the Law in Sri Lanka and India", SSRN 2425503 (2012).

Rawstorne P., & H. Worth, *Sri Lanka Behavioural Surveillance Survey: First Round Survey Results 2006-2007*, Colombo: Ministry of Healthcare and Nutrition, 2007.

Registrar-General's Department, *Circular No 06/2016*, 28 June 2016.

Samaraweera, H.U.S., & B.G.I.M. Samarasinghe, "Sexuality as a Taboo: Social Discrimination Against LGT Identities and Sex Workers in Urban Sri Lanka", *Proceedings of 9th International Research Conference*, Ratmalana: Kotelawala Defence University (2016): pp. 50-54.

Sarma, N., & H. Billimoria, *Stigma, Discrimination and Key Affected Populations: Strengthening the Role of Media Advocacy in Sri Lanka through a Critical Analysis of News Media Coverage*. Bangkok: UNDP, 2013.

Sri Lanka Brief, 'Sri Lanka- National HR Action Plan 2016-2021: Inclusive nature and integrity of the process questioned', February 04, 2017, https://srilankabrief.org/2017/02/sri-lanka-national-hr-action-plan-2016-2021-inclusive-nature-and-integrity-of-the-process-questioned
-------- 'Sri Lanka: A Presidential Candidate's pledge to support LGBTQ+ rights', September 21, 2019, https://srilankabrief.org/2019/09/sri-lanka-a-presidential-candidates-pledge-to-support-lgbtq-rights/

*Sunday Observer,* "The battle against homophobia in Sri Lanka", September 22, 2018.

*Sunday Times*, "Talk at the Cafe Spectator", September 11, 2011, http://www.sundaytimes.lk/110911/Columns/cafe.html

Thangarajah, Priya, *Strengthening of Legal Protection for LGBT in Sri Lanka: Road to Decriminalization,* Colombo: Equal Ground, 2013.

Thiyagaraja, Waradas, 'JVP stands for non-discrimination of LGBTIQ persons', *Daily Mirror*, November 16, 2018, http://www.dailymirror.lk/158438/JVP-stands-for-non-discrimination-of-LGBTIQ-persons

United Nations Committee on Economic, Social and Cultural Rights, *Concluding observations on the fifth periodic report of Sri Lanka*, E/C.12/LKA/CO/5, 7 November 2016.
--------, *List of issues in relation to the fifth periodic report of Sri Lanka*, E/C.12/LKA/Q/5, 7 November 2016.

United Nations Human Rights Committee, *List of issues in relation to the fifth periodic report of Sri Lanka*, CCPR/C/LKA/Q/5, April 23, 2014.
--------, *Concluding observations on the fifth periodic report of Sri Lanka*, CCPR/C/LKA/CO/5, October 30, 2014.
--------, 'Sri Lanka: Periodic Report', State party's report, CCPR/C/LKA/6, February 22, 2019.

United Nations Human Rights Council, *Summary of stakeholders' submissions on Sri Lanka*, A/HRC/WG.6/28/LKA/3, August 8, 2017.
--------,*Report of the Working Group on the Universal Periodic Review - Sri Lanka,* A/HRC/37/17, December 29, 2017.

Vidanapathirana, J., B. Senanayake, N. Wijegoonewardene & M. Fernando, Stigma Assessment of People living with HIV in Sri Lanka, Colombo: NSACP, 2017, https://www.aidsdatahub.org/sites/default/files/publication/Sri_Lanka_Stigma_Assesment_of_PLHIV_2017.pdf

Vithanage, Athula, 'JVP in Sri Lanka 'totally' opposed to LGBT rights', Journalists for Democracy in Sri Lanka, December 21, 2015, www.jdslanka.org/index.php/news-features/politics-a-current-affairs/578-jvp-in-sri-lanka-totally-opposed-to-lgbt-rights

Wickramasinghe, Aritha, "Homosexuality and the Law", *Colombo Law College Review* (2017): pp. 115-124.

Wijayath, A.H. "Sexual Diversity and Gender Identity in Sri Lankan Perspective with Special Reference to Rights and Position Of Sexual Minorities in Criminal Justice System of Sri Lanka", *Proceedings of the 4th World Conference on Women's Studies*, Vol. 3, Issue 1, 2018, pp. 53-63

Wijewardene, Shermal, "But no one has explained to me who I am now …": "'Trans' Self-Perceptions in Sri Lanka" in Wieringa S.E., Blackwood E., Bhaiya A. (eds) *Women's Sexualities and Masculinities in a Globalizing Asia. Comparative Feminist Studies Series*, pp. 101-116, New York: Palgrave Macmillan, 2007.

Women and Media Collective, *Submissions Made to the Universal Periodic Report of Sri Lanka*, Colombo, 2008.
--------, *Sri Lanka Shadow Report to the Committee on the Elimination of All Forms of Discrimination Against Women* (CEDAW), Colombo, 2011.
--------, *Sri Lanka Shadow Report to the Committee on the Elimination of All Forms of Discrimination against Women (CEDAW),* Colombo, 2017.

Women's Support Group, *The Status of Lesbians, Bisexual, Women and Transgendered Persons in Sri Lanka: NGO Shadow Report to the, Committee on the Elimination of All Forms of Discrimination Against Women*, January 2011, http://www2.ohchr.org/english/bodies/cedaw/docs/ngos/WSG_SriLanka48.pdf
--------, *"Not Gonna Take It Lying Down" Experiences of Violence and Discrimination as Told by LBT Persons in Sri Lanka*, Colombo: WSG, 2014.

Women and Media Collective
Established 1984

மே 2021

வெளியிடுவோர்:
**பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு**
56/1, சரசவி ஒழுங்கை, காசல் வீதி, கொழும்பு 8, இலங்கை
மின்னஞ்சல்: wmcsrilanka@womenandmedia.org
இணையம்: womenandmedia.org
Facebook: https://www.facebook.com/womenandmediacollective
Twitter: https://twitter.com/womenandmedia